445

445

HISTORY OF INDIA

BOOK III

(TAMIL EDITION)

(Prepared in accordance with the latest syllabus)

OFFICE OF THE [illegible] OF BOOKS
21 DEC 1943
MADRAS

T. V. SWAMINATHAN, B.A., L.T.,
First Assistant, Little Flower High School, Kumbakonam.

WARDHA PUBLISHING HOUSE
TRIPLICANE :: MADRAS

As. 12/-

இந்து தேச சரித்திரம்

மூன்றும் புத்தகம்

954

T. V. சுவாமிநாதன், B.A., L.T.,
பிரதம உதவி ஆசிரியர்,
லிட்டில் ப்ளவர் ஹைஸ்கூல், கும்பகோணம்

வர்தா பதிப்புக் கழகம்
திருவல்லிக்கேணி :: மதருஸ்

V44

முதற் பதிப்பு – 1943

ALL RIGHTS RESERVED

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

445/1943/IV

முகவுரை

“இந்து தேச சரித்திரம்” என்ற இச்சரித்திர நூல் வரிசை, கல்வி இலாகா அதிகாரிகளால் வெளியிடப்பட்டுள்ள சரித்திர பாடத் திட்டத்தை அனுசரித்து முதல் மூன்று பாரங்களுக்காகவும், ஆறு, ஏழு, எட்டு வகுப்புக்களுக்காகவும் எழுதப்பட்டுள்ளது. அதில் இப்புத்தகம் மூன்றாம் பாரத்துக்கும், எட்டாம் வகுப்புக்கும் உரியது.

சரித்திர பாடத்தை மாணவர்கள் விரும்பிக் கற்க வேண்டும் என்பதையே நோக்கமாகக்கொண்டு, இப்புத்தகங்கள் எழுதப்பட்டுள்ளன. ஒரு தேச சரித்திரத்தில், அரச வமிசங்கள் தோன்றி அழிவதையும் போர்களையுமே முக்கியமானவையாகக் கருதக்கூடாது. மக்களின் வாழ்க்கையும் நாகரிகமும், அவர்களிடையே தோன்றும் இயக்கங்களும், கிளர்ச்சிகளுமே தேச சரித்திரத்தின் ஜீவநாடி என்று கூறலாம். இப்புத்தகங்களில் “மக்களின் சரித்திரம்” முக்கிய இடம் பெறுகிறது.

நம் நாட்டின் பழைய சரித்திரத்தை அறியப் பெரிதும் உதவியாயிருக்கும் பண்டைக்கால கட்டிடங்கள், ஆபரணங்கள், வேறு சாசனங்கள், ஆகியவற்றின் சித்திரங்களும், சாம்ராஜ்யங்களின் எல்லைகள், போர்க்களங்கள் முதலியவற்றை விளக்கும் சரித்திரப் படங்களும், சக்கரவர்த்திகள் முதலானோர் படங்களும், உரிய இடங்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

இப்புத்தகங்கள் மாணவர்களுக்குச் சரித்திரத்தில் உற்சாகம் உண்டாக்கி நன்மை பயக்கும் என நம்புகிறேன். இதன் குணத்தை உயர்த்துவதற்கான ஆலோசனைகள் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆசிரியன்

பொருளடக்கம்

எண்			பக்கம்
1.	வாரன் ஹேஸ்டிங்ஸ்	...	1
2.	லார்ட் காரன்வாலிஸ்	...	10
3.	ஸர் ஜான் ஷோர்	...	14
4.	லார்ட் வெல்லெஸ்லி	...	19
5.	லார்ட் மின்டோ	...	26
6.	லார்ட் ஹேஸ்டிங்ஸ்	...	30
7.	லார்ட் வில்லியம் பெண்டிங்க்	...	35
8.	ராஜா ராம்மோஹன்ராய்	...	41
9.	முதல் ஆப்கானிய யுத்தம்	...	47
10.	லார்ட் ஹார்டிஞ்சும், ஸீக்கிய யுத்தமும்	...	51
11.	லார்ட் டல்ஹௌஸி	...	55
12	லார்ட் கானிங்கும் சிப்பாய்க் கலகமும்	...	63
13.	விக்டோரியா மஹாராணியாரின் சாசனம்	...	67
14.	லார்ட் கானிங்கும் சீர்திருத்தங்களும்	...	72
15.	லார்ட் மேயோவும் பொருளாதாரச் சீர்திருத்தங்களும்	...	77
16.	இரண்டாவது மூன்றுவது ஆப்கானிய யுத்தங்கள்	...	80
17.	லார்ட் ரிப்பனும் ஸ்தல ஸ்தாபனங்களும்	...	86
18.	லார்ட் கர்ஸன்	...	91

எண்		பக்கம்
19.	எல்லைப்புற பாதுகாப்புக்கான கொள்கை	... 100
20.	மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள்	... 104
21.	இந்தியாவும் ஐரோப்பிய மகா யுத்தமும்	... 108
22.	மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்	... 114
23.	தேசீய இயக்கத்தின் வளர்ச்சி	... 125
24.	வட்டமேஜை மஹாநாடுகள்	... 134
25.	1935-ம் வருஷத்திய அரசியல் சட்டம்	... 141

இந்து தேச சரித்திரம்

மூன்றும் புத்தகம்

1. வாரன் ஹேஸ்டிங்ஸ்

வாரன் ஹேஸ்டிங்ஸ்

க்ளைவ் இந்தியாவை விட்டகன்றதும், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் அத்துமீறி நடந்து துன்பம் விளைத்தனர். கம்பெனியின் பொக்கிஷம் வரண்டு போயிற்று. குடிகள் வரிச் சுமையைத் தாங்க முடியாமல் கஷ்டப் பட்டனர். நியாய பரிபாலனமும் சீர்கேடாக இருந்தது. கி. பி. 1769, 1770-ம் வருஷங்களில் வங்காளத்தில் கொடிய பஞ்சம் உண்டாகி ஜனங்கள் ஆயிரக் கணக்கில் இறந்து விட்டனர். இத்துன்பங்களைப் போக்கி நாட்டில் அமைதியை உண்டாக்கவும், அப்போது ஆங்கிலேயர் மீது சண்டை தொடுத்த பகைவரை யடக்கவும் கம்பெனியார் கி. பி. 1772-ல் **வாரன் ஹேஸ்டிங்ஸ்** என்பவரை வங்காள கவர்னராக நியமித்தனர். அவர் கி. பி. 1750-ல் கம்

வாரன் ஹேஸ்டிங்ஸ்

பெனியில் ஒரு குமாஸ்தாவாக வேலையிலமர்ந்து தமது திறமையினாலும், நல்லொழுக்கத்தினாலும், விடா முயற்சியினாலும் படிப்படியாக உயர்ந்த உத்தியோகங்களில் நியமிக்கப் பெற்றார்.

வாரன்ஹேஸ்டிங்ஸ் வரிவசூல் செய்யவும், நியாயம் வழங்கவும் ஆங்கிலேயரை நியமித்தார். இவர்களுடைய தீர்ப்பை ஒப்புக்கொள்ளாதவர்கள் அப்பீல் செய்து கொள்வதற்காக அவர் கல்கத்தாவில் ஒரு கிரிமினல் அப்பீல் கோர்ட்டையும், ஒரு சிவில் அப்பீல் கோர்ட்டையும் அமைத்தார். இவற்றின் பயனாக நவாபு தமது அதிகாரம் முழுவதையும் இழந்தார். கம்பெனியாரே சகல அதிகாரமும் செலுத்தி வந்தனர்.

ஷா ஆலம் II, மஹாதஜீஸிந்தியா என்பவரோடு சேர்ந்துகொண்டு தாம் இழந்துவிட்ட அதிகாரத்தை மீண்டும் பெற முயன்றார். அதனால் ஹேஸ்டிங்ஸ், கம்பெனியார் அவருக்குக் கொடுத்துவந்த 26 லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளத்தை நிறுத்தி விட்டார். அன்றியும் அவர் கோராவையும் அலஹாபாத்தையும் கைப்பற்றி அயோத்தி நவாபுக்கு 50 லக்ஷம் ரூபாய்க்கு விற்று விட்டார். கி. பி. 1774-ல் வாரன்ஹேஸ்டிங்ஸ் ரோஹில்கண்டை வென்று அயோத்தி நவாப்புக்கு 40 லக்ஷம் ரூபாய்க்குக் கொடுத்துவிட்டார். எனினும் கம்பெனியின் பணவரட்சி நீங்கினபாடில்லை. கம்பெனியார் ஆங்கிலேய பார்லிமென்டைத் தங்களுக்கு ஒரு கோடி ரூபாய் கடன் கொடுக்கும்படி வேண்டினர்.

கம்பெனியின் பரிபாலனத்தில் பல ஒழுங்கீனங்கள் இருந்து வந்ததைக் குறித்துக் கேள்விப்பட்ட பார்லி

மென்ட் சபையார் ஓர் விசாரணைச் சபையை இந்தியா வுக்கனுப்பி கம்பெனியின் விவகாரங் களை விசாரித்துத் தங்களுக்குத் தெரி விக்கும்படி செய்தார்கள். இவர்கள் கம்பெனியின் பரிபாலனத்தில் பல குற்றங்கள் இருந்த தைக் கண்டறிந்து பார்லிமெண்டிற்குத் தெரிவிக்க வும், பார்லிமென்ட் சபையோர் கி. பி. 1773-ல் இந்திய அரசியல் சட்டமொன்றைப் பிறப்பித்தனர்.

ஒழுங்கு முறைச் சட்டம்

அச்சட்டம் பின்வருமாறு: "பார்லிமெண்டின் உத்தரவில்லாமல் கம்பெனியார் இந்தியாவில் சண்டை சமாதானங்கள் செய்யக்கூடாது. இங்கிலாந்திலுள்ள கம்பெனி அதிகாரிகள் இந்தியாவுக்கனுப்பும் உத்தரவு களை ஆங்கிலேய துரைத்தனத்தின் மேலதிகாரிகளுக்குக் காண்பிக்க வேண்டும். கம்பெனி செய்யும் சட்ட திட்டங்களைப் பார்லிமென்ட் ரத்து செய்துவிடலாம். கம்பெனியின் ஆணையிலடங்காத நீதிமன்றம் ஒன்று கல்கத்தாவில் அமைக்கப்பட்டு அதற்கு நீதிபதிகளை ஆங்கிலேய மன்னரே நியமிக்க வேண்டும். வங்காள கவர்னர் ஆங்கிலேயருடைய இந்திய நாடுகளுக்கெல் லாம் அதிகாரியான க்வனர்-ஜெனரல் ஆக்கப்பட வேண்டும். அவருக்கு உதவியாக நால்வர் அடங்கிய ஒரு மந்திராலோசனை சபை வேண்டும். துரைத்தன நடவடிக்கைகள் யாவும் அச்சபையின் அங்கத்தினருள் பெரும்பான்மையோரால் அங்கீகரிக்கப்படவேண்டும்." இந்த ஏற்பாடுகள் அடங்கிய சட்டமே **ஒழுங்கு முறைச் சட்டம்** (The Regulating Act) என வழங்கு வது. அது கி. பி. 1774-ல் இந்தியாவில் அமுலுக்கு வந்தது.

ஒழுங்குமுறைச் சட்டத்தையொட்டி வாரன் ஹேஸ்டிங்ஸ் முதல் கவர்னர் ஜெனரல் ஆனுர். அவருடைய மந்திராலோசனை சபையில் **பிரான்சிஸ்** என்ற ஒரு மெம்பர் இருந்தார். இவர் தம்முடன் இருவரைச் சேர்த்துக்கொண்டு சதா கவர்னர் ஜெனரலை எதிர்த்து வந்தார். அதனுல் வாரன் ஹேஸ்டிங்ஸ் தாம் விரும்பியவாறு யாதொன்றையும் செய்ய இயலவில்லை. புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட நீதிமன்றத்து நீதிபதிகளின் அதிகாரமும், கவர்னர் ஜெனரலின் அதிகாரமும் சரியாக வரையறுக்கப்படவில்லை. இதனுலும் அவர்களுக்குள் அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டன.

வாரன் ஹேஸ்டிங்ஸ் (கவர்னர் ஜெனரல்)

ஹேஸ்டிங்ஸ் பரிபாலனத்தில் மூன்று யுத்தங்கள் நிகழ்ந்தன. மூன்ருவது பானிப்பட்டுச் சண்டைக்குப் பிறகு பாலாஜி பாஜிராவ் என்ற மூன்ரும் பீஷ்வா இறந்துபோய்விட்டார் அவருக்குப் பின்பு பீஷ்வாவான **முதலாம் மாதவராவ்** கி. பி. 1772-ல் இறந்துபோனுர். அப்போது அவர் தம்பி **நாராயண ராவ்** பீஷ்வாவானுர். இவருக்குத் தக்க வயது வராததனுல் இவருடைய சிற்றப்பனுன ரகுனுத ராவ் ராஜ்ய பாரத்தை நடத்திவந்தார். பின்னர் நாராயண ராவ் கொலையுண்டதனுல் **ரகுனுத ராவ்** பீஷ்வாவானுர்.

முதல் மஹாராஷ்டிர யுத்தம்

நாராயண ராவ் இறந்துபோன சில நாட்களுக்கெல்லாம் அவருடைய மனைவி ஒரு ஆண் குழந்தையைப் பெற்ருள். அக்குழந்தையே **இரண்டாம் மாதவராவ்.** இச்சிறு குழந்தைக்கே பீஷ்வாவாக உரிமை உண்டு என்று கூறிச் சிலர் ரகுனுத ராவை எதிர்க்க முற்பட்ட

னர். அக்குழந்தையின் கக்ஷியில் முதன்மை பெற்றிருந்தவர் **நானுபட்னவிஸ்** என்பவர். ஆங்கிலேயர் இந்தச் சண்டையில் தலையிட்டுக் கொண்டனர். அதில் அவர்களுக்குத் தோல்வியும், வெற்றியும் உண்டாயின. கடைசியில் கி. பி. 1782-ல் அவர்கள் **ஸால்பையில்** மஹாராஷ்டிரரோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டனர். அதனுல் ஆங்கிலேயருக்கு **ஸால்ஸெட்** கிடைத்தது. மஹாராஷ்டிரர்கள் வேறு எந்த ஐரோப்பியரோடும் நட்புப் பாராட்டுவதில்லை என்றும், தங்கள் நாட்டில் ஆங்கிலேயரும், போர்ச்சுகீசியரும் வியாபாரம் செய்யலாம் என்றும் ஒப்புக்கொண்டனர். அதனோடு **முதல் மஹாராஷ்டிர யுத்தம்** முடிந்தது.

நானு பட்னவிஸ்

24 DEC 1943 MADRAS

முதல் மைசூர் யுத்தம்

விஜயநகர ராஜ்யம் அழிந்துவிட்டபொழுது மைசூர் ஒரு தனி ராஜ்யமாகி **உடையார்** வமிசத்தரசர்களால் ஆளப்பட்டு வந்தது. கி.பி. 18-ம் நூற்றுண்டின் இடையில் அவ்வமிசம் பலங்குன்றியது. அப்போது மைசூர் சேனைக்கு **ஹைதர் அலி** என்ற முஸ்லிம் தளகர்த்தராக இருந்தார். தம்முடைய சாமர்த்தியத்தினுல் இவர் அரசுரிமையைப் பெற்றுக் கி. பி. 1761-ல்

மைசூர் சுல்தானுனர். இவர் தமது பெருமையையும் ராஜ்யத்தையும் பெருக்கிக்கொள்ள முயன்றதைக் கண்டு ஆங்கிலேயர் அஞ்சினர். அவர்கள் நிஜாமையும், மஹாராஷ்டிரரையும் துணை சேர்த்துக் கொண்டு ஹைதரை எதிர்க்க ஏற்பாடுகள் செய்தனர். ஹைதர், உபாயத்தினுல் அவர்களை வேறு பிரித்து விட்டு ஆங்கிலேயரோடு சண்டை செய்தார். ஆயினும் அவர் **செங்கமாவிலும், திருவண்ணுமலையி**லும் தோல்வி அடைந்தார். பின்னர்க் கி. பி.

ஹைதர் அலி

1769-ல் ஹைதர் ஒரு பெரிய சேனையைக்கொண்டு திடீரெனச் சென்னையை எதிர்த்து வந்தார். அவருடன் சண்டை செய்ய முடியாமல், ஆங்கிலேயர் சமாதானம் செய்துகொண்டனர். அதன்படி அவர்கள் இனி வரும் சண்டைகளில் ஒருவருக்கொருவர் உதவி செய்வதாக எற்பாடு செய்து கொண்டனர். இவ்வாருக, **முதல் மைசூர் யுத்தம்** முடிந்தது.

ஒரு சமயம் மஹாராஷ்டிரர் ஹைதரோடு சண்டைக்கு வந்தபோது, சுல்தான் ஆங்கிலேயருடைய உதவியை வேண்டினுர். ஆங்கிலேயர் உதவ மறுத்தனர். அதனுல் அவர்கள் மீது கோபங்கொண்ட

ஹைதர், ஆங்கிலேயர் பிரெஞ்சு மாஹியை எதிர்ப்பதற்குத் தம் நாட்டின் வழியாகச் செல்லக்கூடாது எனத் தடுத்தார். உடனே ஹைதருக்கும் ஆங்கிலேயருக்கும் சண்டை மூண்டது. அதுவே **இரண்டாவது மைசூர் யுத்தம்** எனப்படுவது. நான்கு வருஷங்கள் வரை

இரண்டாவது மைசூர் யுத்தம்

அவர்கள் ஒருவரையொருவர் எதிர்த்துப் பல சண்டைகள் செய்தனர். **போளூர், வந்தவாசி, பறங்கிப் பேட்டை, சோளிங்கபுரம்** என்ற இடங்களில் நடந்த சண்டைகளில் ஹைதர் தோல்வியுற்றார். ஆயினும், அவர் மனத்தளர்ச்சியடையாமல் சண்டை செய்துவந்து கி. பி. 1782-ல் இறந்துபோனார். அவருக்குப் பிறகு அவர்

திப்பு சுல்தான்

மைந்தர் **திப்பு** தம் தந்தையின் தொழிலைத் தாம் ஏற்று ஆங்கிலேயருடன் சண்டையிட்டு வந்தார். கடைசியில் கி. பி. 1784-ல் அவர் **மங்களூரி**ல் ஆங்கிலேயர்களோடு சமாதானம் செய்துகொண்டார். அதையொட்டி அவர்கள் தாங்கள் வென்ற நாடுகளையும், சிறைப்படுத்திய கைதிகளையும் திருப்பிக்கொடுத்து விட்டனர். இப்படியாக **இரண்டாவது மைசூர் யுத்தம்** முடிவடைந்தது.

இந்த யுத்தங்களினுல் கம்பெனிக்கு மிகுந்த பண வரட்சி யுண்டாயிற்று. அதைப் போக்கக் கருதி ஹேஸ் டிங்ஸ் சில ஒழுங்கற்ற முறைகளைக் கையாண்டார். அதனுல் அவர் புகழ் குறைவுபட்டது. அவர் காசியரசரான **செயிட் ஸிங்க்** என்பவரைப் பணம் கேட்கவும், அவ் வரசர் இருமுறை ஐந்து லக்ஷம் ரூபாய் கொடுத்து உதவினுர். மூன்ருவது முறை அவர் தம்மிடம் பணம் இல்லை என்ருர். ஹேஸ்டிங்ஸ் நேரில் காசிக்குச்சென்று அவரைச் சிம்மாசனத்தினின்றும் நீக்கிவிட்டு வேருெரு வரை அரசராக்கி அந்தப் புது அரசரிடமிருந்து ஏராள மான பணத்தைப் பெற்றுக்கொண்டார். மேலும் அவர் அயோத்தி நவாப்பின் துர்ப்போதனைக் கிணங்கி அவருடைய தாய்க்கும், பாட்டிக்கும் சொந்தமான 76 லக்ஷம் ரூபாயைக் கவர்ந்துகொண்டார்.

செயிட் ஸிங்க்

'**ரெகுலேடிங் ஆக்ட்**' என்ற சட்டத்தின் பல குறைகளைக் கண்ட பார்லிமென்டார் அவற்றைப் போக்கவும், இந்திய பரிபாலனத்தை ஒழுங்குபடுத்தவும் கருதிக் கி. பி. 1784-ல் **பிட்டின் இந்திய சட்ட**த்தை அங்கீ கரிக்கவும் அது இந்தியாவில் அமுலுக்கு வந்தது. **பிட்** என்ற ஆங்கிலேய முதன் மந்திரியினுல் அச்சட்டம் இயற்றப்பட்டபடியால் அதற்கு அப்பெயர் வந்தது. அதன்படி "ஆறு நபர் கொண்ட **போர்ட் அவ் கன்ட்ரோல்** என்ற சபை தோன்றி கம்பெனி யின் எல்லா விவகாரங்களையும் மேற்பார்வையிட்டது. மந்திராலோசனை சபையின் மெம்பர்கள் மூவரேயாயி னர். இவர்களுள் சேனுதிபதி யொருவர். கல்கத்தா

பிட் இந்திய சட்டம்

வில் உண்டான உயர்நீதி மன்றத்திலிருந்து பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்துகொள்ளும் உரிமை தரப்பட்டது. அச்சபையின் உத்தரவின்றிக் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் சண்டையிடவாவது சமாதானம் செய்து கொள்ளவாவது கூடாது".

கி. பி. 1785-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் தமது வேலையை ராஜீநாமா செய்துவிட்டு இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே சிலர் அவர்மீது குற்றஞ்சாட்டி அவரை விசாரணைக்குக் கொண்டு வந்தனர். விசாரணை ஏழு வருஷங்கள் நடந்தபின் அவர் குற்றவாளி அல்லர் எனத் தீர்ப்புச் செய்யப்பட்டது. அவர் உபகாரச் சம்பளம் பெற்றுச் சுகமாக வாழ்ந்திருந்து கி. பி. 1818-ல் இறந்துபோனார்.

அவருடைய பரிபாலனத்தில் இந்நாட்டு விவசாயமும், வாணிபமும், கைத்தொழில்களும் பெரிதும் குன்றிவிட்டன. குடிகள் வரிச்சுமையைத் தாங்க முடியாமல் வருந்தினர். நாட்டில் பஞ்சம் உண்டாகி லக்ஷக் கணக்கான ஜனங்கள் இறந்து போனார்கள்.

பயிற்சிகள்

1. வாரன் ஹேஸ்டிங்ஸ் யார்? அவரை வங்காள கவர்னராக நியமித்தது ஏன்?

2. 'ரெகுலேடிங் ஆக்ட்' எப்போது, எவ்வாறு பிறப்பிக்கப்பட்டது? அதன் நிபந்தனைகள் யாவை? அச்சட்டத்தின் குறைகள் என்ன?

3. அக்குறைகளைப் பிட்டின் இந்தியச் சட்டம் எவ்வாறு போக்கியது? இதன் நிபந்தனைகள் யாவை?

4. ஹேஸ்டிங்ஸ் பணம் சம்பாதிக்கக் கருதிக் கையாண்ட முறைகள் யாவை? அவை நியாயமாகுமா? காரணம் கூறுக.

5. முதல் மஹாராஷ்டிர யுத்தம் எப்போது, எவ்வாறு நிகழ்ந்தது? அதில் ஆங்கிலேயர் தலையிட்டுக் கொண்டதின் பயன் என்ன?

6. முதல் மைசூர் யுத்தத்தின் நிகழ்ச்சிகளையும், முடிவையும் விரிவாகக் கூறுக.

7. இரண்டாவது மைசூர் யுத்தம் மூளுவானேன்? அது எங்ஙனம் முடிந்தது? எப்போது?

2. லார்ட் காரன்வாலிஸ்

காரன்வாலிஸ் பிரபு

வாரன் ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு **லார்ட் காரன் வாலிஸ்** (கி. பி. 1786—1793) என்ற ஐரிஷ் பிரபு பார்லிமெண்டாரால் வங்காளக் கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டார். அதுவரை மந்திராலோசனை சபையின் மெம்பரான மெக்பர்ஸன் கவர்னர் ஜெனரலாக வேலை பார்த்தார். இவர் உத்தியோகஸ்தர்களுடைய சம்பளங்களைக் குறைத்துச் செலவை மட்டுப் படுத்தினர்.

காரன்வாலிஸ் ஒழுக்கத்தில் சிறந்தவர். சேனையை நடத்துவதிலும் துரைத்தனத்தைப் பரிபாலிப்பதிலும் அவர் திறமையுடையவர். அவர் சிறிதும் சுயநலம் பாராட்டாமல் பொது நன்மையை நாடி உழைக்கும் இயல்பினர். அவர் தமது மந்திராலோசனை சபையின் பெரும்பாலோருடைய அபிப்பிராயத்தை மீறி நடக்க

அதிகாரம் பெற்றார். அவர் ஆங்கிலேய போர்ப் படைகளின் சேனாதிபதியும் ஆனார்.

சாசுவத நில வரித் திட்டம்

காரன்வாலிஸ் தமது பெயர் என்றும் அழியாதபடி ஒரு நற்காரியம் செய்துள்ளார். அவர் வங்காளத்திலும், பீஹாரிலும், ஒரிஸ்ஸாவிலும் நிலவரியை நிலைவரமாக்கினார். அதையே ஆங்கிலத்தில் **பர்மனெண்ட் ரெவின்யூ ஸெட்டில்மென்ட்** (Permanent Revenue Settlement) என்கின்றனர். இந்தியர்களுள் கொஞ்சம் குறைய முக்கால் பங்கினர் விவசாயிகள். இவர்கள் பெரும்பாலும் ஏழைகள். துரைத்தனத்தார் வசூலிக்கும் வரிகள் அனைத்தினும் நிலவரிதான் அதிகமானது. தங்கள் வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளக் கருதித் துரைத்தனத்தார் நிலவரியை அப்போதைக்கப்போது உயர்த்திக் கொண்டே வந்தனர். அதனால் விவசாயிகள்

காரன்வாலிஸ் பிரபு

துன்பப்பட்டனர். அதைப் போக்கக் கருதியே காரன்வாலிஸ் என்றும் மாறாததான **சாசுவத நிலவரி ஏற்பாட்டை** அமைத்து உதவினார். சென்னை, பம்பாய் முதலிய மாகாணங்களில் நிலவரி இருபது முதல் முப்பது வருஷங்களுக்கு ஒரு முறை மாறுகிறது. ஒவ்

வொரு முறையிலும் குடிகளின் வரிச்சுமை பெருகிக் கொண்டே வருகின்றது. அதனால் விவசாயிகள் வருந்துகின்றனர்.

நிலைவரமான நிலவரி ஏற்பாடு சிறந்ததன்று, மாறி மாறி வருவதுதான் நியாயமானது எனக் கூறும் அறிஞர்களும் உளர். இவ்விரண்டின் இழிவு சிறப்பைப் பற்றின விவரங்களை நீங்கள் மேல் வகுப்புக்களில் தெரிந்து கொள்ளலாம். நம் நாட்டுச் செல்வாதார நிபுணர்கள் பலரும் நிலைவரமான ஏற்பாட்டையே மெச்சிக் கூறியுள்ளார்கள். விவசாயிகளின் வறுமைக்கும், பஞ்சங்கள் உண்டாகும்போது ஜனங்கள் பிழைக்கும் வழியின்றி மடிவதற்கும் நிலைவரமான நிலவரி ஏற்பாடு இல்லாமைதான் முதற்காரணமென இவர்கள் சாதிக்கின்றனர்.

பிற நிர்வாக சீர்திருத்தங்கள்

காரன்வாலிஸ் நியாய விசாரணைகள்செய்ய ஜில்லா ஜட்ஜுகளையும், வரி வசூலிக்க ஜில்லா கலெக்டர்களையும் நியமித்தார். இவ்விரு உத்தியோகங்களுக்கும் ஆங்கிலேயரே நியமிக்கப்பட்டனர். அவர் பரிபாலனத்தில் கம்பெனியாரின் சாசனம் காலஞ் சென்றுவிட்டதனால் இன்னும் இருபது வருஷங்கள் வரை செல்லுமாறு அது 1793-ல் உறுதிசெய்து கொடுக்கப்பட்டது.

மூன்றுவது மைசூர் யுத்தம்

சுதேச அரசர்களோடு எவ்வகை விவகாரமும் கூடாது எனக் கவர்னர் ஜெனரல் உறுதி கொண்டிருந்தபோதிலும், அவருக்குத் திப்புசுல்தானுடன் யுத்தம் ஏற்பட்டது. அதுவே **மூன்றுவது மைசூர் யுத்தம்.** திப்பு தமது ராஜ்யத்தைப் பெருக்கக் கருதியும்,

தமது நாட்டிலிருந்து ஓடிச் சென்றவர்களுக்குத் திருவாங்கூர் அரசர் அபயம் அளித்ததற்காக அவரைத் தண்டிக்க விரும்பியும் திருவாங்கூரின்மீது படையெடுத்துச் சென்ருர். அந்நாட்டரசர் ஆங்கிலேயரின் நண்பர். அதனுல் அவர்கள் நிஜாமையும், மஹாராஷ்டிரரையும் துணையாகக்கொண்டு திப்புவின் கோட்டைகள் சிலவற்றைப் பிடித்துக் கொண்டனர். பின்னர் அவர்கள் **ஸ்ரீரங்கபட்டண**த்தை முற்றுகை செய்தபோது, திப்பு மிக்க ஆண்மையுடன் சண்டை செய்து தோற்றுப்போனுர். அதனுல் அவர் கி. பி. 1792-ல் ஆங்கிலேயர்களோடு ஸ்ரீரங்கபட்டணத்தில் ஒரு சமாதான உடன்படிக்கை செய்து கொண்டார். அவர் தமது பகைவர்களுக்குத் தம் ராஜ்யத்தில் பாதியையும், யுத்தச் செலவுக்காக மூன்று கோடி ரூபாயையும் கொடுக்க உடன்பட்டார். அவ்வாறு தாம் செய்து முடிக்கும்வரை அவர் தமது இரண்டு பிள்ளைகளைக் கவர்னர் ஜெனரலிடம் ஜாமீனுக விட்டிருந்தார். இச் சமாதானத்தோடு அந்த யுத்தம் முடிந்தது.

திப்புவினிடமிருந்து கிடைத்த நாட்டைப் பங்கிட்டுக் கொண்டதில் ஆங்கிலேயருக்குச் **சேலம், மலையாளம், மதுரை** ஜில்லாக்களும், மஹாராஷ்டிரருக்கு வரதா நதிக்கும் கிருஷ்ணு நதிக்கும் இடையிலுள்ள நாடும், நிஜாமுக்குக் **கடப்பை, கர்நூல், குத்தி** ஜில்லாக்களும் கிடைத்தன.

பயிற்சிகள்

1. காரன்வாலிஸ் பெற்ற விசேஷ அதிகாரம் யாது?
2. நிலைவரமான நிலவரி ஏற்பாட்டை அவர் எங்கெங்கே செய்வித்தார்? அதனுல் விவசாயிகள் பெற்ற நன்மை என்ன?

3. மூன்ருவது மைசூர் யுத்தம் உண்டாவானேன்? அது எவ்வாறு முடிந்தது? எப்பொழுது?

4. ஸ்ரீரங்கபட்டணத்து உடன்படிக்கையினுல் யார் யாருக்கு என்னென்ன லாபங்கள் கிடைத்தன?

3. ஸர் ஜான் ஷோர்

தலையிடாக் கொள்கை

கவர்னர் ஜெனரலது மந்திராலோசனை சபையின் மெம்பர்களுள் **ஸர் ஜான் ஷோர்** (கி. பி. 1793—1798) என்பவர் ஒருவர். இவர் நிலைவரமான நிலவரித் தீர்மானத்தைச் செய்வதில் காரன்வாலிஸுக்கு உதவினுர். தமக்குப் பின்பு ஸர் ஜான் ஷோர் கவர்னர் ஜெனரல் ஆகவேண்டு மென்பது காரன்வாலிஸின் விருப்பம். அவர் விரும்பியவாறே ஷோர் அப்பதவியைப் பெற்று ஐந்து வருஷ காலம் துரைத்தனத்தை நடத்தினுர். இவரும் காரன்வாலிஸைப் போன்று சுதேச அரசர்களுடைய விவகாரங்களில் தலையிடாக் கொள்கையைக் கொண்டொழுக விரும்பினுர். ஆனுல் இவர் தமது நோக்கப்படி செய்ய இயலாமற் போயிற்று.

ஸர் ஜான் ஷோரின் பரிபாலனத்தின்போது மஹாராஷ்டிரர் மிகுந்த வன்மையை அடைந்திருந்தனர். நிஜாம் தங்களுக்கு வரி செலுத்த வில்லை என்று அவர்கள் கி. பி. 1795-ல் நிஜாமின்மீது சண்டை தொடுத்தனர். அஹமது நகரத்திலுள்ள **கர்தா**வில் நிஜாம் பெரும் தோல்வி யடைந்தார். அதன் பயனுக அவர் தமது நாட்டின் ஒரு பகுதியையும், சண்டையின் செலவுக்காக மூன்று கோடி ரூபாயையும் மஹாராஷ்டிரருக்குக் கொடுக்க வேண்டி வந்தது. நிஜாம்


ஆப்கானியர்
பெஷாவர்
பானிப்பட்
டில்லி
ஆக்ரா
ஜோதிபுரம்
ஸல்பாய
மஹாராஷ்டிர சாம்ராஜ்யம்
அலஹாபாத்
பக்ஸார்
பாட்னா
மூர்ஷிதாபாத்
இந்தூர்
ஆமதாபாத்
பரோடா
போபால்
பளாஸி
கல்கத்தா
ஜூனகர்
பரோச்
ஆசிர்கார்
நாகபுரி
ஸோமநாதபுரம்
சூரத்
ஔரங்கபாத்
கட்டாக்
பாஸீன்
பம்பாய்
பூனா
பான்கோட்
பீடார்
புரந்தர்
பீஜப்பூர்
கோவா
வங்காளக் குடாக்கடல்
மைசூர்
சிம்மளம்
மைல்கள்
0 100 200 300
இந்துமகாசமுத்திரம்

1795-ல் இந்தியா

மீது வெற்றி பெற்ற மஹாராஷ்டிரருடைய வன்மை பெருகி அவர்கள் அதிகாரமும் பலப்பட்டது. இச் சண்டையில் தமது வேண்டுகோளுக்கு இணங்கி ஆங்கிலேயர் தமக்குத் துணை வரவில்லை என்று நிஜாம் ஆங்கிலேயர்மீது கோபங்கொண்டார். தலையிடாக்கொள்கையைக் கொண்டொழுக விரும்பிய ஸர் ஜான் ஷோர் நிஜாமுக்குத் துணை வருவது எங்ஙனம் முடியும்?

ஆயினும் ஷோர் அயோத்தி நவாப்பின் விவகாரத்தில் தலையிட்டு தமது கொள்கையைக் கைவிட வேண்டியதாயிற்று. அயோத்தி நாட்டு நவாப்பான **அஸபுத்தௌலா** இறந்துபோனார். பட்டத்துக்கு உரிமையில்லாத ஒருவரை ஸர் ஜான் ஷோர் அந்நாட்டு நவாப்பாக அங்கீகரித்தார். பின்னர் **ஸாதத் அலி** என்பவர்தான் சரியான உரிமை யுள்ளவர் என்றறிந்த கவர்னர் ஜெனரல் ஸாதத் அலியை நவப்பாக அங்கீகரித்து அவரிடமிருந்து அலஹாபாத் கோட்டையையும், முன்னிலும் அதிகமான கப்பப் பணத்தையும் பெற்றுக் கொண்டார்.

அஹல்யாபாய்

ஸர்ஜான்ஷோர் காலத்தில் **இந்தூர்** நாட்டை **அஹல்யாபாய்** என்ற பெண்ணரசி ஆட்சி செய்து வந்தார். அவ்வம்மையார் மல்ஹார் ராவ் ஹோல்காரின் மருமகள்; கண்டிராவின் மனைவி. கண்டிராவ் பில்ஸ் ஜாதியாரால் கொல்லப்பட்டு இறந்துபோனார். அப்போது இவர்களது மைந்தரான மலிராவ் அரசரானார். சிறிது காலத்திற்குள் மலிராவ் இறந்துபோனார். இவருக்குப் பிள்ளை இல்லை. ஆதலால் அஹல்யாபாய் அரசியாகி ராஜ்ய பரிபாலனஞ் செய்தார்.

அரசியார் நாட்டைப் பரிபாலனஞ் செய்வதில் மிக்கத் திறமுடையவர். அவர் தைரியமும் வீரமும் பொருந்தியவர். தக்க உத்தியோகஸ்தர்களைத் தேர்ந் தெடுப்பதிலும், அவர்களையடக்கி ஆளுவதிலும் ராணி யார் மிகுந்த சாமர்த்தியமுடையவரா யிருந்தார். லஞ்சம் வாங்கிக் குடிகளைத் துன்புறுத்திய உத்தி யோகஸ்தர்களை அவர் வேலையினின்றும் தள்ளி விட்டார்.

தள்ளுண்டவர்களிற் சிலர் ஒன்று சேர்ந்து கலகம் செய்தனர். இவர்கள் பெண் ஆட்சி கூடாதென்றும் ராணியார் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள வேண்டு மென்றும் கூறினர். ராணியாரின் அரண்மனைப் புரோகிதர் இவர்களுக்குத் தலைவரானார். இவர்களை ராணியார் சிறையிலிட்டு விட்டார். தம்மால் யாதொன் றும் செய்ய இயலாததை அறிந்த புரோகிதர் ராணி யைச் சரண மடைந்தார். அரசியார் அவரை மன்னித்து நாடு கடத்தி விட்டார்.

நாட்டை விட்டகன்ற புரோகிதர் தம்மை எதிர்த்துச் சண்டை செய்வதற்கான ஏற்பாட்டைச் செய்யக் கூடும் என்றெண்ணிய ராணியார் யுத்தத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து துகாஜி ஹோல்கார் என்ற ஒப்பற்ற போர் வீரரைத் தமது சேனைத் தலைவ ராக நியமித்தார். அஹல்யாபாய் எண்ணிய படியே புரோகிதர் ராஜ புத்திரரை இந்தூரின்மீது படை யெடுத்து வரும்படி தூண்டினர். ராஜ புத்திர சேனை தம்மை எதிர்த்து வருவதையறிந்த ராணியார் ஒரு போர்ப் படையை அனுப்பி விட்டுத் தாமும் பின்

4. லார்ட் வெல்லெஸ்லி

மார்க்விஸ் அவ் வெல்லெஸ்லி என்பவர் கவர்னர் ஜெனரலாக நியமனம் பெற்றுக் கி. பி. 1798-ல் இந்தியாவுக்கு வந்தார். அப்பொழுது, நிஜாமின் சமஸ்தானத்திலும், மஹாராஷ்டிரரிடத்திலும், திப்பு சுல்தானிடத்திலும் பிரெஞ்சுக்காரரின் செல்வாக்குப் பெருகியிருந்தது. அன்றியும், திப்பு **நெப்போலியன்** என்ற பிரெஞ்சு சக்கரவர்த்தியை ஆங்கிலேயருக்கு விரோதமாகத் தமக்கு உதவி செய்யும்படியும் தூண்டினார். அதனால் வெல்லெஸ்லி இந்திய சிற்றரசர்களை ஆங்கிலேய அதிகாரத்திற்குள் அடக்கி அவர்கள் தங்களுக்குள்ளும் மற்றைய ஐரோப்பியரோடும் எவ்வகைப் பற்றுதலும் வைத்துக் கொள்ளாதபடி செய்ய வேண்டுமென முற்பட்டார்.

வெல்லெஸ்லி பிரபு

நான்காவது மைசூர் யுத்தம்

முதலாவதாக, அவர் திப்புவை அடக்கக் கருதி அவரோடு சண்டை செய்யத் தயாரானார். அதுவே **நான்காவது மைசூர் யுத்தம்.** கவர்னர் ஜெனரலின் சகோதரரான **வெல்லிங்டன் பிரபு** (The Duke of

சென்ருர். ராணியார் போவதற்கு முன்னமேயே ராஜ புத்திரர்கள் தோற்று ஓடிவிட்டனர்.

அரசியலிலும் ராணியார் திறம் வாய்ந்திருந்தார். அவர் ஆட்சியில் நாடு செழிப்புற்று அமைதியாக இருந்தது. அவர் கொள்ளைக்காரர்களைத் தலையெடுக்க வொட்டாமல் அடக்கினர். அவருடைய நீதிபதிகள் நடுநிலையான நியாயம் வழங்கினர். அவர்களுடைய தீர்ப்பில் திருப்தி கொள்ளாதவர்கள் அரசியாருக்கு அப்பீல் செய்துகொண்டனர்.

அஹல்யாபாய் நாட்டின் பலவிடங்களில் கோயில்கள் கட்டியும், குளங்கள் வெட்டியும், தரும சாலைகள் அமைத்தும் உதவினர். அவர் ஆடம்பரத்தை நீத்துப் பணிவாக வாழ்ந்திருந்தார். கி. பி. 1795-ல் அவ்வரசியார் காலஞ் சென்ருர்.

பயிற்சிகள்

1. கர்தா சண்டை யார் யாருக்கு எப்பொழுது, ஏன் நடந்தது? அதன் விளைவு என்ன?

2. நிஜாமுக்கு ஆங்கிலேயரிடம் கோபம் உண்டானது ஏன்?

3. ஸர் ஜான் ஷோர் கையாளக் கருதிய கொள்கை யாது? அதை அவர் எப்போது, எங்ஙனம் மீறி நடந்தார்? அதன் விளைவு என்ன?

4. அஹல்யாபாய் யார்? அவர் அரசியானது எவ்வாறு? அவருடைய ஆட்சியின் நேர்மையை விவரித்து எழுதுக.

Wellington) திப்புவை **மாளவல்லி** என்ற விடத்தில் சண்டை யிட்டுத் தோற்கடித்தார். பின்னர் ஹாரிஸ் என்ற தளகர்த்தர் ஸ்ரீரங்கபட்டணத்தை முற்றுகை யிட்டுப் பிடித்துக் கொண்டார். திப்பு மிக்க பராக்கிரமத்தோடு சண்டையிட்டு உயிர் துறந்தார். வெல்லெஸ்லி மைசூர் ராஜ்யத்தைக் கைப்பற்றி அதை நிஜாமுடன் பங்கிட்டுக் கொண்டார். அதில் ஆங்கிலேயருக்கு **கோயமுத்தூர், கன்னடம், வைனாடு** ஜில்லாக்களும் நிஜாமுக்கு பல்லாரி, அனந்தப்பூர் ஜில்லாக்களும் கிடைத்தன. இவை யொழிந்த மைசூர் ராஜ்யத்தின் பகுதிக்குக் கவர்னர் ஜெனரல் பழைய மைசூர் இந்து உடையார் அரச வமிசத்தைச் சேர்ந்த **கிருஷ்ண ராஜ உடையாரை** அரசராக்கினார். இப்போது மைசூரை ஆளும் அரசர் அவருடைய வமிசத்தில் சேர்ந்தவரேயாவர். ஆங்கிலேயர் திப்புவின் பிள்ளைகளுக்கு உபகாரச்சம்பளம் கொடுத்து வேலூருக்கனுப்பி விட்டனர்.

சென்னை மாகாணத்தில் தஞ்சாவூர் சேர்த்துக் கொள்ளப் படல்

சிவாஜியின் குடும்பத்தவர்கள் சுமார் 150 வருஷங்களாகத் **தஞ்சாவூர்** சமஸ்தானத்தை ஆண்டு வந்தனர். இப்பொழுது பட்டத்துக்கு வரக் கருதி இருவர் சண்டையிடவும், வெல்லெஸ்லி அவர்களிருவருக்கும் உபகாரச் சம்பளம் கொடுத்தனுப்பி விட்டுத் தஞ்சாவூரை ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார்.

கி. பி. 1801-ல் உம்ததுல்உம்ரா என்ற கர்னாடக நவாப்பு இறந்துபோனார். வெல்லெஸ்லி அவருடைய மகனுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்துவிட்டுக் **கர்னா**

டகத்தை ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். கர்னுடக நாவப்புகள் பெருமிதமாக வாழ்ந்தும் சிற்றின்பங்களில் ஈடுபட்டும் பெரும் பொருள் கடன் வாங்கிச் செலவு செய்தார்கள். வெல்லெஸ்லி பிரபு அவர்களுடைய நாட்டைக் கைப்பற்றி கடன்களைத் தீர்த்துவிட்டார்.

கர்னுடகம் சேர்க்கப்படல்

இந்திய சிற்றரசர்களை ஆங்கிலேய மேலதிகாரத்திற்குட்படுத்தி ஆங்கிலேயருடைய வலிமையையும் மேன்மையையும் பெருக்கக் கருதிய வெல்லெஸ்லி அதற்கான ஒரு புதிய முறையைக் கைக்கொண்டார். அதைத் **துணைப்படை முறை** அல்லது **காப்புச்சேனை முறை** என வழங்கினர். அதற்கு ஆங்கிலத்தில் **ஸப்ஸிடியரி ஸிஸ்டம்** (Subsidiary system) என்று பெயர். அம்முறையை யொட்டி அவர் இந்திய அரசர்கள் பலருடன் உடன்படிக்கைகள் செய்து கொண்டார். அவ்வுடன்படிக்கையின் நிபந்தனைகள் பின் வருவனவேயாம். “இந்திய அரசர்கள் ஆங்கிலேயரை மேலதிகாரிகளாக ஒப்புக்கொண்டு அவர்களாணையில் அடங்கியும், பாதுகாப்புக்கு உட்பட்டும் இருக்கவேண்டும். அவர்கள் தங்கள் நாடுகளைப் பாதுகாக்க ஆங்கிலேயரும், ஆங்கிலேயரால் பயிற்றுவிக்கப்பட்ட இந்தியரும் அடங்கிய போர்ப் படையை வைத்துக்கொள்ள வேண்டும். அப்படையின் பொருட்டுப் பிடிக்கும் செலவை அந்த அரசர்கள் கொடுத்துவர வேண்டும். அவர்கள் தங்களுக்குள்ளும் ஆங்கிலேயரைத் தவிர வேறு ஐரோப்பியரோடும் எவ்வகைப்பட்ட சம்பந்தமும் வைத்துக்கொள்ளக்கூடாது. அவர்கள் தங்கள்

துணைப்படை முறை

தலைநகரில் ஓர் ஆங்கிலேய ஸ்தானீகரை ஏற்றுக் கொள்ளவேண்டும்.”

இந்த நிபந்தனைகளடங்கிய உடன்படிக்கையை முதன் முதல் செய்துகொண்டவர் ஹைதராபாத்து நிஜாமேயாவர். அவர் தமது ரக்ஷணைப் படையின் செலவுக்காகத் தமக்கு மைசூர் யுத்தங்களில் கிடைத்த கடப்பை, கர்னூல், பல்லாரி, அனந்தப் பூர் ஜில்லாக்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார். ஆகையினாலேதான் அந்த ஜில் லாக்கள் **கொடுக்கப்பட்ட ஜில்லாக்கள்** (Ceded Districts) எனப் பெயர் பெற்றன. இவை கிடைக்கவும் ஆங்கிலேயருக்குச் சென்னை மாகாணம் முழுவதும் சொந்தமாய்விட்டது.

நிஜாமும் துணைப்படை முறையும்

பிறகு அயோத்தி நவாப்பும் துணைப்படை உடன் படிக்கையைச் செய்துகொண்டு, தமது காப்புச்சேனை யின் செலவுக்கு **ரோஹில்கண்டையும், கோரா, அலஹாபாதையும்** கொடுத்துவிட்டார். இவற்றி னின்றும் ஆங்கிலேயருக்கு ஏராளமான வருமானம் கிடைத்தது.

மகாராஷ்டிர ராஜ்யம் பிளவுண்டதின் விவரம் ஏற்கெனவே கூறப்பட்டுள்ளது. இரண்டாம் மாதவ ராவுக்குப் பிறகு ரகுநாதராவின் மைந்த ரான **இரண்டாம் பாஜிராவ்** பீஷ்வா வானார். ஹோல்கார் இவரைத் தோற் கடித்துவிட்டு, அமிருதராவைப் பீஷ்வா வாக்கினார். பாஜிராவ் பாஸீனுக்கு ஓடிச்சென்று ஆங்கிலேயரோடு ஓர் உடன்படிக்கை

இரண்டாம் மகாராஷ்டிர யுத்தம்

செய்துகொண்டார். அவர், தமது பாதுகாப்புச்சேனையின் செலவுக்கு 26 லக்ஷம் ரூபாய் கொடுத்துவரவும், ஆங்கிலேயருடைய பகைவரோடு நட்புப்பாராட்டாதிருக்கவும், அவர்களுடைய உத்தரவில்லாமல் எவருடனும் சண்டையாவது, சமாதானமாவது செய்துகொள்ளாதிருக்கவும், அவருக்கு நிஜாமோடாவது கெய்க்வாரோடாவது சச்சரவு உண்டானால் ஆங்கிலேயருடைய தீர்ப்பை ஒப்புக்கொள்ளவும் உடன்பட்டார். அவருக்குப் பின்பு கெய்க்வாரும் காப்புச்சேனை முறை உடன்படிக்கையைச் செய்துகொண்டு அமைதியாக இருந்து வந்தார்.

மஹாராஷ்டிர ராஜ்யத்தைத் தமதிஷ்டப்படி வினியோகம் செய்யப் பீஷ்வாவுக்கு அதிகாரம் இல்லை என்றும் வெல்லெஸ்லி இந்திய அரசர்களின் சுதந்திரங்களைக் குறைத்துத் தமது அதிகாரத்திலடக்குவது அநீதியென்றும் கருதிய ஸிந்தியாவும், பான்ஸ்லேயும் ஆங்கிலேயருடன் சண்டைசெய்யத் தயாரானார்கள். ஹோல்கார் அவர்களுடன் சேர்ந்துகொள்ளாது விலகி நின்றார்.

கவர்னர் ஜெனரலின் சகோதரரான **வெல்லிங்டன் பிரபு**வும், **ஜெனரல் லேக்** என்பவரும் கி. பி. 1803-ல் அவ்விரு மஹாராஷ்டிரத் தலைவரையும் **அஸ்ஸே**யில் தோற்கடித்தனர். பின்னர் பான்ஸ்லே **ஆர்காமி**லும், ஸிந்தியா **லாஸ்வாரி**யிலும் பெருந்தோல்வியை யடைந்தனர். அதனால் அவ்விருவரும் ஆங்கிலேயரோடு காப்புச்சேனை முறை உடன்படிக்கை செய்துகொண்டனர். பான்ஸ்லே **தேவகாம்** என்ற


ஆங்கிலேய நாடுகள்
ஆங்கிலேய ஆதரவுபெற்ற நாடுகள்
ஆப்கானியர்
சிக்கியர்
நேபாளம்
லாஸ்வாரி
ஆக்ரா
ராஜபுத்திரர்
கங்கை
பாட்னா
மகாராஷ்டிர சாம்ராஜ்யம்
கல்கத்தா
தேவகாம்
பம்பாய்
நைஜாம் ராஜ்யம்
கட்டாக்
வங்காளக் குடாக்கடல்
கோவா
மைசூர்
சென்னைப்பட்டினம்
சிம்மளம்
மைல்கள்
0 100 200 300
இந்துமகாசமுத்திரம்

1805-ல் இந்தியா

இடத்திலும், ஸிந்தியா **சுர்ஜீ அர்ஜுன்காம்** என்ற இடத்திலும் உடன்படிக்கையை ஒப்புக்கொண்டனர்; பான்ஸ்லே, **ஆக்ராவையும், ஒரிஸ்ஸாவையும்**, ஸிந்தியா **கங்கைக்கும் யமுனைக்கும் இடையிலுள்ள நாட்டையும்** காப்புச் சேனையின் ரக்ஷணைக்காகக் கொடுத்தனர். இதனோடு **இரண்டாவது மஹாராஷ்டிர யுத்தம்** முடிவுற்றது.

மூன்றாவது மஹாராஷ்டிர யுத்தம்

கி. பி. 1804-ல் வெல்லெஸ்லி யஸ்வந்த ராவ் ஹோல்காரை வென்றுவரும்படி ஒரு படையை அனுப்பினர். அது **முகுந்தராபாஸ்** என்ற இடத்தில் தோல்வியுற்று யுத்த முனையினின்றும் ஓடிவிட்டது. பின்னர்ப் **பருகபாத், டிக்** என்ற இடங்களில் நடந்த சண்டைகளில் ஹோல்கார் தோல்வியடைந்து பஞ்சாபுக்கு ஓடிவிட்டார். ஹோல்காருக்கு பரதபுரத்தரசர் துணை வந்ததற்காக **லேக்** என்ற ஆங்கிலேய தளகர்த்தர், பரதபுரக் கோட்டையை முற்றுகையிட்டார். அதை வெல்லமுடியாமல் அவர் திகைத்திருக்கையில் பரதபுரத்தரசர் 20 லக்ஷம் ரூபாயை ஆங்கிலேயருக்குக் கொடுத்து சமாதானம் செய்துகொண்டார். இதனோடு **மூன்றாவது மஹாராஷ்டிர யுத்தம்** முடிந்தது.

வெல்லெஸ்லி செய்த பல சண்டைகளினால் கம்பெனிக்குப் பணவரட்சி யுண்டானதையும், நாடு நாசமடைந்து குடிகள் பஞ்சத்தின் வாய்ப்பட்டுத் துன்புற்றதையும் கண்ட ஆங்கிலேய மேலதிகாரிகள் அவரைத் திருப்பி அழைத்துக்கொண்டு விட்டனர். ஆங்கிலேய

சாம்ராஜ்யத்தை முன்னணிக்குக் கொண்டுவந்தவர்களில் வெல்லெஸ்லி ஒருவராவர்.

பயிற்சிகள்

1. சென்னை மாகாணத்தின் பாகங்கள் ஒவ்வொன்றும் எவ்வெப்பொழுது, எவ்வாறு ஆங்கிலேயர் வசம் வந்தன ? படம் வரைந்து விவரி.

2. ஆங்கிலேயருக்குக் கர்னாடகம் எவ்வாறு கிடைத்தது ?

3. காப்புச்சேனை முறை உடன்படிக்கையின் நிபந்தனைகள் யாவை ?

4. "கொடுக்கப்பட்ட ஜில்லாக்கள்" என்பவை எவை ? அப்பெயர் வருவானேன் ?

5. துணைப்படை முறை உடன்படிக்கையைச் செய்து கொண்ட இந்திய அரசர்கள் காப்புச்சேனையின் செலவுக்காகக் கொடுத்த நாடுகள் எவை ?

6. இரண்டாவது, மூன்றாவது மஹாராஷ்டிர யுத்தங்கள் யார் யாருக்கு நடந்தன ? ஏன் ? அவற்றிலடங்கிய சண்டைகள் யாவை ? அந்த யுத்தங்களின் முடிவு என்ன ?

7. வெல்லிங்டன் பிரபுவைப்பற்றிக் குறிப்பு எழுது.

8. பரதபுரத்தரசரோடு ஆங்கிலேயர் சண்டைக்குச் செல்வானேன் ? அதன் விவரமும், விளைவும் கூறு.

5. லார்ட் மின்டோ

வெல்லெஸ்லிக்குப் பிறகு லார்ட் காரன்வாலிஸ் இரண்டாவது முறை கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டு இந்தியாவுக்கு வந்தார். அவர் இரண்டு மாதங்களுக்குள் இறந்துபோய் விட்டதனால், மந்திராலோசனை சபையின் மெம்பரான **ஸர் ஜார்ஜ் பார்லோ** என்பவர் கவர்னர் ஜெனரலாக வேலைபார்த்து வந்தார்.

ஸர் ஜார்ஜ் பார்லோ

பார்லோ தலையிடாக் கொள்கையைக் கைக் கொண்டு யமுனை நதிக்கப்பாலுள்ள நாடுகளை ஸிந்தியா வுக்குத் திருப்பிக் கொடுத்துவிட்டார். அவ்வாறே அவர் ஹோல்காருடைய நாட்டையும், அதிகாரத்தை யும் அவருக்குக் கொடுத்தார். இவற்றை விரும்பாத ஜெனரல் லேக் தமது வேலையை ராஜீனாமா செய்து விட்டு இங்கிலாந்துக்குச் சென்றார். பார்லோ பரிபால னத்தில் நாட்டில் அமைதி நிலவியிருந்தது. செலவுகள் குறைந்து பொக்கிஷத்தில் பணம் பெருகிவந்தது.

வேலூர் சிப்பாய்க் கலகம்

அச்சமயம் வேலூரில் சிப்பாய்கள் கலகம் செய்தார் கள். ராணுவ அதிகாரிகள், சிப்பாய்கள் நெற்றியில் தங்கள் மதக்குறிகளை வைத்துக்கொள் ளக் கூடாதென்றனர். அவர்கள் தங் கள் தலைப்பாகைகளை ஒரே விதமாகக் கட்டிக்கொள்ள வேண்டுமென உத்தர விட்டனர். இவற்றை விரும்பாத சிப்பாய்கள் கலகஞ் செய்தனர். ஆனால் கலகம் எளிதில் அடக்கப்பட்டது. திப்புவின் பிள்ளைகள் இக்கலகத்துக்குக் காரணமாக இருக்கலாம் எனக்கருதிய துரைத்தனத்தார் அவர்க ளைக் கல்கத்தாவுக்கு அனுப்பிவிட்டு, வில்லியம் பென் டிங்க் என்ற மதராஸ் கவர்னரை வேலையினின்றும் நீக்கிவிட்டனர்.

மின்டோ பிரபு

லார்ட் மின்டோ என்ற புதிய கவர்னர் ஜென ரல் கி. பி. 1807-ல் இந்தியாவுக்கு வந்து ராஜ்ய பரிபால னத்தை ஏற்றுக்கொண்டார். இவருக்கு இந்தியாவைப்பற்றின விஷயங்கள் நன் ருகத் தெரியும். இவர் போர்ட் அவ் கன்ட்ரோல் என்ற சபையின் அக்கிராசனராக இருந்

தார். இவருக்குக் கவர்னர் ஜெனரலாவதில் மனமில்லை. எனினும், அரசராணைக்கு இணங்கி இவர் வேலையை ஒப்புக்கொண்டார். இவர் தலையிடாக் கொள்கையை அனுசரிக்க விரும்பினார். ஆனால், அது இயலவில்லை. அமீர்கான் என்ற ஆப்கானியன் நாகப்பூர்மீது படையெடுத்து வந்தபோது அவனைத் துரத்துவதில் பான்ஸ்லேக்கு உதவினார். பீஷ்வாவின் நாட்டில் கலகம் உண்டானபோது அதை அடக்குவதில் பீஷ்வாவுக்கு உதவி செய்தார்.

ரஞ்சித் ஸிங்க்

இவர் காலத்தில் **ரஞ்சித் ஸிங்க்** என்ற ஸீக்கிய ஸர்தார் பஞ்சாபில் மிக்க மேம்பாட்டை அடைந்திருந்தார். அவர் கி. பி. 1792-ல் தமது பன்னிரண்டாம் வயதிலேயே ஸர்தார் ஆனார். பஞ்சாபில் அப்போது இவரைப் போன்ற ஸர்தார்கள் பலர் இருந்தனர். அவர்கள் ஒற்றுமையை நீத்துத் தமக்குள் சண்டையிட்டு வந்தனர். ரஞ்சித் ஸிங்க் அவர்களை அடக்கி ஒன்றுபடுத்தி ஒரு ராஜ்யத்தை உண்டாக்கினார். அதற்குத் தாமே அரசரானார். அப்பொழுது இவருக்கு வயது இருபது. ஆப்கானிய அரசருக்கடங்கி லாகூர் கவர்னராக இருந்த இவர் பஞ்சாப் அரசரானதினின்றும் இவருடைய ஆண்மையும், திறமையும் வெளியாகின்றன. இவர் காஷ்மீர் நாட்டை வென்று தமது ஆணையிலடக்கிக் கொண்டார்.

கி. பி. 1807-ல் ரஞ்சித் ஸிங்க் தமது ராஜ்யத்தின் கிழக்கு எல்லையான ஸட்லெஜ் நதியைக் கடந்துவந்து லூதியானாவைப் பிடித்துக்கொண்டார். கி. பி. 1823-ல்

அவர் பெஷாவர் நாட்டையும் வென்றூர். அந்நாட்டில் **பாட்டியாலா, ஜிண்ட், நபா** என்ற ஸீக்கிய ராஜ்யங்கள் இருந்தன. இவற்றின் அரசர்கள் ரஞ்சித் ஸிங்கின் ஆதிக்கப் பெருக்கைக் கண்டு அஞ்சித் தங்களைக் காக்கும்படி ஆங்கிலேயரை வேண்டினர்.

ரஞ்சித் ஸிங்க்

அதற்கிணங்கி மின்டோ **மெட்கால்ப்** என்பவரை ரஞ்சித் ஸிங்கிடம் தூதாக அனுப்பினுர். பஞ்சாப் அரசர் ஸட்லெஜ் நதியைத் தாண்டித் தாம் வருவதில்லை என்று ஒப்புக்கொள்ளவும், ஆங்கிலேயருக்கு ஸட்லெஜ் யமுனு நதிகளினிடையிலுள்ள நாடு கிடைத்தது. கி. பி. 1839-ல் ரஞ்சித் ஸிங்க் இறந்துபோனுர். அவர் இருந்த வரையில் ஆங்கிலேயரோடு நட்புப் பாராட்டியே நடந்துவந்தார்.

மின்டோ பரிபாலனத்தின்போது கி. பி. 1813-ல் வர்த்தகச் சங்கத்தின் சாசனம் இன்னு மொருமுறை புதுப்பிக்கப்பட்டது. கம்பெனி தனது வியாபார உரிமையை இழந்து அரசியலை மேற்கொண்டது. அப்போது துரைத்தன அங்கீகாரம் பெற்ற கிறிஸ்தவக் கோயில் ஒன்று இந்தியாவில் அமைக்கப்பட்டது. அச்சாசனத்தில் இந்தியாவில் கல்வியின்பொருட்டுக் கம்பெனியார் லக்ஷம் ரூபாய் செலவிட வேண்டுமெனக்

கோட்டையைப் பிடித்துக்கொண்டது. பின்னர் **மெக்வான்புரி**யில் நடந்த சண்டையில் கூர்க்கர்கள் தோற்றோடிவிட்டதனால், ஆக்டர்லோனி **காட்டு மாண்டு**வை நெருங்கினார். இதைக் கண்ட நேபாள

ஹேஸ்டிங்ஸ் பிரபு

மன்னர் கி. பி. 1816-ல் **சிகௌளி** என்ற இடத்தில் ஆங்கிலேயரோடு சமாதானம் செய்து கொண்டார். கூர்க்கர் கைப்பற்றிக்கொண்ட ஆங்கிலேயநாடுகளை அவர்களுக்கே திருப்பிக்கொடுத்துவிட, அவர் ஒப்புக்கொண்டார். அன்றியும், காளி நதிக்கு மேற்கிலுள்ள தமது நாட்டின் ஒரு பகுதியையும் அவர் ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிட்டார். தமது நாட்டில் ஓர் ஆங்கிலேய ஸ்தானீகரை ஏற்றுக்கொள்ளவும் அவர் உடன்பட்டார். இந்த சமாதானத்தின் பயனாக ஆங்கிலேயருக்கு **ஸிம்லா**வும், **நைனிடா**லும், **முஸௌரி**யும் கிடைத்தன. நேபாள அரசர் இப்பொழுதும் ஆங்கிலேயரோடு நட்புப் பாராட்டியே இருந்துவருகிறார். மற்றைய இந்திய அரசர்களைவிட நேபாள மன்னருக்கு அதிகமான சுயாதீனம் உண்டு.

பிண்டாரி யுத்தம்

ராணுவ அலுவல்களிலிருந்து தள்ளுண்டவர்கள், கொலை, கொள்ளை முதலிய குற்றங்களைச் செய்து தப்பியோடிச் சென்றவர்கள், நாட்டின் சட்டதிட்டங்களை மீறி நடந்து தண்டனைக்குப் பயந்து ஓடிப்போனவர்கள், ஆகிய பலரும் மத்திய இந்தியாவில் ஒன்று சேர்ந்து இருந்த

காணப்பட்டது. மாகாண கவர்ன்மென்ட்களுக்கு வரி விதிக்கும் அதிகாரத்தை அச் சாசனம் தந்தது.

பயிற்சிகள்

1. வேலூரில் சிப்பாய்கள் கலகம் செய்வானேன்? அது திப்புவின் பிள்ளைகளையும், மதராஸ் கவர்னரையும் எப்படிப் பாதித்தது?

2. ஜெனரல் லேக் தமது வேலையை ராஜீனுமா செய்துவிட்டுத் திரும்பிச் சென்றது ஏன்?

3. மின்டோ பிரபு தலையிடாக் கொள்கையை மீறி நடந்தது ஏன்? எப்போது?

4. ரஞ்சித் ஸிங்க் யார்? மெட்கால்ப் அவரிடம் தூது செல்வானேன்? அதன் விளைவு என்ன?

6. லார்ட் ஹேஸ்டிங்ஸ்

வெல்லெஸ்லியைப் போன்று, **லார்ட் ஹேஸ்டிங்ஸ்** (கி. பி. 1813—1822) என்ற புதிய கவர்னர் ஜெனரலும் இந்திய அரசர் விவகாரங்களில் தலையிட்டுக்கொண்டு ஆங்கிலேய ராஜ்யத்தையும், அதிகாரத்தையும் பெருக்கினர்.

கூர்க்கர்கள் நாடு பெறக் கருதி ஆங்கிலேயருடைய பிரதேசங்களில் சிலவற்றைப் பிடித்துக்கொண்டனர்.

நேபாள யுத்தம்

அவர்களை எதிர்த்துச் சண்டை செய்வதற்காக ஹேஸ்டிங்ஸ் நான்கு போர்ப் படைகளை நான்கு தளகர்த்தர்களின்கீழ் அனுப்பினர். இவை பகைவரை எதிர்ப்பதற்கு வெவ்வேறு வழியாகச் சென்றன. இவற்றுள் ஜெனரல் ஆக்டர்லோனி நடத்திச் சென்ற சேனை **மாலூன்**

னர். இவர்கள் சில தலைவர்களை நியமித்துக்கொண்டு ஊர் ஊராகச் சென்று ஜனங்களைக் கொன்று அவர்கள் பொருள்களைக் கொள்ளையிட்டு வந்தனர். இவர்கள் செய்த தீமைகள் பெருகி வந்தன. இவர்களுக்குப் **பிண்டாரிகள்** என்று பெயர். இவர்களைத் தண்டிப் பதற்காக அனுப்பப்பட்ட படைகள் இவர்களை நாலா பக்கங்களிலும் சூழ்ந்துகொண்டு வேட்டையாடிக் கொன்றன. தப்பிப் பிழைத்த சிலர் கொள்ளையையும் கொடுமையையும் நீத்து நியாயவழியில் பிழைக்க முற் பட்டனர். இவர்கள் தலைவனான **அமீர்கான்** ஆங்கி லேயரைச் சரணமடையவும், அவனை அவர்கள் ராஜ புதனத்திலுள்ள **டோங்க்** என்ற சிறிய நாட்டிற்கு அதிபதியாக்கினார்கள். **சிட்டு** என்ற மற்றொரு பிண் டாரித் தலைவன் புலிக்கு இரையாகி மடிந்தான்.

பீஷ்வா பாஸீனில் ஆங்கிலேயரோடு சமாதான உடன்படிக்கை செய்துகொண்டதை நாம் அறிவோம்.

நான்காவது மஹாராஷ்டிர யுத்தம்

அவர் சிறிது காலம் அமைதியாக இருந் தார். ஆனால், அவருக்கு ஆங்கிலேய மேலதிகாரத்திலிருந்து விடுபட்டுச் சுயா தீனம் பெறவேண்டுமென்ற ஆசை உண் டாயிற்று. அவர் தமது எண்ணம் நிறை வேறுவதற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார்.

ஆங்கிலேயர் கூர்க்கரோடும், பிண்டாரிகளோடும் யுத்தம்செய்து வருகையில், அவர் திடீரென்று ஆங்கி லேய ஸ்தானீகரையும், அவருடைய சேனையையும் **கர்க்கி** என்ற இடத்தில் எதிர்த்தார். ஆனால் அவர் தோல்வியடைந்து பூனாவிலிருந்து ஜோதிபுரத்துக்கு

ஓடிப்போனர். அதே சமயத்தில் நாகபுரி அரசரான **அப்பா ஸாஹிப்** என்பவர் **சீதாபல்டி**யில் தோல்வி யடைந்து நாட்டைவிட்டோடிவிட்டார்.

ஹோல்காருடைய சேனை தங்கள் ராணியான துளசிபாய் ஆங்கிலேயரோடு சமாதானம் செய்து கொள்ள விரும்பியதாக எண்ணி அவளைக் கொன்று விட்டு ஆங்கிலேயரை எதிர்த்துச் சென்றது. ஆனல் அது பெருந்தோல்வியடைந்தது. ஆகவே அம்மூன்று மஹாராஷ்டிரத் தலைவர்களும் ஆங்கிலேயரோடு இன்னுமொரு முறை சமாதானம் செய்து கொண் டனர்.

பீஷ்வா தமது நாடு முழுவதையும் இழந்து வரு ஷத்துக்கு எட்டு லக்ஷம் ரூபாய் வீதம் உபகாரச் சம்ப ளம் பெற்றுப் **பித்தூரு**க்குச் சென்றுவிட்டார். பீஷ் வாவின் நாடு பம்பாய் மாகாணத்தின் பெரும்பாகம் ஆயிற்று. **சதாரா**வைச் சார்ந்த ஒரு சிறிய நாட்டை மாத்திரம் ஆங்கிலேயர் சிவாஜியின் வமிசத்தைச்சேர்ந்த ஒருவருக்குக் கொடுத்தனர். இது மஹாராஷ்டிரரு டைய வேண்டுகோளுக்கிணங்கிக் கவர்னர் ஜெனரல் செய்ததாகும்.

நாகபுரியிலும், **இந்தூரி**லும் இரண்டு சிறுவர் களைப் பெயருக்கு அரசர்களாக்கிவிட்டு அவர்கள் நாடு களின் சில பாகங்களை ஆங்கிலேயர் பம்பாய் மாகாணத் தில் சேர்த்துக்கொண்டனர். இதனேடு **நான்காம் மஹாராஷ்டிர யுத்தம்** முடிந்து, மஹாராஷ்டிர அதி காரமும் சிதைவுபட்டது.

ஹேஸ்டிங்ஸ் பரிபாலனத்தில் செப்பனிடப்பட்ட பாதைகளும், கால்வாய்களும், அவற்றின்மீது பாலங்களும் ஏராளமாக அமைக்கப்பட்டன.

சீர்திருத்தங்கள்

கல்கத்தாவில் ஒரு கல்லூரியும், சில பள்ளிக்கூடங்களும் தோன்றின. கிறிஸ்தவப் பாதிரிகள் சில கல்விச்சாலைகளை யமைத்து உதவினர்.

ஹேஸ்டிங்ஸ் நீதி மன்றங்களைப் பெருக்கி, இந்தியரை நீதிபதிகளாக நியமித்தார். அவர் பலங்குன்றிக்கிடந்த பஞ்சாயத்துக்களைப் பலப்படுத்தி அவைகள் முன்போல் தொண்டாற்றுமாறு செய்தார். அவர் ஜில்லா கலெக்டர்களை ஜில்லா மாஜிஸ்டிரேட்டுகளுமாக்கினர்.

அவர் பரிபாலனத்தில் தேச பாஷையில் பிரசுரிக்கப் பட்ட சமாச்சாரப் பத்திரிகை முதன் முதல் வெளி வந்தது. அப்பத்திரிகைகள் துரைத்தனத்தார் செய்யும் நியாய பரிபாலனத்தின் குணத்தையும் குற்றத்தையும் குறித்து எழுதலாம் என்றும், துரைத்தன சம்பந்தமான சில விஷயங்களைப் பற்றி அவை யாதொன்றும் எழுதக்கூடாது என்றும் ஹேஸ்டிங்ஸ் உத்தரவிட்டார்.

அவர் பரிபாலனத்தில் கி. பி. 1819-ல் **சிங்கப்பூர்**, சீனு முதலிய கீழ் நாடுகளுக்குச் செல்லும் கப்பல்களுக்கு அனுகூலமான சிறந்த துறைமுகமாக்கப் பட்டது.

பயிற்சிகள்

1. சிகௌலி சமாதானத்தைச் செய்து கொண்டவர் யார்? ஏன் செய்து கொண்டார்? அதன் நிபந்தனைகள் யாவை? அதன் விளைவு என்ன?

2. பிண்டாரிகள் யார்? அவர்கள் கதி என்னவாயிற்று? ஏன்?

3. கடைசி மஹாராஷ்டிர யுத்தம் எப்போது, ஏன் மூண்டது? அதன் முடிவும், விளைவும் யாவை?

4. ஹேஸ்டிங்ஸ் பரிபாலனத்தில் நாட்டுக்கு உண்டான நன்மைகள் யாவை?

7. லார்ட் வில்லியம் பெண்டிங்க்

லார்ட் ஹேஸ்டிங்ஸுக்குப் பிறகு **லார்ட் அம்ஹெர்ஸ்ட்** என்பவர் கவர்னர் ஜெனரலாகிக் கி. பி. 1823 முதல் கி. பி. 1828 வரை இந்திய துரைத்தனத்தை நடத்தினர். இவர் காலத்தில் பர்மாவோடு ஒரு யுத்தம் நேர்ந்தது. அதுவே **முதல் பர்மா யுத்தம்** எனப்படுவது.

முதல் பர்மா யுத்தம்

கி. பி. 1822-ல் பர்மா தேசத்து அரசர் அஸ்ஸாம் நாட்டை வென்று தமது ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். பின்னர் அவர் ஆங்கிலேயருடைய தீவு ஒன்றைக் கைப்பற்றிக் கொண்டு சில சிப்பாய்களையும் கொன்றார். அல்லாமலும், பர்மிய சேனாதிபதியான **மஹா பந்துலா** என்பவர் வங்காளத்தைவென்று ஆங்கிலேய கவர்னர் ஜெனரலையுங் கைதியாக்கி விடவேண்டுமென்று ஒரு பெரும் படையை நடத்தி வந்தார்.



பர்மிய யுத்தங்களை விவரிக்கும் படம்

ஆர்ச்சிபால்ட் காம்பெல் என்ற ஆங்கிலேய போர்த் தலைவர் அவரைத் தோற்கடித்துவிட்டு ரங்கூனை எதிர்த்துச் சென்றார். அதைக் கண்ட பர்மியப் படைகள் மணிப்பூர், கச்சார், அஸ்ஸாம் ஆகிய மூன்று இடங்களையும் கைவிட்டுச் சென்றன. அதனால் பர்மா அரசர் கி. பி. 1826-ல் **யாண்டபூ** என்ற இடத்தில் ஆங்கிலேயருக்கு **அஸ்ஸாம், அரக்கான், டெனஸரீம்** நாடுகளையும், சண்டையின் செலவுக்காக ஒரு கோடி ரூபாயையும் கொடுக்க உடன்பட்டுச் சமாதானம் செய்துகொண்டார். அதனோடு **முதல் பர்மா** யுத்தம் முடிந்தது.

பரதபுர விவகாரம்

அம்ஹெர்ஸ்ட் காலத்தில் பரதபுரத்தை ஆண்டிருந்த அரசன் வயதிற் சிறியவன். அவனுடைய தாயாதி ஒருவன் தானே பட்டத்துக் குரியவன் எனக் கலகஞ் செய்தான். கவர்னர் ஜெனரல் ஒரு படையை அனுப்பி, பரதபுரத்தை முற்றுகை செய்து பிடித்துக் கொண்டு அச்சிறுவனையே அரசன் ஆக்கினார்.

வேலூரில் சிப்பாய்கள் கலகஞ் செய்தபோது, வில்லியம் பெண்டிங்க் என்பவர் மதராஸ் கவர்னராக இருந்தார் என்றும், மேலதிகாரிகள் அவரை வேலையினின்றும் நீக்கி இங்கிலாந்துக்குத் திருப்பி அழைத்துக் கொண்டுவிட்டனர் என்றும் உங்களுக்குத் தெரியும். தாங்கள் செய்தது அநீதி என்பதையுணர்ந்த அவ்வதிகாரிகள் பெண்டிங்கைக் கவர்னர் ஜெனரலாக நியமித்து மறுமுறை இந்தியாவுக்கு அனுப்பினார்கள்.

லார்ட் அம்ஹெர்ஸ்டுக்குப் பிறகு இந்திய கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டு வந்த **லார்ட் வில்லியம்**

னைக்கும் தீவாந்தர சிக்ஷைக்கும் உள்ளாக்கினர். அக் கூட்டம் தொலைந்து நாட்டில் அமைதி உண்டாயிற்று.

கிருஷ்ணராஜ உடையார் என்ற மைசூர் அரசருக் குத் தக்க வயது வந்துவிட்டதனல், அவர் கி.பி. 1811ல் அரசியலைத் தாமே ஏற்றுக்கொண்டார். **பூர்ணையா** என்ற மந்திரி பரிபாலனஞ் செய்துவந்த வரையில், யாவும் செவ்வனே நடைபெற் றன. அரசியலைக் கிருஷ்ணராஜ உடையார் ஏற்றுக் கொண்டதும், அவர் குடிகளைத் துன்புறுத்தத் தொடங்கினர். அதனல் பெண்டிங்க் அவரை நீக்கி விட்டு, ராஜ்யத்தை நடத்த ஆங்கிலேயர்கள் அடங்கிய ஒரு கமிஷனை ஏற்படுத்தினர்.

மைசூர் விவகாரம்

பெண்டிங்க் செய்த சிறந்த சீர்திருத்தங்களில், சக கமனம் அல்லது உடன்கட்டை ஏறுதல் என்னும் கொடிய வழக்கம் அடியோடு நிறுத்தப் பட்டதே முக்கியமானது ஆகும். தமது மந்திராலோசனை சபையின் சட்ட மெம்பரான **மெகாலே** என்பவரின் ஆலோசனைப்படி ஆங்கிலம் அரசாங்க பாஷையாக்கப் பட்டது. ஆங்கிலம் கற்பிப்பதற்கான கல்லூரிகளும், பாடசாலைகளும் ஏற்பட்டன. ஒரு வைத்தியக் கல்லூரி கல்கத்தாவில் அமைக்கப்பட்டது.

பெண்டிங்க் செய்த சீர்திருத்தங்கள்

இந்தியர்கள் ஆங்கிலம் கற்று அதில் தேர்ச்சி பெற்று உயர்ந்த உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட் டனர். உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் பெண்டிங்க் ஜாதி மத வேற்றுமைகளைக் கருதாமல் கல்வி, திறம், நன்னடக்கை ஆகிய இவற்றை லக்ஷியமாகக் கொள்ள வேண்டுமெனச் சட்டம் செய்தார். அதையொட்டி

பென்டிங்க் கி. பி. 1828 முதல் கி. பி. 1835 வரை ராஜ்ய பரிபாலனஞ் செய்தார். இவர் புத்தி கூர்மையும் நடுவு நிலைமையும் குடிகளிடம் அன்பும் பொருந்தியவர். இவர் பரிபாலனத்தில் சண்டைகளின்றி நாடு அமைதியாக இருந்தது. ஆயினும், இவர் குடகு நாட்டு விவகாரத்தில் தலையிடவேண்டி வந்தது. குடகு நாட்டரசர் தமது குடிகளைத் துன்புறுத்தினர். கவர்னர் ஜெனரல் எவ்வளவு சொல்லியும் கேளாத

பென்டிங்க் பிரபு

தனால், அவரைப் பதவியிலிருந்து விலக்கிவிட்டார். குடகுநாடு ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டது.

தக்கர்களை அடக்கியது

பென்டிங்க் காலத்துக்கு முன்னிருந்தே **தக்கர்** என்ற கூட்டத்தார், நாட்டின் நாலா பக்கங்களிலும் பரவிக் குடிகளுக்குப் பெருந் தீங்கிழைத்து வந்தனர். அவர்கள் கொள்ளையைத் தொழிலாகக் கொண்டு அதன் பொருட்டுக் கொலைத் தொழிலையுஞ் செய்து வந்தனர். அவர்கள் வழிப்போக்கர்களை வஞ்சித்துக் கொன்று அவர்கள் பொருளைக் கொள்ளையிட்டு வந்தனர். பென்டிங்க் அவர்களை வென்று அடக்கிவிட்டார். அவர்களில் அனேகம் பெயர்களை அவர் மரண தண்ட

8. ராஜா ராம்மோஹன் ராய்

பெண்களின் நிலைமையை உயர்த்துவதிலும், கல்வியைப் பெருக்குவதிலும், கைம்பெண்கள் உடன்கட்டை ஏறுதலை நிறுத்துவதிலும், கவர்னர் ஜெனரலுக்கு **ராஜா ராம் மோஹன்ராய்** என்ற வங்காளப் பிராமணர் பெருந் துணைவராக இருந்தார். தேசத்தை முன்னேற்றுவிக்கத் தொண்டாற்றியவர்களுள் இப்பெரியார் ஒருவர். இவர் செய்வித்த சீர்திருத்தங்களின் பெருமையை யுணர்ந்த நாட்டினர் இவரை இன்றும் போற்றுகின்றனர். இவருடைய ஜீவிய சரித்திரத்தை நாம் சிறிது தெரிந்துகொள்வது முக்கியமாகும்.

ராம் மோஹன்ராய் கி. பி. 1774-ம் வருஷத்தில் ராதா நகரத்தில் பிறந்தார். **தாரிணி தேவியும், ராமகாந்தரும்** அவருடைய தாயும் தந்தையுமாவர். ராமகாந்தர் செல்வம் மிக்க ஜமீன்தாராக இருந்ததுமன்றி நவாப்பினிடம் பெரிய உத்தியோகத்தில் அமர்ந்திருந்தார். அதனுல் ராம்மோஹன் யாதொரு குறையுமின்றிச் செல்வமாக வளர்ந்துவந்தார். தக்க வயது வந்ததும் பெற்ருேர்கள் ராம் மோஹனை அங்கிருந்த ஒரு கிராமபாடசாலைக்கு அனுப்பினுர்கள். அப்பள்ளியில் அவர் வங்காள பாஷையைக் கற்றுக்கொண்டு அதில் தேர்ச்சிபெற்ருர்.

ராஜாராம் மோஹன்ராயின் இளமைப் பருவம்

அக்காலத்தில் பாரஸிகம் அரசாங்க பாஷையாகவும், அரபி நாகரிகத்துக்கேற்ற பாஷையாகவும் இருந்தன. ராம்மோஹன் ராயின் முன்னேர்கள் பெரிய பெரிய அரசாங்க உத்தியோகங்களில் இருந்த

அப்போது சென்னை மாகாணக் கவர்னராகவிருந்த **ஸர் தாமஸ் மன்ரோ** என்பவரும், **எல்பின்ஸ்டென்** என்ற பம்பாய் கவர்னரும் இந்தியர்களை டிப்டி கலெக்டர்களாகவும் முனிசீப்புக்களாகவும், ஸப்-ஜட்ஜ்களாகவும், நியமித்து அவர்களுடைய சம்பளங்களையும், அந்தஸ்தையும் உயர்த்தினர். குடிகளினிடத்து மிக்க அன்பு பாராட்டி நடந்தொழுகிய மன்ரோவுக்குப் 'பிரஜாமித்ரன்' எனப் பெயர் உண்டாயிற்று.

கம்பெனியின் சாசனம் உறுதி செய்யப்பட்டு இருபது வருஷங்கள் ஆகிவிட்டதனுல் கி. பி. 1833-ல் அது இன்னுமொரு முறை புதுப்பிக்கப்பட்டது. அதன் பயனுகக் கம்பெனியார் தங்கள் வியாபார உரிமையை இழந்தனர். அப்போது யாரும் இந்தியாவோடு வியாபாரம் செய்யலாம் என்ற ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தியா சம்பந்தமான சட்ட திட்டங்களைக் கவர்னர் ஜெனரல் தமது சபையிலேயே செய்து கொள்ளலாம் என்றும், இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அச்சாசனத்தில் காணப்பட்டது.

பயிற்சிகள்

1. முதல் பர்மா யுத்தம் ஏற்பட்டதற்குக் காரணமென்ன? அதன் நிகழ்ச்சிகள் என்ன? அது எவ்வாறு முடிந்தது?

2. குடகு நாடு ஆங்கிலேய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டது எவ்வாறு?

3. மைசூர் ராஜ்யம், கமிஷனர் ஆளுகையில் வருவானேன்?

4. பெண்டிங்க் செய்த சீர்திருத்தங்கள் எவை?

வர்கள். செல்வமும், பெருமையும், நாகரிகமும் பொருந்தியவர்கள். அதனால் அவர் அந்த இரண்டு பாஷைகளையும் கற்பது அவசியமாயிற்று. ராம் மோஹன் ஒரு கிராம மௌல்வியினிடமிருந்து பாரஸிகம் கற்றுக்கொண்டு, பின்னர் அதில் தேர்ச்சிபெறக் கருதியும், அரபி பாஷை கற்கக் கருதியும் பாட்னு நகரம் சென்றார். அப்போது அவருக்கு வயது எட்டு. மூன்று வருஷங்களுக்குள் அவர் அவ்விரண்டு பாஷைகளையுங் கற்று அவற்றில் தேர்ச்சியும் பெற்றார். பின்னர் ஸம்ஸ்கிருத பாஷையைக் கற்பதன் பொருட்டு அவர் காசிக்குச் சென்றார். அப்போது அவருக்கு வயது 13.

காசியில் அவர் இந்துமதம், சட்டம், காவியம் சம்பந்தமான நூல்களிற் பயின்று, பின்னர் வேதாந்த சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தார். இவ்வாறு பதினாறு வயதிற்குள்ளேயே அவர் நான்கு பாஷைகளில் தேர்ச்சி பெற்ற பண்டிதர் ஆனார். கல்வி ஒருவாறு முடிந்ததும் அவர் தமது பெற்றோரிடம் சென்றார். அவர் நூல்களில் கூறப்பட்டுள்ள உண்மைகளுக்கும் ஜனங்கள் கொண்டொழுகிய பழக்கங்களுக்கும் வேற்றுமைகள் இருந்ததைக் கண்டு வருந்தினார். முதன்மையாக, விக்ரஹபூஜையை அவர் பெரிதும் வெறுத்தார். ஜனங்கள், கைக்கொண்டிருந்த ஆசாரங்களையும், விக்ரஹ பூஜையையும் கடிந்து அவர் உபதேசித்தும் எழுதியும் வந்தார்.

வைதிக இந்துவான தந்தைக்கு, ராம் மோஹனனுடைய சொற்களும் செயல்களும் மிகுந்த வருத்தத்தை

யுண்டாக்கின. தந்தையாரோடு தாம் இருந்து வாழ்வது முடியாத காரியம் என்பதையுணர்ந்த ராம்மோஹன் வீட்டினின்றும் வெளியேறிவிட்டார். நான்கு வருஷ காலம் அவர் இந்துஸ்தானம் முழுவதும் சுற்றித் தம் அறிவைப் பெருக்கிக் கொண்டார். அவர் திபெத் சென்று பௌத்தமத ஆராய்ச்சி செய்து அதன் உண்மைகளைத் தெரிந்து கொண்டார். பௌத்த நூல்களின் கூற்றுக்கும் பௌத்தர்களின் அனுஷ்டானங்களுக்கும் பல வேற்றுமைகள் இருப்பதைக் கண்ட அவர் பௌத்தர்களுடைய பழக்க வழக்கங்களைக் கண்டித்துப் பேசினர். பௌத்தர்கள் **லாமா**வைத் தெய்வமாகக் கருதியதை அவர் வெறுத்தார். அதனல் அவருக்கு அந்நாட்டினரின் பகை ஏற்பட்டது. அவர் திபெத்தினின்றும் தப்பி இந்தியாவுக்கு வந்துவிட்டார்.

ராம் மோஹன் தந்தையின் வீட்டைவிட்டு வெளியேறல்

மதவைராக்கியத்தினல் ராம் மோஹனை வீட்டினின்றும் வெளியேற்றிய ராமகாந்தர் அவரைத் திரும்பவும் தமது வீட்டில் ஏற்று அன்புடன் நடத்திவந்தார். மத விசாரணையினின்றும் தனயன் மனத்தைத் திருப்பக் கருதித் தந்தையார் அவருக்கு மணஞ் செய்வித்தார். விவாகம் வைதிக முறைப்படியே நடந்தேறியது. ராம் மோஹன் இன்புற வாழ்ந்து இல்லறம் நடத்திவந்த போதிலும் அவர் மனம் சமூக சீர்திருத்தத்தையே நாடிற்று. விக்ரஹ பூஜையையும், சஹகமனம் என்ற உடன்கட்டையேறுதலையும் தொலைக்கக் கருதி அவர் அரும்பாடுபட்டார். உடன்கட்டை யேறுதலைத்

இல்லற வாழ்க்கை

தவிர்க்க முற்பட்டதில் அவர் தமது உற்ருர் உறவினர், பொதுஜனங்கள் ஆகியோருடைய பகையைச் சம்பாதித்துக்கொண்டார். இவர்கள் ஒன்றுகூடி ராமகாந்தரிடம் முறையிடவும், தந்தையார் தனயனை மீண்டும் வீட்டினின்று வெளியேற்றினுர். இப்போது ராம் மோஹன் மனைவியோடும், சிறு குழந்தையோடும் யாதொரு ஆதரவுமின்றி வீட்டைவிட்டு வெளிச் சென்ருர்.

உத்தியோகம்

அவர் ராங்பூர் கலெக்டர் கச்சேரியில் உத்தியோகம் பெற்றுத் தமது திறமையினுலும், உழைப்பினுலும், உண்மையினுலும் படிப்படியாக உயர்ந்து **திவான்** ஆனுர். அப்போதுங்கூட அவர் கல்வியை விரும்பிக் கற்றும், மத ஆராய்ச்சிகள் செய்தும் வந்தார். சஹகமனத்தையும், விக்ரஹ பூஜையையும் கண்டித்துப் பேசினுர்.

பிரம்மஸமாஜ ஸ்தாபனம்

கி. பி. 1814-ல் அவர் தமது வேலையை நீத்துக் கல்கத்தாவில் வசித்து வந்தார். அப்போது அவருக்கு அவர் தந்தையாரின் ஜமீனும், மற்ற பொருள்களும் கிடைக்கவும், அவர் குறையின்றி வாழ்ந்துவந்து, தமது சீர்திருத்தத் தொழிலில் ஈடுபட்டார். அவர் வேதங்களின் உண்மையை யாவரும் அறிய விரும்பி அவற்றை மொழிபெயர்த்து வெளியிட்டார். தம் கருத்துக்களைப் பத்திரிகைகளின் மூலமாய் வெளிப்படுத்தி அவற்றைப் பலரும் அறியும்படி செய்தார். உண்மையான ஹிந்து மதத்தைக் கொண்டாட விரும்புவோர்களுக்காக '**பிரம்ம ஸமாஜம்**' என்ற சங்கத்தை உண்டாக்கினுர்.

பென்டிங்க் உடன்கட்டை யேறுதலைத் தடுத்துச் சட்டம் செய்தபோது வைதிகர்கள் கூக்குரலிட்டனர். ராம் மோஹன் சஹகமனம் சாஸ்திரங்களில் சொல்லப் படவில்லை, பிற்காலத்தில் உண்டான கொடிய பழக்கம் என எடுத்துக் காட்டிக் கவர்னர் ஜெனரல் அத்திட் டத்தைப் பிடிவாதமாக அமுலுக்குக் கொண்டுவரும் படி செய்தார்.

அப்போது மொகலாய மன்னருக்கும் கம்பெனி யாருக்கும் சில வேற்றுமைகள் உண்டாயிருந்தன.

ராம் மோஹன்ராய் லண்டனில் செய்த காரியங்கள்

மேலதிகாரிகளிடம் தமது கக்ஷியைப் பேசி நன்மை பெறக் கருதிய மொகலாய மன்னர் ராம் மோஹன்ராயை லண்ட டனுக்கனுப்பினர்; அவரைப் பெருமை படுத்தக் கருதி அவருக்கு **ராஜா** என்ற பட்டத்தையும் அளித்தார். ராஜாராம் மோஹன்ராய் அங்ஙனமே சென்று மொகலாய அரச ருக்குச் சில அனுகூலங்களைப் பெற்றார். ஆயினும், அதனினும் மேலாக அவர் லண்டனில் வேறு பல தொண்டுகள் செய்தார். இந்நாட்டினர் சஹகமனத்தை நிறுத்தக்கூடாது என மேலதிகாரிகளுக்கு மனுச் செய்துகொண்டனர். அதை அவர்கள் ஆலோசிக்கும் போது ராம்மோஹன் இங்கிலாந்து சென்றிருந்தார். இவர் அதைக் கண்டனம் செய்து பேசி அவர்கள் அம் மனுவைத் தள்ளிவிடும்படி செய்தார்.

ராம்மோஹன் காமன் கமிட்டியார் முன் நில வரியை நிலவரமாக்குவதைக் குறித்தும், நியாய பரிபா லனத்தைக் குறித்தும், இந்தியர்களுக்கு உயர்ந்த உத்தியோகங்கள் தரப்பட வேண்டுமென்பதைக் குறித்

தும், கல்விப் பெருக்கைக் குறித்தும், பெண்களின் நிலைமையை உயர்த்தக் கருதியும் சாக்ஷியம் கொடுத்த தின் பயனை நாம் பெற்று அனுபவிக்கிறோம். அப் பெரியாரின் முயற்சி காரணமாக நாட்டில் கல்வி பெருகத் தொடங்கியது; பெண்களின் நிலைமை உயர்வு பெற்று வரலாயிற்று. ஓய்வின்றி உழைத்து வந்த ராம்மோஹன் நோய்வாய்ப்பட்டு கி. பி. 1833-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 27-ந் தேதியன்று இங்கிலாந்தில் காலகதியடைந்தார். அவர் உடல் அங்கேயே அடக்கஞ் செய்யப்பட்டது. அப்பெரி யாரின் சீடருள் ஒருவரான துவாரகநாத் தாகூர் பிரிஸ் டலுக்கருகில் அவருடலைப் புதைத்துள்ள இடத்தின் மீது ஒரு கல்லறை கட்டுவித்தார்.

பயிற்சிகள்

1. ராம்மோஹன் ராயின் பிறப்பும், வளர்ப்பும் எவ்வாறுனவை?

2. அவருடைய கல்விப் பெருக்கை விவரித்துக் கூறுக.

3. அவர் முக்கியமாக வெறுத்த பழக்கங்கள் யாவை?

4. அவர் எந்தெந்த சீர்திருத்தத்தில் ஈடுபட்டு உழைத்துவந்தார்? அவற்றைச் செய்விக்கக் கருதி அவர் செய்தன யாவை?

5. அவர் இங்கிலாந்துக்குச் சென்று ஆற்றிய தொண்டுகள் யாவை?

9. முதல் ஆப்கானிய யுத்தம்

பென்டிங்குக்குப் பிறகு **மெட்காஸ்ப்** என்பவர் சிறிது காலம் கவர்னர்-ஜெனரலாக வேலைபார்த்து வந்தார். இவருக்குப் பிறகு **ஆக்லண்ட் பிரபு** கி. பி. 1836-ல் இந்தியாவுக்கு வந்து கி. பி. 1842-வரை அரசியலை நடத்தினர். நாட்டின் நன்மையைக் கருதித் துரைத்தனத்தார் செய்யவேண்டியிருந்த கடமைகளுள் எல்லைப் பாதுகாப்பு முக்கியமானதாக இருந்தது. அதனால் ஆக்லண்ட் ஆப்கானிய விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டார்.

வடமேற்கு எல்லைப்புற விவகாரங்கள்

அப்பொழுது ருஷியர்கள் ஆசியாவில் சில நாடுகளை வென்று வன்மை மிகுந்திருந்தனர். அன்றியும், ஒருவர் மீதொருவர் பகை பாராட்டி வந்த பாரஸிக, ஆப்கானிய அரசர்கள் தங்கள் பகைமையை நீத்து நண்பர்களாயினர். இவ்விரண்டு நிகழ்ச்சிகளையுங் கண்டு அஞ்சிய லார்ட் ஆக்லண்ட் அப்போது ஆப்கானிய அமீராக விருந்த **தோஸ்த் முகம்மது**வை நண்பராக்கிக்கொள்ள விரும்பினர். அவர் அதன் பொருட்டு **அலெக்சாண்டர் பர்ன்ஸ்** என்பவரை அமீரிடம் தூதனுப்பினர். தம்மிடமிருந்து ரஞ்சித் ஸிங்க் பிடுங்கிக் கொண்டுவிட்ட பெஷாவரை ஆங்கிலேயர் தமக்கு மீட்டுக் கொடுத்தால் தாம் அவர்களுடன் நேசமாய் இருப்பதாகத் தோஸ்த் முகம்மது சொல்லியனுப்பினர். பஞ்சாப் அரசர் ஆங்கிலேயருடைய நண்பரானதனுல் அவர்கள் அதற்கு உடன்படவில்லை. அல்லாமலும், அமீர் ருஷியரோடு நட்பு பாராட்டினர்.

அதனால் லார்ட் ஆக்லண்ட் அவரை நீக்கிவிட்டுத் தம்முடன் நட்புப் பாராட்டுவதாகக்கூறிய **ஷாஷூஜாவை** அமீராக்க விரும்பினார். இவர் ஏற்கெனவே அமீராகவிருந்து நாட்டைவிட்டு ஓடிப்போயிருந்தார். இதுவே **முதல் ஆப்கானிய யுத்தத்தின்** காரணம்.

கி. பி. 1839-ல் ஆங்கிலேய படையொன்று கஜினியையும் காண்டஹாரையும் பிடித்துக்கொண்டபோது, தோஸ்த் முகம்மது பொகாராவுக்கு ஓடிவிட்டார். அதனால் ஷாஷூஜா அமீரானார். ஆப்கானியர் இவரை விரும்பாததனால் இவரைப் பாதுகாக்கக் கருதி ஆங்கிலேயர் காபூலில் ஒரு படையை வைத்தனர். பின்னர் தோஸ்த் முகம்மது கல்கத்தாவுக்கு வந்து ஆங்கிலேயரிடம் தஞ்சம் புகுந்தார்.

முதல் ஆப்கானிய யுத்தம்

கி.பி. 1841-ல் தோஸ்த் முகம்மதுவின் மைந்தரான அக்பர்கான் காபூலை எதிர்த்து அங்கிருந்த மெக்னாடன் என்ற ஆங்கிலேய சேனைத் தலைவரைக் கொன்று இன்னும் சிலரைச் சிறைப்படுத்தினார். அப்போது அவரை எதிர்த்துச் சண்டை செய்வதற்குப் போதுமான பலம் தங்களிடம் இல்லை என்பதை உணர்ந்த ஆங்கிலேயர்கள் ஜலலாபாத்துக்குச் செல்லப் புறப்பட்டார்கள். போகும் வழியில் அவர்கள் பசியினாலும், குளிரினாலும் மாண்டனர். இதையறிந்த மேலதிகாரிகள் ஆக்லண்டை வேலையினின்றும் நீக்கிவிட்டு **லார்ட் எல்லென்பரோவைக்** கவர்னர்-ஜெனரலாக நியமித்து இந்தியாவுக்கனுப்பினார்கள். லார்ட் எல்லென்பரோ இந்தியாவுக்கு வந்ததும் ஆப்கானியரை அடக்கும் பொருட்டுச் சில

ஆப்கானியரின் கிளர்ச்சி

வழிகளைக் கையாண்டார். பிறகு அவர் காபூலையும் கஜினியையும் கைப்பற்றினர். இறுதியில் ஷாஷுஜா கொலையுண்டு போனர். ஆகையால் தோஸ்த் முகம்மது அமீராக்கப்பட்டார். முதல் ஆப்கானிய யுத்தம் இவ்வாறு முடிவுபெற்றது.

குவாலியர் கலகம்

பிறகு, குவாலியரில் ஒரு கலகம் மூண்டபோது, கவர்னர்-ஜெனரல் நேரிற்சென்று அந்நாட்டுப் படைகளை **மஹாராஜபுரம், பண்ணியார்** என்ற இடங்களில் சண்டையிட்டுத் தோற்கடித்தார். குவாலியரைப் பரிபாலிப்பதற்கு ஒரு கமிஷனை ஏற்படுத்தினர். குவாலியர் நாட்டுப் படைகள் குறைக்கப்பட்டன.

ஸிந்து நாட்டை ஆங்கிலேயர் தம் ராஜ்யத்துடன் சேர்த்தல்

கி. பி. 1809-ல் லார்ட் மின்டோ **ஸிந்து** நாட்டு அமீர்களோடு சமாதானம் செய்து கொண்டார். அது முதல் அவர்கள் ஆங்கிலேயரோடு நட்புப் பாராட்டியே நடந்துவந்தனர். அவர்கள் ஆப்கானிய யுத்தத்தில் ஆங்கிலேயருக்குக் துணைசெய்தனர். அவ்வாறிருந்தும் எல்லென்பரோ காலத்தில் **ஸர் சார்ல்ஸ் நேபியர்** என்ற ஆங்கிலேய ஏஜெண்ட் அவர்களை வலிய சண்டைக்கு இழுத்து **மியானி, ஹைதராபாத்** என்ற இடங்களில் தோற்கடித்து ஸிந்து நாட்டை வென்று அதை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துவிட்டார்.

துரைத்தன இலாகாக்களுள் ஸிவில் இலாகாவும் ராணுவ இலாகாவும் முக்கியமானவை. பகைவரால் நாட்டுக்குத் துன்பம் உண்டாகாதபடி காப்பதும், உள் நாட்டில் கலகங்கள் பெருகிவிட்டால் அதை யடக்கி

அமைதியை உண்டாக்குவதும் ராணுவத்தின் கடமை. நாட்டின் சட்ட திட்டங்களை அமுலுக்குக் கொண்டு வருவதும், போலீஸ் படைகளைக் கொண்டு குடிகளுக்குள் அமைதியை நிறுவுவதும், நியாயம் வழங்குவதும் ஸிவில் இலாகாவின் தொழில்களாம். எனவே ஸிவில் இலாகா உத்தியோகஸ்தர்கள் ஆற்றும் தொண்டு ராணுவத்தின் தொழிலினும் குறைந்ததன்று. அவ்வாறிருந்தும் லார்ட் எல்லென்பரோ ஸிவில் உத்தியோகஸ்தரை விட ராணுவத்தையே அதிகமாகக் கவனித்து வந்ததைக் கண்ட ஆங்கிலேய மேலதிகாரிகள் அவரைத் திரும்பி வந்துவிடும்படி ஆக்ஞாபித்தனர். அதனால் அவர் கி. பி. 1844-லேயே இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டார்.

எல்லென்பரோ பரிபாலன முடிவு

பயிற்சிகள்

1. லார்ட் ஆக்லண்ட் தோஸ்த் முகம்மதுவை விலக்கி ஷாஷுஜாவை அமீராக்க விரும்புவானேன்?

2. மேலதிகாரிகள் ஆக்லண்டிடம் வெறுப்புற்று அவரைத் திருப்பி அழைத்துக்கொண்டது ஏன்?

3. குவாலியர் நாட்டோடு உண்டான யுத்தத்துக்குக் காரணம் என்ன? அதன் முடிவு என்ன?

4. ஸிந்து நாடு எவ்வாறு, ஏன் சேர்த்துக் கொள்ள பட்டது?

10. லார்ட் ஹார்டிஞ்சும், ஸீக்கிய யுத்தமும்

லார்ட் எல்லென்பரோவுக்குப் பின்பு கவர்னர் ஜெனரலாக நியமிக்கப்பட்டு வந்த **லார்ட் ஹார்டிஞ்சு** இந்திய பரிபாலனத்தைக் கி. பி. 1844 முதல் கி. பி. 1848 வரை நடத்தினர். இவர் அரசியலில் கைதேர்ந்தவர். இந்நாட்டில் இருப்புப் பாதைகள் போட முதன் முதல் முயன்றவர் இவரே. சஹகமனத்தையும், சிசுஹத்தியையும் தடுத்துச் சட்டங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும், அவை முழுவதும் நின்றபாடில்லை. ஹார்டிஞ்சு அவ்விரண்டையும் கண்டிப்பாக நிறுத்தினர். துரைத்தன இலாக்காக்களிலும் தொழிற்சாலைகளிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் வேலை செய்யும் வழக்கம் இவர் காலத்தில் நின்றுவிட்டது. இவர் பரிபாலனத்தில் ஸீக்கியரோடு யுத்தம் மூண்டது.

ஹார்டிஞ்சு பிரபு

ஹார்டிஞ்சு பிரபு

ஸீக்கியர்களைக் குறித்து ஏற்கெனவே இதற்கு முந்திய புத்தகத்தில் சிறிது கூறப்பட்டுள்ளது அல்லவா? ரஞ்சித்ஸிங்க் என்ற ஸீக்கிய ஸர்தார் தம்மையொத்த மற்றைய ஸர்தார்களை வென்று பஞ்சாப் முழுமைக்கும் அரசரானதை நாம் அறிவோம். அவர் ஆப்கானியரிடமிருந்து பெஷாவர், காஷ்மீரம், மூல்தான் நாடுகளை வென்று தமது ராஜ்

ரஞ்சித் ஸிங்கின் திறமையான நிர்வாகம்

யத்தோடு சேர்த்துக்கொண்டார். அவருடைய சைனியத்தில் அடங்கிய போர் வீரர்கள் ஐரோப்பியப்படை வீரர்களால் பயிற்சி அளிக்கப்பட்டு வீரத்திலும் தீரத்திலும் சிறந்து விளங்கினர்கள். அவரோடு ஆங்கிலேயர் அமிருதஸரஸில் சமாதான உடன்படிக்கை செய்துகொண்டதும், அவர் ஸட்லெஜ் நதியைத் தமது சாம்ராஜ்யத்தின் கீழ் எல்லையாக ஒப்புக்கொண்டதும் நமக்குத் தெரியும். ரஞ்சித் ஸிங்க் இருந்த வரையில் அவர் அந்த உடன்படிக்கையையொட்டி ஆங்கிலேயரோடு நட்பாகவே இருந்தார். அவர் பஞ்சாபில் வலுத்திருந்த வரையில் அயல் நாட்டினர் இந்தியாவிற்குள் நுழையவொட்டாமல் தடுத்துவந்தார். அவர் போரில் வல்லவர். துரைத்தனத்தை நடத்துவதிலும் கைதேர்ந்தவர். அவரைப் **பஞ்சாப் சிங்கம்** என்றனர். கி.பி. 1839-ல் அவர் காலமானுர். அவருக்குப் பிறகு ஸீக்கியர்கள் ஆங்கிலேயருடைய நட்பை நீத்தும், தங்களுக்குள்ளேயே சச்சரவுகள் செய்தும், சண்டைகள் பல செய்து அவற்றில் தோல்வியடைந்தும் தங்கள் சிறப்பையும், அதிகாரத்தையும் இழந்துபோயினர்.

ஸீக்கிய சேனை ஸட்லெஜ் நதியைக் கடத்தல்

ரஞ்சித் ஸிங்குக்குப் பின்பு அவர் இளைய மைந்தர் **திலீப் ஸிங்க்** என்பவர் பட்டத்திற்கு வந்தார். அப்போது அவருக்கு வயது ஐந்து. அதனுல், அவருடைய தாயும் மந்திரிகளும் அரசியலை நடத்திவந்தனர். இவர்களுக்கு ஸீக்கிய சேனைத் தலைவர்களை அடக்கி ஆளுந்திறமையில்லை. வெற்றி பெற்றுப் புகழடைய வேண்டுமென்று விரும்பிய ஸீக்கிய சேனைத் தலைவர்கள் அமிருதஸரஸ் உடன்படிக்



ஸீக்கிய யுத்தங்களை விவரிக்கும் படம்

கையைமீறி ஸட்லெஜ் நதியைக் கடந்து ஆங்கிலேய நாட்டின்மீது படையெடுத்தனர். அதனுல் ஸீக்கியர்களுக்கு ஆங்கிலேயரோடு யுத்தம் மூண்டது.

முதல் ஸீக்கிய யுத்தம்

கி.பி. 1845-ம் வருஷம் டிஸம்பர் மாதத்திலிருந்து கி.பி. 1846-ம் வருஷம் பிப்ரவரி மாதத்திற்குள் இரு திறத்தாருக்கும் **முட்கி, பிரோஸெஷா அலிவால், ஸுப்ராய்ன்** என்ற இடங்களில் நான்கு சண்டைகள் நடந்தன. இவற்றில் ஆங்கிலேயரே வெற்றிபெற்றனர். இந்தச் சண்டைகளில் ஆங்கிலேயருக்கு அளவில்லாத நஷ்டம் ஏற்பட்டது.

லாகூர் சமாதான உடன்படிக்கை

கடைசியில் இருதிறத்தாருக்கும் கி. பி. 1846-ல் **லாகூரி**ல் சமாதானம் ஏற்பட்டது. அவ்வுடன்படிக்கைப்படி திலீப்ஸிங்க் அரசராக இருந்துவரலானுர். அவருடைய படை குறைக்கப்பட்டது. யுத்த நஷ்டத்துக்கு ஈடாக திலீப்ஸிங்க் $1\frac{1}{2}$ கோடி ரூபாய் கொடுப்பதாகவும் ஸட்லெஜ் பீயாஸ் நதிகளின் இடையிலுள்ள **ஜலன்தா தோவாப்** என்னும் பிரதேசத்தை ஆங்கிலேயரிடம் கொடுப்பதாகவும் ஒப்புக்கொண்டார்.

குலாப்ஸிங்க் என்னும் ஜம்மு அரசருக்கு, காஷ்மீரம் 75 லக்ஷம் ரூபாய்க்கு ஆங்கிலேயர்களால் விற்கப்பட்டது. பிறகு ஆங்கிலேய ஸ்தானீகர் ஒருவர் லாகூரில் நியமனம் செய்யப்பட்டார். இத்துடன் முதல் ஸீக்கிய யுத்தம் முடிவுபெற்றது.

1848-ம் வருஷம் ஹார்டிஞ்ச் தமது வேலையை நீத்து இங்கிலாந்துக்குச் சென்றுர்.

பயிற்சிகள்

1. ஸீக்கியர்கள் ஆங்கிலேயரோடு சண்டை தொடங்கியது எவ்வாறு?

2. லாகூர் உடன்படிக்கை எப்போது, ஏன் செய்து கொள்ளப்பட்டது? அதன் நிபந்தனைகள் யாவை?

3. காஷ்மீரம் பஞ்சாபினின்றும் பிரிந்தது எவ்வாறு? ஏன்?

11. லார்ட் டல்ஹௌஸியும், வார்சற்ற நாடுகள் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டதும்

லாாட் டல்ஹௌஸி ஹார்டிஞ்ச் பிரபுவுக்குப் பிறகு கவர்னர் ஜெனரலாக நியமனம் செய்யப்பட்டு இந்தியாவுக்கு வந்தார். அவர் ஸ்காத்லாந்தியர். அவர் அரசியலில் சிறந்த பழக்கமுடையவர். அவர் இந்தியாவுக்கு ஆங்கிலேய ஆட்சிதான் நன்மை பயப்பது என்ற உறுதிகொண்டு ஆங்கிலேய ராஜ்யத்தையும் அதிகாரத்தையும் பெருக்கினர்.



டல்ஹௌஸி பிரபு

அவர் இந்திய பரிபாலனத்தை ஏற்றுக்கொண்ட சில மாதங்களுக்குள் **மூல் ராஜா** என்ற ஸீக்கிய கவர்னர் **மூல்தானில்** ஆங்கிலேயரை எதிர்த்துக் கலகம் செய்தார். பஞ்சாப் அரசருக்குக் கட்டவேண்டிய கப்பத்தைச் செலுத்தாமலும், அவர் நாட்டின் வரவு

செலவுக் கணக்குகளை ஆங்கிலேய ஸ்தானீகருக்கு அனுப்பாமலும் இருந்தார். அல்லாமலும் அவர் தமது கவர்னர் வேலையை ராஜிநாமா செய்து விடுவதாகவும் கூறினார். அதையொட்டி டல்ஹௌஸி ஒரு புதிய கவர்னரை நியமித்து மூல்தானுக்கு அனுப்பினார். மூல் ராஜா அவரையும் அவருடன் சென்ற இரண்டு ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களையும் திடீரென்று தாக்கிக் கொன்றுவிட்டார். உடனே நாட்டில் பெருங் குழப்பம் உண்டாயிற்று.

மூல்தானில் மூல் ராஜாவின் கலகம்

லார்ட் டல்ஹௌஸி திலீப் ஸிங்கின் தாயை நாடு கடத்தியும் திலீப் ஸிங்குக்குத் தமது பெண்ணை மணஞ் செய்விக்கக் கருதியிருந்த ஸர்தார் சத்ரா ஸிங்கைக் கவர்னர் வேலையிலிருந்து நீக்கியும் குடிகளின் கோபத்தைப் பெருக்கினார். அதனால் கலகம் அதிகமாயிற்று. அதுவே **இரண்டாவது ஸீக்கிய யுத்தத்து**க்குக் காரணமாம். **ராம் நகர், ஸாதுலாபூர், சிலியன்வாலா** என்ற இடங்களில் நடந்த மூன்று சண்டைகளிலும் ஆங்கிலேயர் பெருந் தோல்வியடைந்தார்கள். பிறகு **குஜராத்** என்ற இடத்தில் நடந்த பெரிய சண்டையில் ஸீக்கியர்கள் தோல்வி அடைந்தார்கள். டல்ஹௌஸி பஞ்சாபை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். திலீப் ஸிங்குக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து, இங்கிலாந்துக்கு அனுப்பிவிட்டார். ஸீக்கியப்படைகளின் ஆயுதங்கள் முழுவதும் கவர்ந்துகொள்ளப்பட்டன. அது முதலாக ஸீக்கியர்கள் ஆங்கிலே

இரண்டாவது ஸீக்கிய யுத்தம்

யரின் படைகளில் சிப்பாய்களாகச் சேர்ந்து புகழ் பெற்று முன்னணியில் நின்று வருகின்றனர்.

பஞ்சாப் மாகாண பரிபாலனக் கமிஷன்

லாகூர் உடன்படிக்கை ஏற்பட்டது முதல் **ஹென்றி லாரென்ஸ்** என்பவர் அங்கே ஆங்கிலேய ஸ்தானீகராக இருந்தார். இரண்டாவது ஸீக்கிய யுத்தத்தின் முடிவில் டல்ஹௌஸி பஞ்சாபை ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்த்துக் கொள்வதில் லாரென்ஸுக்கு மனமில்லை. எனவே அவர் தமது வேலையை ராஜீனமா செய்துவிட்டார். ஆனால் கவர்னர் ஜெனரல் பஞ்சாப் பரிபாலனத்தைத் தாம் அவரிடம் ஒப்புவிக்கப் போவதனால், அவர் தமதிஷ்டம் போல் குடிகளுக்கு நன்மைகள் பல செய்யலாம் எனக் கூறி வேலையிலமர்த்தினர். பிறகு டல்ஹௌஸி, ஹென்ரி லாரென்ஸ், அவர் சகோதரர் **ஜான் லாரென்ஸ், சார்ல்ஸ் மான்ஸன்** என்னும் மற்றுமொருவர் ஆகிய மூவரடங்கிய ஒரு கமிஷனைக்கொண்டு பஞ்சாபைப் பரிபாலிப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்.

ஹென்றி வெகு நல்லவர். இந்தியரிடம் அன்பும் மரியாதையும் உடையவர். ஆனால் ஜான் லாரென்ஸ் இந்தியர்களை அடக்கி ஆளவேண்டும் என்ற எண்ணமுள்ளவர். ஆகவே சகோதரர்களுக்குள் வேற்றுமை உண்டாகவும், இருவரும் வேலையை விட்டு விலகிக் கொண்டனர். அப்போது டல்ஹௌஸி தமது எண்ணப்படி நடந்த ஜான் லாரென்ஸைப் பஞ்சாபுக்குக் கமிஷனராக்கினர். ஹென்றியை ராஜபுதனத்துக்கு மாற்றிவிட்டார்.

பஞ்சாபில் அனேக ரஸ்தாக்கள் அமைக்கப் பட்டன. கால்வாய்கள் வெட்டப்பட்டன. பள்ளிக் கூடங்கள் ஏற்படுத்தப்பட்டன. ஜான் ஸீக்கியர்களைக் கடுமையாக நடத்தினபோதிலும், பல நன்மைகள் செய்துள்ளார். அவர் நிலவரியைக் குறைத்து நிலைவர மாக்கினர். அவர் விவசாயிகளுக்கு நிலத்தில் உரிமை கொடுத்தார். நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினர். அவரைப்போன்று அப்போது **நிகல்ஸன்** எல்லை மாகாணத்தைச் செவ்வனே பரிபாலித்து வந்தார். இம்மூவரில் ஹென்றியும், நிகல்ஸனும் சிப்பாய்க் கலகத் தின்போது இறந்துபோயினர். ஜான் வைஸிராயாக நியமிக்கப்பட்டு கி. பி. 1864 முதல் கி. பி. 1869 வரை இந்திய பரிபாலனத்தை நடத்தினர்.

இரண்டாவது பர்மா யுத்தம்

பர்மிய அரசர் யாண்டபூ உடன்படிக்கையை மீறி ஆங்கிலேய வர்த்தகர்களைக் கொடுமையாக நடத்தியும், ஸ்தானீகரை அவமதித்துத் துரத்தியும் ஒழுகியதனல் டல்ஹௌஸி அவருடன் சண்டை தொடுத்தார். பர்மாவை எதிர்க்க அவர் 19 போர்க் கப்பல்களை அனுப்பினர். முதலில் ரங்கூனும், பின்னர்ப் பெகுவும் ஆங்கிலேயர் வசமாயின. டல்ஹௌஸி ஐராவதி நதி தீரத்தில் அடங்கிய நாடாகிய **கீழ் பர்மா**வை ஆங்கிலேய சாம் ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டார். அதனேடு **இரண்டாவது பர்மா யுத்தம்** முடிவுபெற்றது.

நேபாளம், பூடான் ஆகிய நாடுகளுக் கிடையி லுள்ள **ஸிக்கிம்** நாட்டரசர் நெறி தவறி இரண்டு ஆங்கிலேய உத்தியோகஸ்தர்களைப் பிடித்துக்கொண்ட தனல், டல்ஹௌஸி ஒரு படையை அனுப்பி அவ்வர

சரை வென்று அவர் நாட்டின் ஒரு பகுதியைப் பெற்றுக் கொண்டார். அதில் **டார்ஜிலிங்க்** என்ற கோடை வாசஸ்தானம் உள்ளது.

அயோத்தி ஆங்கிலேய ராஜ்யத்துடன் சேர்க்கப்படல்

அயோத்தி நவாப்பு நாட்டைச் செவ்வனே பரிபாலனஞ் செய்யாததனால், டல்ஹௌஸி அவருக்கு வருஷம் 12 லக்ஷம் ரூபாய் உபகாரச் சம்பளம் கொடுக்க உடன்பட்டு **அயோத்தி**யை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். ஹைதராபாத்து நிஜாம் காப்புச் சேனையின் செலவை ஏற்றுக்கொண்டார் என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? ஆனால், அதை அவர் செவ்வனே நடத்தாததனால், டல்ஹௌஸி அவருக்குச் சொந்தமான பீராரைக் கைப்பற்றிக்கொண்டார். இவ்வாறு பீரார் ஆங்கிலேய ராஜ்யத்தோடு சேர்க்கப்பட்டது.

வாரிசில்லாத சுதேச ராஜ்யங்கள் ஆங்கிலேய ராஜ்யத்தில் சேர்க்கப்படல்

டல்ஹௌஸி துணைப்படை முறை ஏற்பாட்டைச் சிறிதும் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் சமயம் வாய்த்த போதெல்லாம் இந்திய அரசரைப் பரிபாலனத்தினின்றும் விலக்கி அவர்கள் நாடுகளை ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ள முற்பட்டார். மகப்பேறில்லாத இந்திய அரசர்கள் புத்திரனை தத்து எடுத்துக்கொள்வது வழக்கம். ஆங்கிலேய துரைத்தனத்தாரின் உத்தரவைப் பெற்றுக்கொண்டே புத்திரனை தத்து எடுத்துக் கொள்ளவேண்டும் என்றும், அவ்வாறின்றித் தத்து எடுத்துக்கொள்ளப்பட்ட புத்திரர் அரசுரிமையைப் பெறக்கூடாது என்றும் டல்ஹௌஸி ஏற்பாடு


ஆங்கிலேய ராஜ்யம்
ஆங்கிலேய ஆதரவுபெற்ற நாடுகள்
காபூல்
பெஷாவர்
காஷ்மீரம்
சிலியன்வாலா
குஜராத்
காண்டஹார்
ராம்நகர்
லாகூர்
மூல்டான்
பஹாவல்பூர்
மீரட்
டில்லி
நேபாளம்
ராஜபுத்திரர்கள்
அஜ்மீர்
ஆக்ரா
குவாலியர்
ஜான்ஸி
காசி
ஹைதராபாத்
முர்ஷிடாபாத்
இந்தூர்
போபால்
கல்கத்தா
மஹாநதி
சூரத்
நாகபுரி
பேரார்
பம்பாய்
நைஜாம் ராஜ்யம்
சதாரா
கோல்ஹாபூர்
கோவா
மங்களூர்
சென்னைப்பட்டினம்
பங்களூர்
மைசூர்
வங்காளக் குடாக்கடல்
மைல்கள்
0 100 200 300 400 500
65 70 75 80 85 90 95
35 30 25 20 15 10

1856-ல் இந்தியா

செய்தார். அன்றியும், ஆங்கிலேய மேலதிகாரிகள் ஸ்வீகாரம் செய்துகொள்ள அனுமதி தருவதில்லை. நெடுநாட்களாக நடைபெற்று வந்த இந்த வழக்கத்தைத் தடுத்ததனுல் அனேகர் ஆங்கிலேய துரைத்தனத்தார் மீது வெறுப்புக் கொண்டனர்.

கி. பி. 1848-ல் சதாரா அரசரான அப்பாஸாஹிப் வார்சின்றி இறந்து போனதனுல், சதாரா ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக் கொள்ளப் பட்டது. கி. பி. 1853-ல் ஜான்ஸி அரசர் இறந்து போனுர். அவர் மனைவி லக்ஷ்மிபாய் செய்து கொண்ட ஸ்வீகாரத்தை அங்கீகரிக்க மறுத்து டல்ஹௌஸி **ஜான்ஸி**யை ஆங்கிலேய சாம் ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். அதே மாதிரி **நாகப்பூர்** அரசரான ரகுஜி பான்ஸ்லே பிள்ளை யில்லாமல் இறந்து விட்டபோது, கவர்னர் ஜெனரல் அந்நாட்டையும் தமது ராஜ்யத்தோடு சேர்த்துக் கொண்டார். அந் நாடே மத்திய மாகாணங்களின் பெரும்பாகம் ஆகும். அதன் பெரும் பாகம் பருத்தி விளைவதற்கு ஏற்றது. **கராளி, ஸம்பல்புரி** நாடுகளும் அவ்வாறே கைப்பற்றப் பட்டன.

இவ்வாருக டல்ஹௌஸி பிரபு அனுசரித்த முறைக்கு **"சேர்க்கும் முறை"** அல்லது **"டாக்டிரின் ஆவ் லாப்ஸ்"** (Doctrine of Lapse) என்று பெயர். டல்ஹௌஸியின் இச்செயல்கள் பின்னுல் சிப்பாய்க் கலகத்துக்குக் காரணமாயின.

டல்ஹௌஸி காலத்தில் நாட்டிற்கு நன்மை பயக்கும் சீர்திருத்தங்கள் பல செய்யப் பட்டன. வங்காள மாகாணத்தின் பரிபாலனத்தைச் செவ்வனே நடத்துவதற்காக, அதற்கு ஒரு லெப்டினென்ட் கவர்

2. பஞ்சாப் பரிபாலனத்தை லாரென்ஸ் சகோதரர்கள் எவ்வாறு செய்தனர்? இவர்களுக்குள் இருந்த வேற்றுமை யாது ?

3. கீழ்ப் பர்மா எப்போது, எவ்வாறு, ஏன் ஆங்கிலேய சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது ?

4. டார்ஜிலிங் ஆங்கிலேயருக்கு எப்படிக் கிடைத்தது ?

5. பீரார், சதாரா, நாகப்பூர் இவைகள் ஆங்கிலேயருக்குச் சொந்தமானது எவ்வாறு ?

6. டல்ஹௌஸி செய்த சீர்திருத்தங்கள் யாவை ?

12. லார்ட் கானிங்கும் சிப்பாய்க் கலகமும்

சிப்பாய்க் கலகத்தின் காரணங்கள்

லார்ட் டல்ஹௌஸிக்குப் பிறகு கவர்னர் ஜெனரலாக வந்த **லார்ட் கானிங்க்** காலத்தில் வட இந்தியாவில் ஒரு பெரிய **சிப்பாய்க் கலகம்** உண்டாயிற்று. அதன் காரணங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம். குடிகளின் பழக்கவழக்கங்களில் உண்டான சில மாறுதல்கள் அதற்கு ஒரு காரணம். நியாயஸ்தலங்களிலும், துரைத்தனச் சாவடிகளிலும், பள்ளிக்கூடங்களிலும், வைத்திய சாலைகளிலும், ரயில் பிரயாணத்திலும் குடிகள் ஜாதி வேறுபாடுகளைக் கருதாமல் அனைவரும் சமமாக நடந்து வரவேண்டியிருந்தது. தீண்டாதார் என்றும், உயர்ந்த வகுப்பினர் என்றும், தாழ்ந்த ஜாதியினர் என்றும் வேற்றுமைகளைக் கொண்டொழுகிய ஜனங்கள் எல்லோரும் சமமாக நடந்துகொள்ள வேண்டியிருந்ததை வெறுத்தனர். தங்கள் ஜாதி பேதங்களைக் கெடுக்கக் கருதித் துரைத்தனத்

னரை நியமித்தார். அவர் ரஸ்தாக்களையும், இருப்புப் பாதைகளையும் போடுவித்தார். கால்வாய்களை வெட்டுவித்தார். அவர் பரிபாலனத்தில் சுமார் 4,000 மைல் தூரம் வரை தந்திக் கம்பிகள் போடப் பட்டன. அரையணுத் தாபல் முத்திரைச் சீட்டை முதன் முதல் செய்வித்தவர் டல்ஹௌஸியே.

டல்ஹௌஸி நாட்டுக்குச் செய்த நன்மைகள்

பொது வேலை இலாகா (Public Works Department) என்ற தனி அமைப்பை யுண்டாக்கிப் பாதைகள் போடவும், வாய்க்கால்கள் வெட்டவும், பாலங்கள் கட்டவும், ஏரி குளங்களை அமைக்கவும், ஆறுகளின் குறுக்கில் அணைகள் போடவும், பள்ளிக்கூடம், சத்திரம், கிராமச் சாவடி முதலிய வற்றைக் கட்டவும் ஏற்பாடு செய்தார். அவர் இந்நாட்டில் என்ஜினீரிங் பள்ளிக் கூடங்களை ஸ்தாபித்தார். துறைமுகங்களில் கப்பல்கள் தங்குவதற்கான வசதிகளையும், விளக்குக் கூடுகளையும் அமைப்பித்தார். மேனாட்டுக் கல்வியைப் பெருக்கக் கருதி அவர் இந்நாட்டில் பல கல்லூரிகளையும், கலாசாலைகளையும் ஸ்தாபித்தார். இந்தியர்கள் லண்டனுக்குச் சென்று படித்து, போட்டிப் பரிக்ஷையில் தேர்ச்சி பெற்று, ஸிவில் சர்வீஸ் உத்தியோகங்களுக்கு நியமிக்கப்படலானார்கள். ஆகையால் நம் நாட்டில் ஆங்கிலக் கல்வியும் மேநாட்டினரின் நாகரிகமும் ஓங்கி வளர்ந்தன.

பயிற்சிகள்

1. இரண்டாவது ஸீக்கிய யுத்தம் மூண்டதற்குக் காரணமென்ன? அதில் நடைபெற்ற சண்டைகள் யாவை? அவற்றின் முடிவு என்ன?

தார் எல்லோரையும் சமமாக நடத்துகின்றனர் என எண்ணினர் உயர்ந்த ஜாதியினர்.

அன்றியும் துரைத்தனத்தார் செய்த சில புதிய சட்டங்கள் அவர்களுக்கு அதிகமான கலவரத்தை உண்டாக்கின. ஒருவன் அனேக பெண்களை மணக்கும் பழக்கத்தைத் தடுக்க வங்காளத்தில் ஒரு சட்டம் செய்யப் பட்டது. கிறிஸ்தவர்களாய் விட்டவர்களுக்கும் குடும்பச் சொத்தில் உரிமையுண்டு என்ற சட்டம் பிறப்பிக்கப் பட்டது. கைம்பெண்கள் மறுபடி மணஞ் செய்து கொள்வதைச் சட்டங்கள் அங்கீகரித்தன. சிப்பாய்கள் கடலைக் கடந்து சென்று சண்டைகள் செய்ய வேண்டியிருந்தது. பழைய வழக்கங்கள் சிறிது சிறிதாக நீங்கி மேனாட்டுப் பழக்க வழக்கங்கள் கையாளப்பட்டன. இவை யாவும் இந்துக்களைக் கிறிஸ்தவர்களாக்கக் கருதித் துரைத்தனத்தார் செய்யும் சூழ்ச்சிகள் என்றெண்ணிப் பொது ஜனங்கள் ஆங்கிலேய அதிகாரத்தை வெறுத்தனர்.

வெள்ளங்களினால் வேளாண்மை குன்றிப் போதுமான உணவுப் பொருள்களில்லாமல் குடிகள் வருந்த வேண்டி வந்தது. அன்றியும், நாட்டில் தொத்து வியாதிகள் பரவிக் குடிகள் மாண்டனர். அதனாலும் வறுமைத் துன்பம் பெருகியது. இவற்றிற்கெல்லாம் துரைத்தனத்தாரே காரணம் என்றெண்ணிய பலர் அவர்கள் மீது கோபங் கொண்டனர். போர் வீரர்கள் தங்கள் கஷ்டத்துக்குத் தக்க சம்பளம் கொடுக்கப்படவில்லை என்று துரைத்தனத்தாரை வெறுத்தனர். இவ்வாறு பொருளாதாரக் குறைவினால் ஜனங்கள் துரைத்தனத்தார் மீது பகை பாராட்டினர்.

வெல்லெஸ்லி துணைப் படை முறையைக் கொண்டும், டல்ஹௌஸி வார்சற்ற நாட்டுச் சேர்க்கை முறையைக் கொண்டும் ஒழுகியது இந் நாட்டரசர் பலருக்கு வருத்தத்தைத் தந்தது. துரைத்தனத்தார் டில்லிச் சக்ரவர்த்தி பஹதூர் ஷாவையும், அவர் மைந்தரையும் டில்லியை விட்டுப் போகும்படி ஆக்ஞாபித்தனர். ஜான்ஸி ராணியார் செய்து கொண்ட ஸ்வீகாரத்தை ஒப்புக் கொள்ளாமல் அந் நாட்டைக் கைப்பற்றினர். நானு ஸாஹிபுக்குக் கொடுத்து வந்த உபகாரச் சம்பளத்தை அவர் மைந்தருக்குக் கொடுக்க மறுத்தனர். வேறு பல அரசர்களின் உரிமைகளையும், செல்வாக்கையும் குறைத்தனர். இவர்கள் எல்லோரும் ஆங்கிலேயருடன் சண்டை யிட்டு வென்று தங்கள் நாடுகளையும் சுதந்திரங்களையும் மீட்டுக் கொள்வதற்குத் தக்க சமயம் வாய்ப்பதை எதிர்ப் பார்த்திருந்தனர். இங்ஙனம் இந்தியச் சிற்றரசர்களும், பொது ஜனங்களும், சிப்பாய்களும் துரைத்தனத்தாரிடம் வெறுப்புக் கொண்டு பகை பாராட்டினர். அவ்வாறான சமயத்தில் வங்காளத்திலிருந்த போர் வீரர்களுக்குப் பசு, பன்றி இவைகளின் கொழுப்புத் தடவிய தோட்டாக்களைக் கொண்டு சுடும் துப்பாக்கிகள் கொடுக்கப் பட்டன. அவற்றை ஹிந்து சிப்பாய்களும், முஸ்லீம் சிப்பாய்களும் தீண்டவும் மறுத்துக் கலகம் செய்தனர்.

கலகம் பரவுதல்

1857-ம் வருஷம் **மீரட்** என்னும் இடத்தில் சிப்பாய்களின் கலகம் ஆரம்பித்தது. அங்கிருந்த சிப்பாய்கள் சிறைகளை உடைத்தும், கைதிகளை விடுவித்தும், ஐரோப்பிய உத்தியோகஸ்தர்களைக் கொன்றும் பல துன்பங்களை

பெற்ற இடங்களில் சொல்லரிய கொடுமைகள் செய் யப்பட்டன.

ஆனல், இக்கலகம் சில இடங்களிலேதான் பர விற்று. அது பம்பாய்க்கும், சென்னைக்கும் பரவிவர வில்லை. பல இந்திய மன்னர்கள் அதில் சேரவில்லை. சிலர் அப்போது துரைத் தனத்தாருக்குப் பேருதவிகள் செய்த னர். கூர்க்கரும், ஸீக்கியரும் கலகத்தை அடக்குவதில் முன்னின்று துணை புரிந்தனர்.

கலகம் அடக்கப் பட்டதற்குக் காரணங்கள்

பயிற்சிகள்

1. பொது ஜனங்களும், சிப்பாய்களும், இந்திய அரசர்களும் ஆங்கிலேயர்மீது வெறுப்புக் கொண்டதின் காரணங்கள் யாவை?
2. சிப்பாய்க் கலகம் மூண்டது எங்கே, எப்போது, எவ்வாறு?
3. கலகங்கள் நடந்த இடங்களில் உண்டான தீமை கள் யாவை?
4. கலகத்தை அடக்குவதில் உதவியவர்கள் யாவர்?
5. கலகம் எங்கெங்கே பரவி வரவில்லை?

13. விக்டோரியா மஹாராணியாரின் சாசனம்

ஆங்கிலேய பார்லிமெண்டும் பொது ஜனங்களும் வர்த்தகக் கம்பெனி மீது ஏற்கெனவே வெறுப்புக் கொண்டிருந்தனர். சிப்பாய்க் கலகத் துக்குப் பின்பு, கம்பெனியார் இந்திய துரைத்தனத்தை நடத்துவதில் அவர் களுக்குச் சிறிதும் மனமில்லை. அதனல் கி. பி. 1858-ல் பார்லிமெண்டார் இந்திய பரிபாலன சம்பந்தமாக ஒரு சட்டத்தைப் பிறப்பித்து

பார்லிமெண்டார் இந்திய நிர்வா கத்தை ஏற்றுக் கொள்ளல்

விளைவித்தனர். பின்னர் இவர்கள் டில்லி சென்று அங்கிருந்த சிப்பாய்களுடன் சேர்ந்துகொண்டு டில்லியின் பெரும்பாகத்தைக் கைப்பற்றிக்கொண்டனர். இவர்கள் பஹதூர் ஷாவைச் சிங்காதனத்தில் வைத்து அவரே அரசர் எனப் பெருமுழக்கம் செய்தனர். நாநு ஸாஹிபும், ஜான்ஸிராணியும் தாங்கள் இழந்திருந்த அதிகாரத்தை மீட்டுக்கொண்டனர். சிப்பாய்கள் ஜான்ஸியிலும், கான்பூரிலும் இன்னும் பல இடங்களிலும் கைதிகளை விடுவித்தும், ஊர்களைக் கொள்ளையடித்தும், குற்றமற்றவர்களைக் கொன்றும் தீங்கிழைத்தனர்.

கலகம் அடக்கப்படுதல்

ஹாவ்லக் என்ற தளகர்த்தர் நாநு ஸாஹிபை எதிர்த்து வென்று கான்பூரையும் பிடித்துக்கொண்டார். **டான்டியாடோபி** என்ற நாநு சாகிபின் தளகர்த்தர் மரண தண்டனைக்கு உட்பட்டார். பிறகு ஹாவ்லக் லக்னௌவை நோக்கிச் சென்றார். இதனிடையில் **நிகல்ஸன்** டில்லிக்குச் சென்று அதைக் கைப்பற்றினார். அப்போது ஆங்கிலேய அதிகாரிகள் பஹதூர் ஷாவை ரங்கூனுக்கு அனுப்பிவிட்டனர். இவர் ரங்கூனில் கி. பி. 1861-ல் இறந்துபோனார். இவருடைய மைந்தர்கள் இருவர் மரண தண்டனை யடைந்தனர். ஜான்ஸிராணி ஆண்வேடம் தரித்துப் போர்புரிந்து உயிர் துறந்தாள். **லக்னௌ** கலகத்தில் **ஹென்ரி லாரென்ஸ்** கொலையுண்டார். ஹாவ்லக்கும், காம்பெலும் அங்குச்சென்று அவர் சேனையைக் காப்பாற்றினர். இரண்டு வருஷங்கள் வரையில் லக்னௌவிலும், கான்பூரிலும் அமைதி ஏற்படவில்லை. கலகங்கள் நடை

மஹா சாசனத்தின் விவரங்கள்

"உலகின் பல தேசங்களிலும் பரவியுள்ள ஆங்கிலேய நாடுகளனைத்துக்கும் அரசியான விக்டோரியா மஹாராணி என்ற நாம் இதுவரை எம் பொருட்டுக் கீழிந்தியா வர்த்தகக் கம்பெனியார் பரிபாலித்து வந்த இந்திய ராஜ்யத்தை இதுமுதலாக யாமே ஆட்சிசெய்து வருவோம். இதுவே நமது பார்லிமென்ட் சபையார் விரும்புவதும்."

"எமது இந்தியக் குடிகள் எம்மிடமும், எமக்குப் பிறகு பட்டத்துக்கு வரும் அரசர் அரசிகளிடமும் அன்பு பாராட்டியும், நன்றியறிதலோடும் நடந்தொழுகுமாறு நாம் அவர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். அவர்கள் நாம் இந்திய பரிபாலனத்தை நடத்தக் கருதி அப்போதைக் கப்போது நியமித்தனுப்பும் உத்தியோகஸ்தர்களுக்கு அடங்கி நடக்கவேணுமென்று கோருகிறோம்."

"கம்பெனியாரால் நியமிக்கப்பட்டு இப்போது வேலைபார்த்து வருகின்ற ஸிவில் உத்தியோகஸ்தர்களையும், ராணுவ அதிகாரிகளையும் நாம் அங்கீகரிக்கிறோம். அவர்கள் எமது ஆணைக்கும், சட்ட திட்டங்களுக்கும் அடங்கி நடக்க வேண்டும்."

"கம்பெனியார் இந்திய அரசர்களோடு செய்துகொண்டுள்ள உடன்படிக்கைப்படி யாம் நடக்க உடன்படுகிறோம். அவற்றின் நிபந்தனைகளையொட்டி இந்திய மன்னர்களும் எம்மிடம் நடந்து கொள்வார்களென நம்புகிறோம்."

"எமக்கு இந்தியாவில் இப்போதுள்ள ராஜ்யத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஆசை இல்லை. இந்திய

இந்தியாவின் அரசியலைக் கம்பெனியாரிடமிருந்து வாங்கிக் கொண்டனர். அச்சட்டத்தின்படி இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் நாடுகளை **ஸெகிரிடரி அவ் ஸ்டேட் பார் இந்தியா** (Secretary of State for India) என்ற இந்திய காரியதரிசி பதினைந்து மெம்பர்களுள்ள ஒரு சபையின் உதவியைக்கொண்டு பரிபாலிக்க ஏற்பாடு செய்யப்பட்டது. இனி ஆங்கிலேய அரசர் அரசிகளே இந்திய வைஸிராயையும், மாகாண கவர்னர்களையும் நியமித்தனுப்ப வேண்டும். இந்திய கவர்னர் ஜெனரல் ஆங்கிலேய அரசரின் பிரதிநிதி என்பதைக் குறிக்க அவருக்கு **வைஸிராய் அண்ட் கவர்னர் ஜெனரல்** என்ற பெயர் உண்டாயிற்று. இவரும் இவருடைய நிர்வாக சபையும் இந்திய காரியதரிசிக்கு உத்தரவாதமானவர்கள். கம்பெனியாருடைய கடனை இந்தியாவின் வருமானத்திலிருந்தே தீர்க்கவேண்டும். இந்திய வரிப்பணத்திலிருந்து அயல்நாட்டுச் சண்டைகளுக்கான செலவைச் செய்யக்கூடாது.

விக்டோரியா மஹாராணியார்

விக்டோரியா மஹாராணியார் இந்திய பரிபாலனத்தைத் தாம் ஏற்றுக்கொண்டபோது, 1858-ம் வருஷம் நவம்பர் மாதம் முதல் தேதியன்று நமக்கு ஓர் **அறிக்கை** செய்துள்ளார். அதைத்தான் நாம் **மஹாசாசனம்** என்று இன்னும் கொண்டாடி வருகிறோம். அதிலடங்கிய முக்கிய விஷயங்கள் பின்வருவனவேயாம் :—

மன்னர்களின் நாடுகளைக் கவர்ந்துகொள்ள வேண்டுமென்ற எண்ணம் எமக்குச் சிறிதும் இல்லை. அவ்வாறே அம்மன்னர்களும், பிறரும் எமது ராஜ்யத்தில் நெறிதவறி நுழையவாவது, எமது ஆக்ஞையை மீறி நடக்கவாவது நாம் இடந்தரமாட்டோம்."

"யாம் எமது உரிமைகளையும், பெருமையையும், மதிப்பையும் சிறப்பாகக் கொண்டாடுவதைப்போலவே இந்திய மன்னர்களின் உரிமைகளையும், கௌரவத்தையும், மேன்மையையும் போற்றி வருவோம். நாட்டில் அமைதியை நிறுவியும், நேர்மையாகச் செங்கோல் செலுத்தியும் இந்திய அரசர்கள், குடிகள், ஆகியோரின் க்ஷேமத்தையும், முன்னேற்றத்தையும் பாதுகாத்தும் பெருக்கியும் வருவோம். அவர்களுக்கு யாம் செய்ய வேண்டிய கடமைகளைச் சரிவரவும், முழுமனத்தோடும் செய்து அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் பெறக் கருதுவோம்."

"நாம் கிறிஸ்தவ மதத்தைக்கொண்டு அதன் கொள்கைகளைப் பாராட்டி நடந்து வருகிறோம். அதுபோன்றே எமது குடிகளும் நடக்க வேண்டுமென்று யாம் விரும்பவில்லை. அவர்கள் அனைவரும் மத விஷயங்களில் பூர்ணமான சுயேச்சையுடன் நடந்தொழுகலாம். அல்லாமலும், மத வேறுபாடு எந்த நன்மை தீமைகளுக்கும் காரணம் ஆகக்கூடாது என்பதும், சட்டதிட்டங்களை அமுலுக்குக் கொண்டுவரும் வகையில் எல்லா மதத்தினரும் வேற்றுமையின்றிக் கருதப்படவேண்டும் என்பதும் எமது ஆணை. எமது உத்தியோகஸ்தர்கள் குடிகளின் மதக் கொள்கைகளிலாவது,

பழக்க வழக்கங்களிலாவது மாறுபாட்டை உண்டாக்கச் சிறிதும் முயலுதல் கூடாது."

"துரைத்தன உத்தியோகஸ்தர்களை நியமிப்பதில் கல்வி, ஒழுக்கம், குணம் முதலியவற்றைக் கொண்டல்லாது ஜாதி மதங்களைக் கருதி யாதொன்றையும் செய்யக்கூடாது என்பதே எமது விருப்பம். உயர்வு, தாழ்வு என்ற வேற்றுமைகளின்றியும் பக்ஷபாதமில்லாமலும் அவரவர்களுடைய கல்வி யோக்கியதைகளுக்குத் தக்கபடி உத்தியோகஸ்தர்களை நியமிக்க வேண்டுமென்பது எமது ஆக்ஞை."

"எமது குடிகள் பரம்பரையாக அனுபவித்து வரும் சொத்துக்களிடத்து எவ்வளவு அன்பு பூண்டுள்ளார்கள் என்பதை யாம் அறிவோம். அதனால் நாம் அவர்களிடமிருந்து எமக்கு நியாயமாய்க் கிடைக்க வேண்டிய வரிகளை வசூலித்துக்கொண்டு அவர்கள் உரிமையைக் கவனித்து வருவோம். நாட்டின் நன்மையை நாடிச் செய்யப்படும் சட்டதிட்டங்கள் யாவும் குடிகளின் பழக்க வழக்கங்களையும், உரிமைகளையும் ஒட்டியே செய்யப்படும்."

"கலகம் முழுவதும் அடங்கி நாட்டில் அமைதி ஏற்பட்டதும், நாம் இந்தியாவின் கைத்தொழில்களைப் பெருக்கியும், பொது நன்மைக்கான வேறு நற்காரியங்களைச் செய்தும் வருவோம். குடிகளின் நன்மையை நாடியே அரசியல் நடைபெற வேண்டுமென்பது எமது ஆவல். துரைத்தனத்தின் வன்மை குடிகளின் நன்மையைப் பொறுத்தது என்பதை நாம் உணர்ந்துள்ளோம். குடிகள் துரைத்தனத்தில் மனத்திருப்தியடைந்து வாழ்வாரேல், துரைத்தனத்தாருக்கு அதனினும் மேலான

பாதுகாப்பு இல்லை. அவர்கள் நம்மிடம் நன்றிபாராட்டி நடந்தொழுகுவதையே நாம் சிறந்த வெகுமதியாகக் கொள்ளுவோம். எல்லாம் வல்ல இறைவன் நாம் எதையும் குடிகளின் நன்மையை நாடியே செய்யுமாறு அருள்புரிய வேண்டுமெனக் கோருகிறோம்."

இந்த அறிக்கையில் நம்முடைய கடமைகளும் உரிமைகளும், துரைத்தனத்தாருடைய கடமைகளும் காணப்பட்டுள்ளதனால் நாம் அதைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். மஹாராணியாரது அறிக்கையை அவருக்குப் பிறகு பட்டத்துக்கு வந்த மன்னர்கள் கருணையுடன் உறுதிபடுத்திக் கூறியுள்ளார்கள்.

பயிற்சிகள்

1. கம்பெனியாரிடமிருந்து இந்திய அரசியல் ஆங்கிலேய அரசிடமும் பார்லிமெண்டிடமும் மாறிவிட்டதேன்?
2. 1858-ம் வருஷத்திய அரசியல் சட்டத்தின் நிபந்தனைகள் யாவை?
3. மஹாராணியாரின் அறிக்கையில் காணப்பட்டுள்ள நமது உரிமைகளும், கடமைகளும் யாவை?
4. மத விஷயமாகவும், உத்தியோகங்கள் சம்பந்தமாகவும் ராணியார் கூறியுள்ள உறுதிமொழி என்ன?

14. லார்ட் கானிங்கும் சீர்திருத்தங்களும்

கானிங் பிரபு அமைதியை நாட்டல்

சிப்பாய்க் கலகத்தின்போது கவர்னர் ஜெனரலாக இருந்த லார்ட் கானிங், 1858-ம் வருஷத்திய அரசியல் சட்டத்தை யொட்டி முதல் வைஸிராயாக நியமிக்கப்பட்டார். சிப்பாய்க் கலகம் காரணமாக குடிகளிடத்தும், ஐரோப்பிய அதிகாரிகளிடத்தும் கோபமும், மனக்கொதிப்பும் தோன்றியிருந்தன. இவற்றைப்

போக்கிச் சமாதானத்தை உண்டாக்குவதற்குக் கானிங்க் பிரபுவினும் சிறந்த வேறொருவர் கிடைத்திருக்கமாட்டார். அவர் பொறுமையாகவும், தயையுடனும் நடந்து அமைதியை யுண்டாக்கியது பெரிதும் பாராட்டத்தக்கது. அவர் இந்தியரிடம் மிகுந்த அன்பாக நடந்து கொள்ளுகிறார் எனக் கருதிய ஐரோப்பியர் அவருக்குத் '**தயாள கானிங்க்**' என்ற பரிகாசப் பெயரையிட்டனர். உண்மையில் அப்பெயர் அவருக்குப் பொருந்தியதேயாகும். அப்போதிருந்த ஐரோப்பியர்கள் கோபத்தினால் அவர்மீது வெறுப்புற்று அவரைத் திருப்பி அழைத்துக்கொண்டுவிட வேண்டுமென விரும்பினரேனும், அவர் சிறந்த ராஜதந்திரி என்பதை இப்போது பலரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

கானிங்க் வைஸிராயானதும், சிப்பாய்க் கலகத்தின்போது துரைத்தனத்தாரிடம் அன்பாக நடந்துகொண்ட இந்திய மன்னர்களைப் பெருமைப்படுத்துவதற்காக **ஆக்ரா**வில் ஒரு தர்பார் நடத்தினார். அப்போது அவர் அவர்களுக்குப் பட்டங்கள் அளித்தும் நாடுகள் தந்தும் அவர்களுடைய அன்பையும் ஆதரவையும் உறுதிப்படுத்தினார். அவ்வாறான தர்பார்களை அவர் அலஹாபாத்திலும், கான்பூரிலும், ஜப்பல்பூரிலும்கூட நடத்தி இந்திய அரசர்களுடன் நட்புப் பாராட்டினார். இவ்விடங்களிலெல்லாம் மஹாராணியாரின் அறிக்கை யாவருமறிய விளம்பரம் செய்யப்பட்டது. இங்ஙனம் செய்து நாட்டில் அமைதியை நிறுவினதையன்றி, அவர் பல சிறந்த சீர்திருத்தங்களையும் செய்து உதவினார்.

சைனியத்தில் மன்னர் படையென்றும் கம்பெனியார் படையென்றும் இருந்த வேற்றுமையை ஒழித்து அவை ஒன்ருக்கப்பட்டன. வைஸிராய் சைனியத்தைப் பெருக்கி அவற்றைப் புதுமுறையில் அமைத்தார். கம்பெனியார் பரிபாலனத்தில் செலவு பெருகிக் கடன் மேலிட்டுவிட்டது. அதனுல் வருமானத்தை அதிகமாக்கக் கருதி, கானிங்க் வருமானவரியை விதித்துக் காகித நாணயங்களை வெளியிட்டார்.

சைனிய அமைப்பு திருத்தப்படல்

கி. பி. 1860-ல், **இந்தியன் பீனல் கோட்** (Indian Penal Code) என்ற சட்டமும், கி. பி. 1861-ல் **இந்தியன் சிவில் ப்ரொஸீஜர் கோட்** (Indian Civil Procedure Code), **இந்தியன் க்ரிமினல் ப்ரொஸீஜர் கோட்** என்ற சட்டங்களும் அமுலுக்கு வந்தன. முந்திய சட்டம் குற்றங்களை வகுத்து அவற்றிற்கான தண்டனைகளை வரையறுத்தது. பிந்தியவை இரண்டும் முறையே சொத்துக்கள் சம்பந்தமாகவும், குற்றங்கள் சம்பந்தமாகவும் நடைபெறும் வழக்குகள் எவ்வாறு விசாரிக்கப்படவேண்டும் என்பதைப் பற்றிய விவரங்கள் பொருந்தியனவாம்.

சட்டங்கள் வகுக்கப்படல்

கானிங்க் அரசியல் சம்பந்தமான சில திருத்தங்களையும் செய்வித்தார். முன்பு கவர்னர் ஜெனரலின் நிர்வாக சபையினர் எல்லோரும் துரைத்தன சம்பந்தமான எல்லா விஷயங்களையும் கவனித்து வந்தனர். இப்போது நிர்வாக சபையின் அங்கத்தினர் ஒவ்வொருவரும் தனித்தனியாகக் கவனிக்க

அரசியல் நிர்வாக, சட்டசபைகள்

வேண்டிய விஷயங்கள் வரையறுக்கப்பட்டுக் **காபி னெட்** (Cabinet) முறை அனுஷ்டிக்கப்பட்டது. இந்தியாவையொட்டிய சட்டங்களைச் செய்வதற்கான சட்டசபை பெரிதாக்கப்பட்டு அதற்குப் பொதுஜனங் களின் பிரதிநிதிகள் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர். முதலில் சென்னைக்கும், பம்பாய்க்கும் பிறகு மற்றைய பெரிய மாகாணங்களுக்கும் அவ்வா ருன சட்டசபைகள் உண்டாக்கப்பட்டன. இவைகள் செய்யும் சட்டம் வைஸிராயினுல் ஆமோதிக்கப்பட வேண்டும். சிவில் ஸர்விஸ் என்ற வகுப்பில் சேர்ந்த வர்கள் எந்தெந்த அலுவல்களுக்கு நியமிக்கப்படலாம் என்பதைக் குறித்தும் சில உத்தியோகங்களுக்கு அவர் களையே நியமிக்க வேண்டுமென்பதைக் குறித்தும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

நீதிமன்றங்கள்

கம்பெனியார் உண்டாக்கியிருந்த உயர் நீதிமன் றங்களுக்குப் பதிலாக அரசராணையி லடங்கிய **ஹைகோர்ட்டுக்கள்** என்ற மேலான நீதி ஸ்தலங்கள் கல்கத்தாவிலும், பம்பா யிலும், சென்னையிலும் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த நீதிமன்றங்களின் நீதிபதிகளுள் மூன்றிலொருபங்கினர் இந்தியர்களாக இருக்க வேண்டுமென்ற நிபந்தனையும் ஏற்பட்டது. இதற்கிணங்க ராஜா ராம் மோஹன் ராயின் மைந்தரான **ராமப்பிரஸாத ராய்** ஓர் உயர் நீதிபதியானுர்.

குடியானவர்களுக்கு உரிமை

வங்காளம், அயோத்தி, பீரார், மத்திய மாகா ணங்கள் ஆகிய இடங்களில் தொடர்ச்சி யாகப் பன்னிரண்டு வருஷ காலம் விவ சாயி ஒருவன் பயிர் செய்துவந்த நிலத்தி

னின்றும் நிலத்தின் சொந்தக்காரர் அவனை நீக்கக் கூடாதபடி ஒரு சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இச் சட்டத்தினுல் பயிர்த் தொழிலாளர்கள் பலர் நன்மை யடைந்தனர்.

மேனுட்டுக் கல்வியை இந்நாட்டில் பரப்ப அப்போது மூன்று **பல்கலைக் கழகங்கள்** (Universities) கல்கத்தாவிலும், பம்பாயிலும், சென்னைப்பட்டினத்திலும் ஸ்தாபிக்கப்பட்டன. பிள்ளையில்லாத இந்திய அரசர்கள் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம் என்று அனுமதி கொடுக்கப்பட்டது.

தமது சக்தியை மீறி உழைத்துப் பல நன்மைகளைச் செய்து உதவிய கானிங்க் பிரபு, பதவியிலிருந்து நீங்கித் தம்மூர் சென்ற சிறிது காலத்திற்குள்ளேயே இறந்துபோனுர்.

பயிற்சிகள்

1. நியாயபரிபாலன சம்பந்தமாக கானிங் பிரபு காலத்தில் உண்டான சீர்திருத்தங்கள் யாவை?

2. வருமானத்தைப் பெருக்கக் கருதி கானிங்க் பிரபு யாது செய்தார்?

3. காபினெட் முறை என்பது என்ன?

4. கானிங்க் விவசாயிகளுக்கு என்ன நன்மை செய்தார்?

15. லார்ட் மேயோவும் பொருளாதாரச் சீர்திருத்தங்களும்

லார்ட் கானிங்குக்குப் பிறகு இந்திய வைஸிராயாக நியமிக்கப்பட்டு வந்த **லார்ட் மேயோ** கி. பி. 1869-ல், இந்தியாவுக்கு வந்து மூன்று வருட காலம் வேலைபார்த்து நாட்டின் நன்மையை நாடி உழைத்தார். அவருடைய முயற்சியினுல் இந்நாட்டின் சுற்றுப்புறத்து மன்னர்கள் பலரும் ஆங்கிலேயரோடு நட்புப் பாராட்டி நடந்துவந்தனர். அவர்களுடைய நாடுகளை வென்று தங்கள் சாம்ராஜ்யத்தைப் பெருக்கவேண்டுமென்ற நோக்கம் ஆங்கிலேயருக்கு இல்லை என்று வைஸியாய் அம்மன்னர்களுக்கு உறுதி கூறி அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் நாட்டில் வன்மை பொருந்தியிருக்குமாறு செய்தார். அவர் ருஷியாவுக்கும் ஆப்கானிஸ்தானத்துக்கும், பாரஸிகத்துக்கும், பலுசிஸ்தானத்துக்கும் இடையில் எல்லைகளைத் திருத்தமாக அமைப்பித்து அவைகளுக்குள் சண்டை ஏற்படாதபடி செய்தார்.

எல்லைப்புற ராஜ்யங்களுடன் தொடர்பு



மேயோ பிரபு

மேயோ அம்பாலாவில் ஒரு தர்பார் நடத்தினுர். அதற்கு அக்காலத்திய ஆப்கானிய அமீரை வரவழைத்தார். **ஷீர் அலி** இந்திய எல்லைப் பாதுகாப்புக்காக ஆங்கிலேயர் தமக்கு ஒவ்வொரு வருஷமும் பண உதவி

செய்வார்கள் என்றெண்ணினர். மேயோ அங்ஙனம் செய்ய இயலாது என்பதை அவருக்குக் கூறி ஏற்கெனவே ஆங்கிலேயர் ஒப்புக்கொண்டபடி அவருக்கு ஒரு லக்ஷம் பவுன் இனமாகத் தந்தார். அன்றியும், அமீர் நியாயமாக வேண்டும்போது அவருக்குப் பணமும், போர்ப் படைகளும், போராயுதங்களும் தந்து உதவுவதாக வைஸிராய் வாக்களித்தார்.

ஆப்கானியருடன் நட்பு

மேயோ பிரபு ரஸ்தாக்களையும், இருப்புப்பாதைகளையும் போடுவித்து, நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கினர். அவர் **விவசாய இலாகாவை** உண்டாக்கினர். அவர் மாகாண துரைத்தனங்களுக்கு வரி வசூலிப்பதிலும், அதைச் செலவு செய்வதிலும் அதிகமான சுதந்திரத்தைக் கொடுத்தார். இதற்குமுன்பு அகில இந்திய துரைத்தனத்தாருடைய உத்தரவில்லாமல் மாகாண துரைத்தனத்தார் யாதொரு செலவும் செய்யக்கூடாது என ஏற்பட்டிருந்தது. ஒரு மாகாண சர்க்காருக்குப் பணம் வேண்டுமானல் அது அகில இந்திய சர்க்காரைக் கேட்கவேண்டியிருந்தது. அகில இந்திய துரைத்தனத்தார் தங்களிடமிருந்த பணத்தை அந்த மாகாணத்துக்கும் மற்றைய மாகாணங்களுக்கும் அவற்றின் தேவைகளுக்கிணங்கப் பகிர்ந்து கொடுத்தனர். எனினும், கூக்குரலிட்ட மாகாணத்துக்கு மற்றையதினும் அதிகமான பணம் கிடைப்பதும் உண்டு. இம்முறை சிறந்ததன்று என்பதை உணர்ந்த மேயோ பிரபு ஒவ்வொரு மாகாணத்துக்கும் எவ்வளவு பணம் கொடுக்கப்பட வேண்டுமென்பதை வரையறுத்

தும், ஒவ்வொரு மாகாணமும் தனியே விதித்துவந்த வரிகளை அவைகள் அதிகப்படுத்திக்கொள்ளலாம் என அனுமதித்தும் ஏற்பாடுகள் செய்தார். இவ்வேற்பாட்டினல் மத்திய துரைத்தனத்தார் மாகாணங்களுக்கு அளித்து வந்த பகுதி குறைந்து, குடிகளின் வரிச்சுமை அதிகமாயிற்று.

வைஸிராய் கிராமக் குடிகள் பண வசூல் செய்து தங்களுடைய பொதுச் சங்கங்களைக் கொண்டு கல்வி, சுகாதாரம், பொதுக் கட்டிடம், ஏரி குளங்கள் அமைத்தல்போன்ற விஷயங்களில் அதைச் செலவிடலாம் என ஏற்பாடு செய்தார். ஆனல் ஒரு துரைத்தன உத்தியோகஸ்தர் அவற்றை மேற்பார்வையிட வேண்டுமென விதித்தார்.

மேயோ காலத்தில் இந்தியாவின் தேசீயக் கடன் பத்து கோடி பவுனுக்கு மேற்பட்டு விட்டது. அதனல் அதன்பொருட்டு இந்திய பொக்கிஷத்திலிருந்து கொடுக்கவேண்டிய வட்டிப் பணமும் அதிகமாய்விட்டது.

துரைத்தன வருமானத்தைப் பெருக்க ஏற்பாடுகள்

துரைத்தனத்தின் வருமானத்தைப் பெருக்குவதற்காக மேயோ வருமான வரியை ஒரு சத வீதத்திலிருந்து மூன்றே அரைக்கால் சதவீதம் ஆக்கினர். அன்றியும், டம்பாய், சென்னை மாகாணங்களில் உப்பு வரி உயர்த்தப்பட்டது. லாபகரமான பொது விஷயங்களை வரிப்பணத்திலிருந்து அல்லாது கடன் வாங்கிச் செய்யும் ஏற்பாட்டையும் அவர் செய்வித்தார். இந்நாட்டு இருப்புப்பாதைகள் கடன் வாங்கிப் போடப்பட்டன என்பதை நீங்கள் அறிந்திருக்கலாம். வைஸிராய் அரச குமாரர்களுக்கென்று

அஜ்மீரில் ஒரு கல்லூரியை அமைப்பித்தார். அவர் பரிபாலனத்தில் வங்காளத்தில் பல ஆரம்பக் கல்விக்கான பாடசாலைகள் உண்டாயின. நாட்டின் ஜனத்தொகை கணக்கிடப்பட்டது. அவர் காலந் தொடங்கியேதான் பத்து வருஷங்களுக் கொருமுறை ஜனத்தொகையைக் கணக்கிடும் ஸென்ஸஸ் (Census) நடைபெற்று வருகிறது. 1872-ல் மேயோ பிரபு அந்தமான் தீவைப் பார்வையிடச் சென்றார். அங்கே கைதியொருவனால் அவர் கொல்லப்பட்டார்.

பயிற்சிகள்

1. லார்ட் மேயோ அயல் நாடுகளின் நட்பைப்பெறக் கருதி செய்த உபாயங்கள் யாவை?

2. ஷீர் அலி எதிர்பார்த்தது யாது? அவருக்குக் கிட்டியது என்ன?

3. எல்லைப்புற நாடுகள் சம்பந்தமாக மேயோ கொண்ட நோக்கம் என்ன?

4. அகில இந்தியா, மாகாண துரைத்தனங்கள் ஆகிய இவற்றின் வரவு செலவு சம்பந்தமாக வைஸிராய் செய்த திருத்தங்கள் யாவை?

5. வருமானத்தைப் பெருக்கக் கருதி மேயோ செய்த ஏற்பாடுகள் யாவை?

16. இரண்டாவது மூன்றாவது ஆப்கானிய யுத்தங்கள்

கி. பி. 1876 முதல் கி. பி. 1880 வரை வைஸிராயாக இருந்த **லார்ட் லிட்டன்** ஆப்கானிய விவகாரங்களில் தலையிட வேண்டுமென்றே நியமனம் பெற்று இந்தியாவுக்கு வந்தார். இவருக்கு முன்பு வைஸிரா

யாக இருந்த **நார்த் ப்ரூக்** பிரபுவைப் போலன்றி இவர் பிரிட்டிஷ் மந்திரிகளின் நோக்கத்திற்கிணங்கி நடந்தார். லிட்டன் பிரபு இந்திய அரசர்கள் தத்தம் நாடுகளில் உப்பு உற்பத்தி செய்து வந்ததை நிறுத்தி அதற்கீடாக அவர்களுக்குப் பணம் செலுத்தி வர உடன்பட்டார். அதனுல் ஆங்கிலேய துரைத்தனத்தார் மாத்திரமே நாட்டில் உப்பு உற்பத்தி செய்யக் கூடியவர்களாயினர். இந்த ஏற்பாட்டினுல் உப்பின் விலே குறைவு பட்டது; நாடு முழுமைக்கும் வேற்றுமையின்றி விலே அமைந்தது.

லிட்டன் பிரபு

லார்ட் லிட்டன் கி. பி. 1876-ல் **ஸர் ராபர்ட் ஸான்டிமன்** என்பவரைப் பலுசிஸ்தானத்துக்கனுப்பி அந்நாட்டரசர் ஆங்கிலேயரோடுநட்பாக இருக்குமாறு செய்து கொண்டார். அவ்வரசர் போலன் கணவாய்க் கெதிரிலுள்ள **க்வெட்டா** நகரத்தை ஆங்கிலேயருக்குக் கொடுத்துவிடவும், அவர்கள் ஆணேயிலடங்கி நடக்கவும் ஒப்புக்கொண்டார். அதற்கீடாக ஆங்கிலேயர்கள் அவரை அவருடைய பகைவர்களிடமிருந்து காப்பதாக உறுதி கூறினர். ஆங்கிலேயர்கள் க்வெட்டாவைப் பலப்படுத்தி அங்கே சைனியத்தை நிறுத்தி, போலன் கணவாய் வழியாக அயல் நாட்டினர் இந்தியாவுக்கு வரவொட்டாமல் தடுப்பதற்கான ஏற்பாடுகளேச் செய்து கொண்டனர்.

க்வெட்டா நகரை ஆங்கிலேயர் பெறுதல்

பலுசிஸ்தானத்து அரசர் தமக்கு அடங்கிவிட்ட தனுலும், இந்தியாவின் வடமேற்கு எல்லையை ஹிந்துகுஷ் வரையில் பரப்பவேண்டு மென லிட்டன் விரும்பியதினுலும், அவர் ஆப்கானிய விவகாரங்களில் தலையிட்டுக் கொண்டார். ஆனுல் ஷீர் அலி என்ற ஆப்கானிய அமீர் தமது நாட்டின் ஒரு பெரும் பகுதியை இழந்துவிடவும், ஆங்கிலேய ஆதிக் கத்தில் அடங்கியிருக்கவும் உடன்படவில்லை. அன்றி யும், அமீர் தம்மிடம் வந்த ஆங்கிலேய தூதரை ஏற்றுக் கொள்ள மறுத்து ருஷிய தூதரை வரவேற்ருர். அதனுல், லிட்டன் 1877-ம் வருஷம் அவர்மீது சண்டை தொடுத்தார். அவர் ஷீர் அலியைப் பதவியினின்றும் நீக்கிவிட்டுத் தமது எண்ணப்படி நடக்க உடன்பட்ட அவர் மைந்தர் **யாகுப் கானை** அமீராக்க விரும்பினுர். **இரண்டாவது ஆப்கானிய யுத்தம்** இவ்வாருகத் தொடங்கியது.

இரண்டாம் ஆப்கானிய போர்

ராபர்ட்ஸ் தளகர்த்தர் ஷீர் அலியைத் தோற்கடிக் கவும், அவர் நாட்டைவிட்டு ஓடிச்சென்ருர். காபூலும், காண்டஹாரும், ஜலலாபாத்தும் ஆங்கி லேயர் வசமாயின. அப்போது ஷீர் அலியின் மைந்தரான யாகுப்கான் கி.பி. 1879-ல் **கந்தமுக்** என்ற இடத்தில் ஆங்கிலேயரோடு உடன்படிக்கை செய்துகொண்டார். அதையொட்டி அவர் ருஷிய தூதரை அனுப்பிவிட்டு ஆங்கிலேய தூதரைக் காபூலில் ஏற்றுக்கொண்டார். அவர் இனித் தாம் ருஷியரோடு உறவாடுவதில்லை எனவும் வாக்களித் தார். அயல் நாட்டு விவகாரங்களில் அவர் ஆங்கி

கந்தமுக் உடன்படிக்கை



ஆப்கானிய யுத்தங்களை விவரிக்கும் படம்

லேயரது கருத்தின்படி நடக்க ஒப்புக்கொண்டு அவர்களுக்குக் **கைபர், குர்ரம், பிஷின்** பள்ளத்தாக்குகளை கொடுத்துவிட்டார். இவற்றிற்கீடாக ஆங்கிலேய துரைத்தனத்தார் அவருக்குப் பணமும், போர்ப் படைகளும், போராயுதங்களும் தந்து உதவுவதாக ஒப்புக் கொண்டனர். இவ்வாறாக **இரண்டாவது ஆப்கானிய யுத்தம்** முடிவடைந்தது.

மூன்றும் ஆப்கானிய யுத்தம்

அவ் உடன்படிக்கை செய்துகொண்ட சிறிது காலத்திற் குள்ளேயே ஆப்கானியர், ஆங்கிலேயருடைய ஆதிக்கம் பெருகிவருவதைக் கருதி, அவர்களுக்கு விரோதமாகக்கிளம்பினர். அல்லாமலும், காபூலில் இருந்த ஆங்கிலேய ஸ்தானீகரை தங்கள் கோபத்திற்கு இரையாக்கினர். இதுவே மூன்றாவது ஆப்கானிய யுத்தத்திற்குக் காரணம் ஆகும். இதையறிந்த ஆங்கிலேயர்கள் ராபர்ட்ஸ் தளகர்த்தரை ஆப்கானிஸ்தானத்துக்கு ஒரு சேனையுடன் அனுப்பினர். அவர் காபூலைக் கைப்பற்றி, யாகுப்கானைத் தோற்கடித்துச் சிறை பிடித்துகல்கத்தாவுக்கு அனுப்பினர். அப்போது லார்ட் லிட்டன் வேலையைவிட்டுத் தம் நாடு சென்றுவிட்டதனால் **லார்ட் ரிப்பன்** இந்திய வைஸிராயாக நியமிக்கப் பட்டார். பிறகு அப்துர் **ரஹிமான்** என்பவர் அமீர் ஆக்கப்பட்டார்.

அப்துர் ரஹிமானுடன் உடன்படிக்கை

அப்துர் ரஹிமான் மிக்க திறமை வாய்ந்தவர். இவர் ஆங்கிலேயருடன் நட்பு பாராட்டி வந்தார். ஓர் உடன்படிக்கையும் செய்து கொண்டார். அதன்படி ஆங்கிலேயர் அமீரின் சேனைச் செலவுக்காக, பணம்

கொடுப்பதாகவும் அவரை விரோதிகள் தாக்கினால், உதவி புரிவதாகவும் வாக்களித்தார்கள். கி. பி. 1901-ல் ரஹிமான் காலகதி அடையும்வரை இவ்வுடன்படிக் கைப்படி இருதிறத்தாரும் நடந்துகொண்டனர்.

ஸர் மார்ட்டிமர் துராண்ட்

கி. பி. 1888 முதல் கி. பி. 1894 வரை இந்திய வைஸிராயாக இருந்த **லார்ட் லான்ஸ்டௌன்** ஆப்கானிய நாட்டிற்கும் ஆங்கிலேயரது நாட்டிற்கும் இடையிலிருந்த முரட்டுப் பட்டாணியரை அடக்கக்கருதி போலன் கணவாய் வழியாக க்வெட்டாவுக்கு இருப்புப்பாதை போடுவித்தார். இதை அப்துர் ரஹிமான் வெறுத்து அதனால் தமக்குத் தீங்குண்டாகுமெனப் பயந்தார். அதையறிந்த லான்ஸ்டௌன் பிரபு கி. பி. 1893-ல் **ஸர் மார்ட்டிமர் துராண்ட்** என்பவரை அமீரிடம் தூதனுப்பினார். துராண்ட் ஆப்கானிஸ்தானத்தின் கிழக்கு எல்லையையும், தெற்கு எல்லையையும் வரையறுத்து அமீருக்கும் ஆங்கிலேயருக்கும் எல்லைத் தகராறு உண்டாகாதபடி செய்வித்தார். அன்றியும் அவர் அப்போது கில்கிட் பள்ளத்தாக்கிலுள்ள **ஹுன்ஸா, நாகர்** என்ற ஸ்தலங்களை ஆங்கிலேயருக் குச் சம்பாதித்துத் தந்தார். அப்போது கைபர்க் கணவாயும் ஆங்கிலேயர் வசப்பட்டு விட்டதனால், அவர்கள் தங்களுக்குப் புதிதாகக் கிடைத்த நாடுகளி லிருந்த போர்ப் படைகளைப் பலப்படுத்தியும் அந்நாடு களின் பரிபாலனம் செவ்வனே நடைபெறுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தும் வைத்தனர். இவற்றைச் செய்வதில் ராபர்ட்ஸ் தளகர்த்தர் வைஸிராய்க்குப் பேருதவியாக இருந்தார்.

பயிற்சிகள்

1. க்வெட்டா ஆங்கிலேயருக்கு எப்போது எவ்வாறு கிடைத்தது? அதனுல் என்ன உபயோகம்?

2. இரண்டாவது ஆப்கானிய யுத்தம் எவ்வாறு மூண்டது?

3. கந்தமுக் உடன்படிக்கையைச் செய்துகொண்டவர் யாவர்? ஏன் செய்து கொண்டார்கள்? அதன் நிபந்தனைகள் யாவை?

4. யாகுப்கான் அரசையிழந்தது எங்ஙனம்? எப்போது? ஏன்?

5. மார்ட்டிமர் துராண்ட் யார்? அவர் செய்த தொண்டு யாது?

17. லார்ட் ரிப்பனும், ஸ்தல ஸ்தாபனங்களும்

கி. பி. 1880 முதல் கி. பி. 1884 வரை வைஸிராயாக இருந்த **லார்ட் ரிப்பன்** இந்தியரிடம் அன்பு கொண்டு பல நன்மைகளைச் செய்தார்.

ரிப்பன் பிரபு செய்த விவசாய சீர்திருத்தங்கள்

அவர் சுங்கவரிகளில் சிலவற்றைத் தள்ளி இங்கிலாங்தோடு நடைபெற்று வந்த வியாபாரத்தை விருத்திசெய்தார். நிலவரி நிலைவரமாக்கப்படாத இடங்களிலிருந்த விவசாயிகள் அதிகமான வரி செலுத்தவேண்டியிருந்தது. அவர் அதைச் சிறிது குறைத்தார். அன்றியும் நிலங்களின் வேளாண்மையைப் பெருக்குவதில் துரைத்தனத்தார் யாதொன்றும் செய்யாமல் விவசாயிகள் தங்கள் முயற்சியினுலேயே அவற்றின் வளத்தை உயர்த்தியிருந்தால், அந்நிலங்களின் தரத்தை உயர்த்தி

அதிக வரி வசூலிக்கக் கூடாது என ஆக்ஞாபித்தார். வரியை உயர்த்தும் நோக்கத்துடன் நிலங்களைத் தரம் பிரிக்கக்கூடாதென்றும் அவர் திட்டம் செய்தார். துரைத்தனத்தார் அமைத்துள்ள நீர்ப்பாசன வசதிகளைக் கொண்டல்லாமல், குடிகள் தங்கள் சொந்த முயற்சியினாலேயே உற்பத்தியைப் பெருக்கியுள்ள நிலங்களுக்கும் தீர்வையை உயர்த்தக் கூடாதெனவும் உத்தரவு செய்தார். தானியங்களின் விலை அதிகமாக இருந்தால், அதற்குத் தகுந்தபடி துரைத்தனத்தார் நிலவரியை உயர்த்தலாம் என அங்கீகரித்தார்.



ரிப்பன் பிரபு

வர்த்தமானப் பத்திரிகைகளுக்கிருந்த நிபந்தனைகளை ரத்து செய்து அவற்றின் உரிமைகளை அவர் பெருக்கினார். பள்ளிக்கூடங்களை அமைப்பித்துக் கல்வியைப் பரப்பினார்.

மைசூர் ராஜ்யம் வாரிசுதாரிடம் ஒப்புவிக்கபடுதல்

மைசூர் ராஜ்யத்தைப் பழைய அரச வமிசத்தாரிடம் ஒப்புவித்தார். அதனால் கிருஷ்ண ராஜ உடையாரின் தத்துப்புத்திரரான **காம ராஜ உடையார்** அரசரானார்.

வைஸிராயுடைய மந்திராலோசனை சபையில் **இல்பர்ட்** என்ற ஒரு மெம்பர் இருந்தார். அவர்

இல்பர்ட் மசோதா

இந்திய நீதிபதிகள் ஐரோப்பிய குற்றவாளிகளை விசாரித்துத் தண்டிக்கலாம் என்ற மசோதாவைக்கொண்டுவந்தார்.

துரைத்தன உத்தியோகஸ்தர்களல்லாத ஐரோப்பிய தேயிலை காப்பித் தோட்டக்காரரும், வியாபாரிகளும் அதைப் பலமாக எதிர்த்தனர். கடைசியில், ஜில்லா ஜட்ஜ்கள் என்ற நீதிபதிகள் ஐரோப்பியக் குற்றவாளிகளை அவர்களினத்திற் சேர்ந்த ஜூரிகளைக்கொண்டு விசாரணை செய்து தண்டிக்கலாம் என ஏற்பாடு செய்யப்பட்டது.

ரிப்பன் பிரபு அப்துர் ரஹிமான் என்ற ஆப்கானிய அமீரோடு சமாதானம் செய்துகொண்டு அவர் ஆங்கிலேய நண்பராக இருந்துவருமாறு ஏற்பாடு செய்தார் என்பதை நீங்கள் படித்தீர்கள். அப்போது வைஸிராய் வருஷவாரியில் அமீருக்கு 25 லக்ஷம் ரூபாய் கொடுத்துவர ஒப்புக்கொண்டார். மேயோ பிரபு ஷீர் அலிக்குக் கொடுக்க மறுத்த உதவிப்பணம் இப்போது அப்துர் ரஹிமானுக்கு ரிப்பன் பிரபுவினிடமிருந்து கிட்டியது.

ரிப்பன் பிரபு செய்த நன்மைகள் அனைத்திலும் மேலாகக் கருதக்கூடியது அவரது **ஸ்தல சுயஆட்சிச் சட்டம்** (Local Self-Government Act) என்பதாகும். இப்போது நாட்டில் பெரிய கிராமங்கள்தோறும் உள்ள **பஞ்சாயத்து போர்டுகளும்** (Panchayat Boards), ஒவ்வொரு ஜில்லாவின் தலைநகரத்திலுள்ள **ஜில்லா போர்டுகளும்** (District Boards), பெரிய பட்டனங்களிலுள்ள **முனிஸிபாலிடிகளும்** (Municipalities), பெரிய நகரங்களிலுள்ள **கார்ப்பொரேஷன்களும்** (Corporations) அச்சட்டத்தினுல் ஏற்பட்டனவேயாம். அவை அனைத்தையும் சம்பளம் பெருத பொதுஜனப் பிரதிநிதிகள் நடத்திவருகின்றனர் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஸ்தல சுயஆட்சி

அந்த ஸ்தல ஸ்தாபனங்கள் யாவும் வரிகள் விதித்துப் பணவசூல் செய்து அதைக்கொண்டு பல பொது நன்மைக்கான தொண்டுகள் ஆற்றுகின்றன. தெருக்களைப் பெருக்கிச் சுத்தம் செய்தல், விளக்குப் போடுதல், வியாதியைப் போக்க வைத்திய சாலைகளையும் வைத்தியர்களையும் ஏற்படுத்துதல், வியாதிகளை வரவொட்டாமல் தடுத்தல், வந்த பின்பு அவை பரவவொட்டாமல் செய்தல், சுத்தமான குடி தண்ணீர் கிடைக்குமாறு குழாய்களையும் கிணறுகளையும் அமைத்தல், பள்ளிக்கூடங்கள் வைத்துக் கல்வியைப் பரப்புதல் போன்ற பொது நன்மைக்கான காரியங்கள் பலவற்றைச்செய்தல் அந்த ஸ்தல ஸ்தாபனங்களின் கடமைகளாம்.

ஸ்தல ஸ்தாபனங்களின் கடமைகள்

பொதுஜனப் பிரதிநிதிகள் இவற்றைச் செவ்வனே கவனித்துச் செய்து வருவார்களாயின் நாட்டுக் குடிகள் சுகமாக வாழலாம் என்பது சொல்லாமலே விளங்கும். பிரதிநிதிகளைப் பொதுஜனங்கள் தேர்ந்தெடுப்பதைக் குறித்தும், வாக்காளரின் யோக்கியதைகளைக் குறித்தும், ஸ்தல ஸ்தாபனங்களின் கடமைகளையும் உரிமைகளையும் குறித்தும் திருத்தமான சட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. இவற்றில் தொண்டாற்றும் பிரதிநிதிகள் அரசியல் வழிகளில் பயிற்சி பெற்று உயர்ந்த துரைத்தன உத்தியோகங்களை நிர்வகிக்கக் கூடியவர்களாகின்றனர். அன்றியும், இந்தியர்கள் அதிகமான உரிமைகளையும், அதிகாரத்தையும் வேண்டி நிற்பதற்கு ஸ்தல ஸ்தாபனங்கள் ஒரு காரணம் என்னலாம்.

ஸ்தலஸ்தாபன அமைப்புக்கள் நமது தென் இந்தியாவுக்குப் புதியனவல்ல. இவை தமிழ் மன்னர்கள் ஆட்சியில் தென்னுட்டில் பொது நன்மைக்கான வேலைகள் பலவற்றைச் செய்துவந்தன. சோழ அரசர்கள் இவற்றை ஊக்கிப் போற்றிவந்தனர். அப்போது சொத்து சம்பந்தமான வழக்குகளையும், குற்றவாளிகளையும் விசாரித்துத் தீர்ப்புகள் செய்யும் நீதிமுறைச் சபைகளும் இருந்தன. அவற்றில் புருஷரையன்றிப் பெண்டிரும் அங்கத்தினராக இருந்தார்கள் என்ருல் ஸ்தல ஸ்தாபன ஏற்பாடுகளும், பொதுஜனப் பிரதிநிதிகளால் நடைபெற்றுவந்த சபைகளும் எவ்வளவு உயர்ந்தும் தேர்ச்சி பெற்றும் இருந்திருக்கவேண்டும் என்பதை நாம் ஊகித்தறியலாம். இவைகள் முஸ்லிம் ஆட்சியிலும் பொதுநலத் தொண்டுகள் ஆற்றிக் குடிகளுக்கு நன்மைகள் பல செய்து உதவின. ஆங்கிலேய வர்த்தகக்கம்பெனியின் பரிபாலனத்தில் இவை அழிந்துபோயின. குடிகளை நம்பாமல் அதிகாரம் முழுவதையும் தங்கள் வசத்திலேயே வைத்திருக்கக் கருதிய கம்பெனியார் ஸ்தல ஸ்தாபனங்களை அழித்துவிட்டனர். இவற்றைத் திரும்பவும் உண்டாக்கின பெருமை ரிப்பன் பிரபுவுக்கே உரியதாகும். குடிகளின் நன்மையை நாடி உழைத்த ரிப்பனை இந்நாட்டினர் பெரிதும் கொண்டாடிப் போற்றினர். பொது நிதிகள் சேர்த்து அவருக்கு உருவச் சிலைகள் வைத்து அவர் பெயர் என்றும் அழியாதபடி செய்தனர். சென்னைக் கார்ப்பொரேஷன் ஆபீஸுக்கு **ரிப்பன் கட்டிடம்** (Ripon Buildings) எனப் பெயர் வைக்கப்பட்டும், அவருடைய உருவச்சிலை அக்கட்டிடத்தின் முன்னர்

வைக்கப்பட்டும் இருப்பதினின்றும் அவரை நாம் கொண்டாடிவருவது வெளியாகின்றது.

பயிற்சிகள்

1. லார்ட் ரிப்பன் விவசாயிகளுக்கு அனுகூலமாகச் செய்த திருத்தங்கள் என்ன?

2. அவர் செய்த வேறு திருத்தங்கள் யாவை?

3. இல்பர்ட் மசோதா எதைப் பற்றியது? அது எவ்வாறு சட்டமாயிற்று?

4. ஸ்தல சுய ஆட்சிச் சட்டத்தினுல் ஏற்பட்ட நன்மை என்ன? ஸ்தல ஸ்தாபனங்களில் அடங்கிய அமைப்புக்கள் எவை?

18. லார்ட் கர்ஸன்

கி. பி. 1898 முதல் கி. பி. 1905 வரை இந்திய பரிபாலனத்தை நடத்திய **லார்ட் கர்ஸன்** சிறந்த அறிவாளி; சோம்பலின்றி உழைக்கும் குணமுடையவர். அவர் பேசும் திறம் வாய்ந்தவர். புகழில் ஆசையுள்ளவர். அதிகாரம் செலுத்துவதில் மிகுந்த பிரியம் கொண்டவர்.

கர்ஸன் பிரபு

கி. பி. 1901-ல் விக்டோரியா மகா ராணியார் இறந்துபோகவே, அவருடைய புத்திரரான **ஏழாம் எட்வர்டு** அரசரானுர். அதே வருடம் அமீர் அப்துர் ரஹிமான் இறந்துபோனுர். அப்பொழுது அவர் மைந்தர் **ஹபீபுல்லா** ஆப்கானிய அமீரானுர். லார்ட் கர்ஸன் அவ

ருக்கு '**ஹிஸ் மெஜெஸ்டி**' (His Majesty) என்ற பட்டத்தைக் கொடுத்தார்.

நெடுநாட்களாக ஆங்கிலேய துரைத்தனத்தார் தங்கள் போர்ப்படைகளைக் கொண்டு எல்லைப் பாது காப்பைச் செய்துவந்தனர். கர்ஸன் பஞ்சாபுக்கு வடமேற்கிலுள்ள ஜில்லாக்களை ஒன்றுசேர்த்து வடமேற்கு எல்லை மாகாணம் என்று பெயரிட்டார்.

வடமேற்கு எல்லைப்புறமாகாணம்

அதைப் பரிபாலிக்க அவர் ஒரு **பிரதான கமிஷனர்** என்ற உத்தியோகஸ்தரை ஏற்படுத்தினர். இந்த ஏற்பாட்டினுல் எல்லைப் புறத்தில் இருந்துகொண்டு தீமைகள் பல செய்துவந்த முரட்டு ஜனங்கள் ஆங்கிலேய அதிகாரத்தில் அடங்கிப் போயினர்.

கர்ஸன் காலத்தில் பிரெஞ்சுக்காரர்கள் பாரஸிக வளைகுடாவிலுள்ள **மஸ்கெட்** என்ற துறைமுகத்தைத் தங்கள் கப்பல்கள் தங்குவதற்கு அனுகூலமானதாகச் செய்யக் கருதினர். கப்பல்கள் போகும்போதும் வரும்போதும் அங்கே தங்கி வேண்டிய நிலக்கரியைப் போட்டுக்கொள்ள அது மிகவும் தகுந்த ஸ்தலமாகும். கர்ஸன் பிரெஞ்சுக்காரர் எண்ணம் நிறைவேருதபடி தடுத்துவிட்டார். அப்போது அவர் ஓர் ஆங்கிலேய கப்பற்படையை அனுப்பி அங்கிருந்தோரைப் பயமுறுத்தினர்.

திபெத் ருஷியர்களின் ஆலோசனையைக் கேட்டு ஆங்கிலேயருடன் செய்துகொண்ட உடன்படிக்கையை மீறி நடந்தது. கி.பி. 1904-ல் கர்ஸன் **லாஸா**வுக்கு ஒரு

தூது கோஷ்டியை அனுப்பித் திபெத்தினிடமிருந்து 75 லக்ஷம் ரூபாயையும், 350 சதுர மைல் பரப்புள்ள நாட்டையும் சம்பாதித்தார். இவற்றை யல்லாது கர்ஸன் ஏராளமான சீர்திருத்தங்களைச் செய்து நாட்டுக் குடிகளுக்கு உதவினுர்.

திபெத்துடன் உடன்படிக்கை

பஞ்சாப் நாட்டில் சொந்தமாக நிலம் வைத்திருந்த பலர் தங்கள் நிலங்களை அடமானம் வைத்தும், விற்றும் கடனாளிகளாகி வந்தனர். அதைக் கண்ட வைஸிராய் நிலச் சுவான்தார்கள் அவ்வாறு செய்யாதபடி தடுக்கக் கருதி ஒரு சட்டத்தைப் பிறப்பித்தார். அச்சட்டம் நிலத்தின் சொந்தக்காரரர் எவரும் தங்கள் நிலங்களை 20 வருஷங்களுக்குமேல் அடமானம் வைக்கக் கூடாதென்றும், நீதிஸ்தலத்தின் உத்தரவைப் பெற்றே ஒருவர் நிலத்தைக் கடனுக்கு ஈடாக விற்கலாமென்றும் விதித்தது. இச்சட்டத்தின் பயனுகப் பல நிலச் சுவான்தார்கள் நன்மை யடைந்தனர்.

பஞ்சாப் நில உரிமைச் சட்டம்

பஞ்சத்தின் காரணத்தைக் கண்டறிய விரும்பி கர்ஸன் ஒரு கமிஷனை நியமித்தார். அவர்கள் விசாரணைகள் செய்து தங்கள் முடிவை வைஸிராய்க்குத் தெரிவித்தனர். வைஸிராய் பஞ்சத்துக்குக் காரணம் அதிகமான நிலத்தீர்வை அன்று; பஞ்சம் மழையின் ஏற்றக் குறைவினுல் உண்டாகிறது எனக் கூறினுர். ஆயினும் அவர் நிலத்தீர்வை நியாயமாக விதிக்கப் படவேண்டுமென உத்தரவிட்டார். நிலைவரமான நிலவரி குடிகளுக்கு நன்மை

பஞ்சத்தின் காரணத்தை ஆராயக் கமிஷன்

பயப்பதன்று என்பதும் வரி விதிக்கும் சட்டத்துக்கு மாருகும் என்பதும் கர்ஸன் பிரபுவின் அபிப்பிராயம்.

போலீஸ் இலாகாவில் திருத்தங்களைச் செய்யக் கருதிய அவர் அவை சம்பந்தமாகத் தமக்குச் சிபார்சு கள் செய்யக் கி. பி. 1903-ல் ஒரு கமிஷனை நியமித்தார். அந்தக் கமிஷனர்கள் செய்த சிபார்சுகளை யொட்டி அவர் போலீஸ் இலாகாவைத் திருத்தியமைத்தார். இருப்புப் பாதைகள் சம்பந்தமாகவும் நீர்ப் பாசன வகைகளின் சம்பந்தமாகவும் விசாரணை கள் செய்து தமக்கு ஆலோசனைகள் கூற அவர் இரண்டு கமிஷன்களை நியமித்தார். சைனியம், வியாபாரம், கைத்தொழில் முதலியவற்றின் சம்பந்தமாகவும் அவர் சிறந்த திருத்தங்கள் செய்வித்தார். எனவே, அவர் சற்றேறக் குறைய துரைத்தன இலாகாக்கள் அனைத்தையும் திருத்தங்கள் செய்து அமைத்தார் எனக் கூறலாம்.

பல துரைத்தன இலாகாக்களைச் சீர்திருத்தல்

கி. பி. 1904-ல் அவர் **இந்திய பல்கலைக் கழகச் சட்டம்** (The Indian Universities Act) ஒன்றைப் பிறப்பித்தார். அதன் பயனாக அவற்றை அதுவரையில் பரிபாலித்துவந்த பிரதிநிதிகளின் சுதந்திரங்கள் குறைந்து துரைத்தனத்தின் அதிகாரம் பெருகிவிட்டதனால், இந்தியர் அதை வெறுத்தனர். ஆயினும் அதனால் கல்வி முற்போக்கை யடைந்தது. அல்லாமலும், கர்ஸன் அகில இந்தியக் கல்வியை ஒழுங்கு படுத்தி ஒரு சீராக நடைபெறச் செய்யவும், அதை மேற்பார்வை யிட்டு ஆலோசனைகள் உரைக்கவும் **டைரெக்டர்**

கல்வி இலாகா அபிவிருத்தி

ஜெனரல் அவ் எஜுகேஷன் என்ற அகில இந்தியக் கல்வி இலாகா மேலதிகாரி யொருவரை நியமித்தார். அப்போது கிண்டர் கார்ட்டன் முறையில் கல்வி கற் பிக்கும் ஏற்பாடு கையாளப்படத் தொடங்கியதை யன்றிக் கண்களையும், கைகளையும் பழக்கும் விளையாட் டுக்கள் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டன. அவர் காலந்தொடங்கி விஞ்ஞான சாஸ்திரக் கல்விப் பெருகி வந்ததையன்றிப் பல மாணவர்கள் துரைத்தனத்தாரின் பொருளுதவியைப் பெற்று மேனுடுகளுக்குச் சென்று விஞ்ஞான சாஸ்திரப் பயிற்சி பெற்று வரலாயினர்.

ஐக்கிய நாணய சங்கங்கள்

அதே வருஷத்தில் பிறப்பிக்கப்பட்ட '**ஐக்கிய நாணய சங்கச் சட்டம்**' ஏழை விவசாயிகளுக்கும், கைத்தொழிலாளர்களுக்கும் பேருதவி யாக அமைந்தது. விவசாயிகள் தங்கள் பயிர்த் தொழிலுக்குத் தேவையான கார், கலப்பை, எரு, மாடுகள், விதை முதலிய வற்றை வாங்கிக்கொள்ளக் கைப் பொருளில்லாமல், அதிகமான வட்டிக்குக் கடன் வாங்கி அமைத் துக் கொள்வார்கள். அறுவடையானதும் தாங்கள் முயன்று பயிரிட்ட தானியத்தை அவர்கள் குறைந்த விலைக்கு விற்றுக் கடனைத் திரும்பிக் கொடுத்துவிட்டுப் பட்டினி கிடப்பார்கள். உண்பதற்கே போதுமான உணவில்லாத அவர்கள் பொருள் சேமித்துத் தங்க ளுக்கு வேண்டிய உபகரணங்களை வாங்கிக் கொள்வது எங்ஙனம்? பசிப்பிணியும், கடனும் அவர்களை விட் டகலுவதில்லை.

கைத்தொழிலாளர் கதியும் அத்தன்மையதே. இவர்களும் அதிக வட்டிக்குக் கடன் வாங்கித் தங்க

ளுக்கு வேண்டிய சாதனங்களை அமைத்துக்கொள்வார்கள். பிறகு தாங்கள் உற்பத்திசெய்த பொருளைக் குறைந்த விலைக்கு விற்றுக் கடனைக் கொடுத்துவிட்டு வறுமையினால் வருந்திக் கிடப்பர். இவர்கள் படும் துன்பம் மிகக் கொடியதேயாம். கர்ஸன் புதிதாகப் பிறப்பித்த சட்டத்தின் பயனாக ஆங்காங்கு **ஐக்கிய நாணய சங்கங்கள்** ஏற்படவும், ஜனங்கள் அவற்றில் சேர்ந்து, குறைந்த வட்டிக்குக் கடன் வாங்கி, அதைக் கொஞ்சங் கொஞ்சமாகத் திருப்பிக்கொடுக்கக் கூடிய சௌகரியத்தைப் பெற்றனர். அன்றியும், அச் சங்கங்கள் குடிகளினிடையே ஐக்கிய குணத்தைப் பெருக்க உதவின. அவற்றில் அவர்கள் சிறிது சிறிதாகப் பணம் சேமித்துவைக்கவும் கூடும். கூட்டுறவும், சிக்கனவாழ்க்கையும், நாணயமும் பெருகுவதற்குச் சாதனமாக ஏற்பட்ட அச்சங்கங்கள் உற்பத்திப் பொருள்களைச் சேமித்துவைத்து லாபகரமான விலைக்கு விற்பதற்கும் உதவின.

சரித்திர சாசனப் பாதுகாப்பு இலாகா

நமது நாட்டின் பல இடங்களில் பாழாய்க் கிடக்கும் நகரங்களும், கோட்டைகளும், சிலைகளும், சாசனங்களும், மண்ணிற் புதைந்துள்ள பட்டணங்களும், கற்றூண்களும், நாணயங்களும் இன்னும் பலவும் ஏராளமாக இருக்கின்றன. இவை சரித்திர ஆராய்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவன என்பதையுணர்ந்த கர்ஸன் இவற்றைக் கவனித்துப் பாதுகாக்கவும், மராமத்துக்கள் செய்து முழுதும் பாழாய்ப் போகாதபடி தடுக்கவும் ஒரு தனி இலாகாவை ஏற்படுத்தினார். அதுவே '**ஆர்க்கிய லாஜிகல் டிபார்ட்மெண்ட்**'

எனப்படுவது. இந்த இலாகாவில் பல இந்திய அறிஞர்கள், உயர்ந்த பதவிகளை வகித்தும், புதிது புதிதாக விவரங்கள் பலவற்றைக் கண்டுபிடித்தும் வருகிறார்கள். இவர்களுடைய உழைப்பின் பயனாக நமது நாட்டின் மிகப் பழைய சரித்திரம் வெளியாகி வருகின்றது. மொஹஞ்சோ தாரோவிலும் ஹரப்பாவிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ள புராதன நகரங்கள் நம் நாட்டின் மிகப் பழைய நாகரிகத்தை விளக்குகின்றன. இவற்றைத் தோண்டிக் கண்டுபிடித்தது இந்த இலாகாவே யாகும்.

விவசாய ஆராய்ச்சி

விவசாய இலாகாவில் பயிர்த் தொழில் சம்பந்தமான ஆராய்ச்சிகளைச் செய்து வரவும், மாதிரிப் பண்ணைகளை வைத்து நடத்தவும், புதிய வகைக் கருவிகள், எருக்கள், விதைகள் இவற்றைப் பற்றின அறிவை விவசாயிகளுக்கு ஊட்டவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. புதிய முறையிலும், நூதனக் கருவிகளைக் கொண்டும் பயிர் செய்யும் ஏற்பாடுகள் நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்குமல்லவா ?

வங்காளப் பிரிவினை

வங்காள மாகாணம் சுமார் இரண்டு லக்ஷம் சதுர மைல் பரப்புள்ளது. அதன் ஜனத்தொகை சற்றேறக் குறைய எட்டு கோடி இருக்கும். அதனால் பரிபாலனத்தின் சௌகரியத்திற்காகக் கர்ஸன் அதை இரண்டாகப் பிரித்தார். குடிகளுக்குள் வேற்றுமையை உண்டாக்கக் கருதி வைஸிராய் வங்காளத்தை இரண்டாகப் பிரித்தார் என்றெண்ணி இந்நாட்டினர் அதை வெறுத்து அப்பிரிவினையை எதிர்த்தார்கள். வைஸிராய்

பொருட்படுத்தாமல் நடந்தும் ஒழுகியதனால், அவரை இந்நாட்டினர் வெறுத்தனர். அவரைத் திருப்பி அழைத்துக்கொண்டு விடவேண்டுமெனவும் கூக்குர லிட்டனர். கி.பி. 1910-ல் **ஏழாம் எட்வர்டு** இறந்து போகவே, அவருடைய மைந்தரான **ஐந்தாம் ஜார்ஜ்** பட்டத்துக்கு வந்தார். மறு வருடம் மன்னர்பிரான் இந்தியாவுக்கு விஜயம் செய்து, டில்லியில் தர்பார் நடத்தியபோது வங்காளப் பிரிவினையை ரத்து செய்து மீண்டும் ஒரு மாகாணமாக்கினர்.

பயிற்சிகள்

1. கர்ஸன் வடமேற்கு எல்லை மாகாணத்தை எவ் வாறு, ஏன் உண்டாக்கினர்? அதனாலாய பயன் யாது?

2. மஸ்கெட் எங்கேயுள்ளது? அதன் விசேஷம் என்ன?

3. பஞ்சாப் நிலச்சுவான்தார்களுக்கு அனுகூலமாகக் கர்ஸன் செய்வித்தது யாது?

4. கல்வி சம்பந்தமாகக் கர்ஸன் காலத்தில் உண் டான திருத்தங்கள் யாவை?

5. ஐக்கிய நாணயச் சட்டத்தினால் உண்டான நன் மைகள் யாவை?

6. ஆர்க்கியலாஜிகல் டிபார்ட்மென்டினால் என்ன அனுகூலம் ஏற்பட்டது?

7. விவசாய இலாகாவில் பயிர்த் தொழிலாளர்க ளுக்கு அனுகூலமாகச் செய்யப்படும் தொண்டுகள் யாவை?

8. வங்காளப் பிரிவினை ஏன் செய்யப்பட்டது? அதன் விளைவு என்ன?

மீது ஜனங்கள் வெகுண்டு அவரை வெறுக்கும் சமயத்தில், கர்ஸன் இந்தியருடைய பழக்க வழக்கங்களையும், நடவடிக்கைகளையும், நூல்களையும் பழித்துப் பேசி அவர்களுடைய பகையைச் சம்பாதித்துக்கொண்டார்.

நம் நாட்டுக் குடிகள் துரைத்தனத்தாரின் செயல்களைப் பழித்தனர். நாட்டில் அமைதி குன்றியது. ஜனங்களுக்குள் அயல் நாட்டுச் சரக்குகளை பஹிஷ்கரித்து உள் நாட்டுச் சரக்குகளையே வாங்க வேண்டும் என்ற கிளர்ச்சி உண்டாகிப் பரவி வரத் தலைப்பட்டது. இவ்வாறாக அவருடைய பரிபாலனத்தில் நாட்டில் அமைதி குறைந்து குடிகளுக்குத் துரைத்தனத்தார்மீது வெறுப்புத் தோன்றியது.

ஐந்தாம் ஜார்ஜ் சக்கரவர்த்தியார்

நாட்டிற்குப் பல நன்மைகளைச் செய்தபோதிலும், கர்ஸன் இந்தியரைப் பழித்தும் அவர்களுடைய நூல்களை அவமதித்தும், பொதுஜன அபிப்பிராயங்களைப்

19. எல்லைப்புறப் பாதுகாப்புக்கான கொள்கை

நம் தேசத்தின் வடக்கில் எளிதில் கடக்க இயலாத இமயமலை என்னும் ஓர் பெரிய மலைத்தொடர் இருக்கிறதென உங்களுக்கு தெரியுமல்லவா? நம் நாடு மற்றைய மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டுள்ளது. கடற்கரையை விரோதிகள் கப்பற் படையின் பலத்தினுலேதான் தாக்க முடியும். இமய மலைத் தொடர் ஒரு கோட்டைக்கு மதில் எழுப்பியதுபோல் உள்ளதினுல், வடக்கிலிருந்து பகைவர் படையெடுத்து வர இயலாது. ஆனுல், அதன் வடமேற்குப் பாகத்தில் உள்ள மலைத் தொடரின் கணவாய்களின் வழியாய் அந்நியர்கள் பலர் நமது நாட்டுக்கு வந்துள்ளார்கள்.

நம் நாட்டின் எல்லைப்புறக் காவல்

நம் நாட்டின் வடகிழக்கிலுள்ள பர்மாவின் வழியாகவும் சிலர் வந்திருக்கிருர்கள். அவர்கள் மங்கோலிய வமிசத்தினர். பர்மாவை ஆங்கிலேய சாம்ராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்ட பின்னர் வடகிழக்கு எல்லையும் பலப்பட்டு விட்டது.

ஆங்கிலேய துரைத்தனத்தார் பாதுகாப்புக்காகக் கவனம் செலுத்த வேண்டியது வடமேற்கு எல்லைப் பிரதேசமே. ஏனெனில், அவைகளிலுள்ள மலைப் பிரதேசத்தின் கணவாய்களின் வழியாகவே, ஆரியர், பாரஸிகர், கிரேக்கர், ஹூணர், மொகலாயர் முதலிய பல அயல் நாட்டினர் படையெடுத்து வந்தார்கள் என்பதை நாம் அறிவோம்.

தென்னிந்தியாவின் பாதுகாப்பு கப்பற் படையினிடம் இருக்கிறதென்பதை நீங்கள் அறிவீர்கள்.

ஆங்கிலேயரின் கடற்படை வலிமை

ஆங்கிலேயருக்கு இதைக் காப்பது மிக எளிது. அவர்களின் கப்பற்படை நிகரற்றது; அன்றியும் அவர்கள் கடற்போரில் கைதேர்ந்தவர்கள். ஆனால் கடல்களினால் ஏற்பட்டிருந்த பாதுகாப்பு தற்காலத்தில் மிகக் குன்றி விட்டது. நிலத்திலும், நீரிலுமன்றி ஆகாய வழியாகவும் பகைவர்கள் வரக் கூடிய இக் காலத்தில் சிறந்த பாதுகாப்பு முறைகள் எவ்வாறு முடியும்?

ஆப்கானிய விவகாரத்தில் தலையிட நேர்ந்த காரணம்

ரஞ்சித் ஸிங்க் கி. பி. 1800-ல், பஞ்சாப் நாடு முழுவதையும் தமதாக்கிக்கொண்டு திறமையாக ஆட்சி செய்தார். அவர் உயிருடன் இருந்த வரையில் ஆங்கிலேயருடன் நட்பாகவே இருந்தார். அவர் கி. பி. 1839-ல் இறந்த பிறகு ஸீக்கியப் போர்கள் நடைபெற்றன. பஞ்சாப் ஆங்கிலேயருடைய வசமாகி விட்டது. மலைப் பிரதேசம் வரையில் பரவியிருந்த ஆங்கிலேயருடைய ராஜ்யம் ஆப்கானிஸ்தானத்தின் அருகாமையில் இருந்ததினால், ஆப்கானிய அமீர்களின் விஷயங்களில் அவர்கள் தலையிட நேர்ந்தது. இதற்குக் காரணம் ருஷியர்கள் தங்கள் ஆதிக்கத்தைப் பெருக்கிக் கொண்டு ஆப்கானிஸ்தானம் வழியாய் இந்தியாவின்மீது வரக்கூடும் என்ற பயமே.

ஆகையால் பதினெட்டாம், பத்தொன்பதாம் நூற்றாண்டுகளில் வடமேற்கு எல்லைப் பாதுகாப்பு ஒன்றுதான் முக்கியமானதாகக் கருதப்பட்டது. இதை

யொட்டிய அபிப்பிராய பேதங்கள் ஆங்கிலேய அறி வாளர்களுக்குள்ளேயே உண்டாயின. மலைகளையும், நதிகளையும் தாண்டிச் சென்று ஆப்கானியருடைய விவகாரங்களில் தலையிட்டுக் கொள்வது சரியன்று என்றனர் சிலர். மற்றும் சிலர் ஆப்கானிய விவகாரங் களில் தலையிட்டுக் கொண்டால்தான் இந்தியாவைப் பாதுகாக்கக் கூடும் என்றனர். தலையிடாக் கொள்கை யாதொரு பயனையும் அளிக்காததினால் ஆங்கிலேயர்கள் ஆப்கானிய விஷயங்களில் புகுந்து நஷ்டத்தையும், கஷ்டத்தையும் அடைந்தனர்.

தலையிடாக் கொள்கை

முதலில் பஞ்சாப் பரிபாலனத்தையும் பிறகு இந்திய பரிபாலனத்தையும் செவ்வனே நடத்திய **ஜான் லாரென்ஸ்** பிரபுவும், **கானிங், மேயோ, நார்த் ப்ருக்** என்ற ராஜப் பிரதிநிதிகளும் ஆப்கானிய விவகாரங் களில் தலையிடக் கூடாதென்றனர். ஏனெனில் அவர் கள் ஆப்கானிஸ்தானம் பலமுள்ளதாக இருக்க வேண்டுமென்றும் ஆப்கானியருடன் நட்பு பாராட்ட வேண்டுமென்றும் நோக்கம் கொண்டிருந்தனர். வட மேற்கிலுள்ள மலைத்தொடர் இயற்கையான சுவர் போல் இருந்ததினால் அங்கிருக்கும் கணவாய்களை மட்டில் காப்பது போதுமென்பது அவர்களுடைய கருத்து. இதைமீறி ஆப்கானியருடைய விஷயங்களில் தலையிட்டுக் கொண்டால் அவர்களுடைய விரோதத் தைச் சம்பாதிப்பதேயன்றி வேறு நன்மை உண் டாகாது என்றெண்ணினர்.

ஆனால் ஆங்கிலேய ராஜ்யத்தைப் பெருகச் செய்ய வேண்டுமென நோக்கம் கொண்டிருந்த **லார்ட்**

லிட்டன், லார்ட் ஆக்லண்ட், லார்ட் எல்லென் பரோ என்ற கவர்னர்-ஜெனரல்கள் முற்போக்கான கொள்கையுடையவர்கள்; ஆப்கானிய விஷயங்களில் தலையிட்டுக்கொண்டு மூன்று யுத்தங்கள் செய்தார்கள்.

முற்போக்கான கொள்கை

முதலிரண்டு ஆப்கானிய யுத்தங்களினால் யாதொரு பயனும் கிட்டாததோடு ஏராளமான பொருள் சேதமும், ஆள் சேதமும் விளைந்தன. ஆயினும் ஆங்கிலேய துரைத்தனத்தார் மூன்ருவது முறை, ஆப்கானியரோடு யுத்தம் செய்தனர். **லார்ட் எல்லென் பரோ** செய்த யுத்தத்தின் முடிவில் ஆங்கிலேயப் படைகள் ஆப்கானிஸ்தானத்திலிருந்து திருப்பி அழைத்துக்கொள்ளப்பட்டபோது, ஆப்கானியர் ஆங்கிலேயரோடு நட்புப் பாராட்டி வரும்பக்ஷத்தில், ஆப்கானியருடைய துரைத்தன அமைப்பு எவ்வாருக இருப்பினும் அதை அங்கீகரிக்க உடன்படுவதாக ஆங்கிலேயர் கூறினர்.

மூன்ருவது ஆப்கானிய யுத்தத்திற்குப் பிறகு **அப்துர் ரஹிமான்,** அவர் மைந்தர், **ஹபீபுல்லா** ஆகிய இருவரும் ஆங்கிலேயருடன் நேசமாகவே இருந்தனர். முன் அத்தியாயத்தின் இறுதியில் **லார்ட் கர்ஸன்** வடமேற்கு எல்லை மாகாணத்தை ஏற்படுத்தினுர் என்று கூறப்பட்டுள்ளது அல்லவா? ஆனல் **அமனுல்லா** என்பவர் அமீரானபோது ஆங்கிலேயருடன் சண்டை தொடுத்து சீக்கிரத்திலேயே சமாதானம் செய்து கொண்டார். ஆங்கிலேய துரைத்தனத்தார் அமீருக்குக் கொடுத்து வந்த உபகாரச் சம்பளம் இது முதலாக

சென்ற அறுபது ஆண்டுகளாக ஆப்கானிஸ்தான நிலைமை

நிறுத்தப்பட்டது. அமனுல்லா நாட்டினின்றும் துரத்தப்படவே, **நாதர்ஷா** அமீரானுர். சீக்கிரத்தில், **நாதர்ஷா** கொலே செய்யப்படவே, அவருடைய மைந்தர் அமீரானுர். இவர் ஆங்கிலேயருடன் நட்புப் பாராட்டி வருகிருர். அதனுல் ஆங்கிலேயர்களுக்கு அயல் நாட்டினர் எல்லேப் புறமாக வந்து துன்பம் விளேக்க கூடும் என்ற கவலேயின்றி இருக்கிருர்கள்.

பயிற்சிகள்

1. எல்லேப் பாதுகாப்பையொட்டின இரண்டு கொள்கைகள் யாவை?

2. யுத்த முடிவில் லார்ட் எல்லென்பரோ ஆப்கானியருக்குச் செய்த அறிக்கை யாது?

3. ஆப்கானிய விவகாரங்களில் ஆங்கிலேயர் தலேயிட்டுக்கொண்டது எதன்பொருட்டு?

20. மின்டோ - மார்லி சீர்திருத்தங்கள்

லார்ட் கர்ஸனுக்குப் பின்பு **லார்ட் மின்டோ** வைஸிராயாக நியமிக்கப்பட்டு இந்திய பரிபாலனத்தை கி. பி. 1905 முதல் கி. பி. 1910 வரை நடத்தினுர். லார்ட் கர்ஸன் காலத்திலேயே நாட்டில் அமைதி குறைந்து குடிகள் துரைத்தனத்தார் மீது வெறுப்புக்கொண்டிருந்தனர். அன்றியும், அப்போது அயல் நாட்டுச் சரக்குகளே பஹிஷ்கரிக்கவேண்டும் என்கிற இயக்கம் இருந்து வந்தது. அவை



மின்டோ பிரபு

யாவும் இப்போது அதிகமாகப் பெருகிவிட்டன. சிலர் சட்டத்தை மீறி நடக்கத் தொடங்கினர்.

அடக்குமுறைச் சட்டங்கள்

சட்டத்துக்கு விரோதமாக நடந்தவர்களை அடக்கக் கருதி லார்ட் மின்டோ சில அடக்குமுறைச் சட்டங்களைப் பிறப்பித்தார். இவை அமுலுக்கு வந்தபொழுது குடிகளுக்குத் துரைத்தனத்தார்மீது பெரிதும் வெறுப்பு ஏற்பட்டது. இவர்களையும் இவர்களுக்கு ஆதரவாயிருந்த சபைகளையும், பொதுஜனக் கூட்டங்களையும், பத்திரிகைகளையும் அடக்கக் கருதி துரைத்தனத்தார் சட்டங்கள் செய்து அவற்றின் உரிமைகளைக் குறைத்தனர். இவற்றினால் அமைதி உண்டாகவில்லை. அடக்குமுறைச் சட்டங்களைக் கொண்டு அமைதியை நிறுவுவது முடியாத காரியம் என்பதை நம் நாட்டுத் தேசாபிமானிகளும் வைஸிராயும் உணர்ந்தனர். அன்றியும் அப்போது காங்கிரஸ் என்ற தேசிய மகா சபையில் பிளவு ஏற்பட்டு இரண்டு கக்ஷிகள் தோன்றின. ஒன்றில் மிதவாதிகளும், மற்றொன்றில் அமிதவாதிகளும் சேர்ந்துகொண்டனர். துரைத்தனத்தார் மிதவாதிகளைத் தங்களுக்கு அனு

கோபால கிருஷ்ண கோகலே

கூலமாக்கிக்கொள்ள விரும்பினர். மிதவாதிகளுள் முதன்மை பெற்றிருந்த **கோபால கிருஷ்ண கோகலே** என்பவர் துரைத்தனத்தார் குடிகளின் அபிப்பிராயத்திற்கிணங்கி உரிமைகளிற் சிறிதளவேனும் கொடுத்துப் படிப்பாளர்களைச் சமாதானப் படுத்திக் கொள்ளவேண்டும் என உபதேசித்தார்.

மின்டோ மார்லி சீர்திருத்தங்கள்

இவை காரணமாக வைசிராய் அப்போது இந்தியக் காரியதரிசியாக இருந்த **லார்ட் மார்லி** என்பவரோடு கலந்து ஆலோசித்து ஒரு அரசியல் சீர்திருத்தச் சட்டத்தைக் கி. பி. 1909-ல் அமுலுக்குக் கொண்டு வந்தார். அவ்விருவருடைய பெயர்களையும் ஒட்டி அதற்கு **மின்டோ மார்லி சீர்திருத்தங்கள்** (Minto-Morley Reforms) என்ற பெயர் வந்தது. அதன் பயனாக இந்தியர்களுக்கு முன்னிலும் அதிகமான உரிமைகள் கிடைத்தன. அதையொட்டி அகில இந்திய துரைத்தனத்துச் சட்டசபை மெம்பர்களின் தொகை அதிகமாக்கப்பட்டது. முன்பு அச்சபையில் 21 மெம்பர்கள் இருந்தனர். இப்பொழுது அவர்களின் எண்ணிக்கை 60 ஆயிற்று. இவர்களுள் 28 பேர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள். மற்றும் சிலர் பொது ஜனங்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள். இன்னும் சிலர் துரைத்தனத்தாரால் நியமனம் செய்யப்பட்டவர்கள். இக்காரணத்தை ஒட்டியே முனிசிபாலிடிகளுக்கும், ஜில்லா போர்டுகளுக்கும், நிலச்சுவான்தார்களுக்கும், சர்வகலா சாலைக்கும், வர்த்தகர்களுக்கும், தமக்கு இஷ்டமான பிரதிநிதிகளைத் தேர்ந்து எடுக்கும் சுதந்திரம் கொடுக்கப்பட்டது.

மாகாண சட்டசபைகளின் அங்கத்தினர் தொகை இருமடங்கு ஆயிற்று. இவர்களுள் துரைத்தன உத்தியோகஸ்தர்கள் மற்றவர்களினும் குறைவாக இருக்க வேண்டும்.

மாகாண சட்ட சபைகளின் உரிமைகள்

மாகாண சட்டசபைகளுக்குச் சட்டங்கள் செய்யவும், பரிபாலன சம்பந்தமான விஷயங்களை விவாதிக்கவும், வரிகள் விதிக்கவும் அதிகாரம் கொடுக்கப்பட்டது. சட்டசபை மெம்பர்கள் வரவுசெலவு திட்ட ஜாபிதா சம்பந்தமாகத் தீர்மானங்கள் கொண்டுவரலாம். ஆனால், அவர்கள் வரவு செலவுகளை மாற்றக் கூடாது. முஸ்லிம்களுக்குத் தனிப்பட்ட வாக்குரிமையும், தனியாகப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தனுப்பும் உரிமையும் கொடுக்கப்பட்டன.

மின்டோ-மார்லி சீர்திருத்தங்கள் அமுலுக்கு வருவதற்கு முன்னமேயே கி. பி. 1907-ல் வைஸிராயின் நிர்வாக சபைக்கும், இந்திய காரியதரிசியின் ஆலோசனை சபைக்கும் இந்தியர்கள் நியமிக்கப்பட்டனர். அவ்வாறே மாகாண நிர்வாக சபைகளுக்கும் இந்தியர் நியமிக்கப்பட்டார்கள். இந்தியர்களை இந்த உத்தியோகங்களில் நியமிக்க மார்லி பிரபுவுக்கு மனமில்லை. எனினும் வைஸிராயின் கருத்திற்கிணங்கி அவர் இந்தியரை நியமித்தார்.

ஸின்ஹா பிரபு

கி. பி. 1909-ல் வைஸிராயின் நிர்வாக சபைச் சட்ட மெம்பராக நியமிக்கப்பட்ட **ஸின்ஹா** முதலில் இந்திய காரியதரிசியின் கீழ் **அண்டர் ஸெகிரிடரி**யாகவும், பின்பு பீஹார் மாகாணத்துக்குக் **கவர்னர**ாகவும் நியமிக்கப்பட்டார். அல்லாமலும், அவர் பிரபுப் பட்டம் பெற்று **லார்ட் ஸின்ஹா** என்று வழங்கலானர். மின்டோ பிரபு திபெத்தோடும், ருஷியாவோடும், ஒப்பந்தங்கள் செய்துகொண்டு நட்புப் பாராட்டி வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார். அப்போது ஆப்கானிஸ்தானம், பாரஸிகம் ஆகிய நாடுகளின் சம்பந்தமும் ஒழுங்கு படுத்தப்பட்டது.

பயிற்சிகள்

1. லார்ட் மின்டோ அடக்குமுறைச் சட்டங்களைப் பிறப்பித்தது ஏன்? அதன் விளைவு என்ன?

2. மின்டோ-மார்லி சீர்திருத்தச் சட்டத்தினல் மத்திய துரைத்தன சம்பந்தமான சட்டசபையும், மாகாண சட்டசபைகளும் என்ன உரிமைகளைப் பெற்றன?

3. ஸின்ஹா எங்ஙனம் பெருமைப் படுத்தப்பட்டார்?

21. இந்தியாவும் ஐரோப்பிய மகா யுத்தமும்

டில்லி தர்பார்

முன்பு கவர்னர் ஜெனரலாக இருந்த லார்ட் ஹார்டிஞ்சின் பேரரான இரண்டாம் **லார்ட் ஹார்டிஞ்ச்** வைஸிராயாக நியமிக்கப்பட்டார். இவர் கி. பி. 1910 முதல் கி. பி. 1915 வரை இந்திய பரிபாலனத்தை நடத்தினர். 1911-ல் ஐந்தாம்

ஜார்ஜ் மன்னரும் மேரி மஹாராணியாரும் இந்தியாவுக்கு வந்து டில்லியில் முடி சூட்டிக்கொண்டனர். அப்பொழுது அரசர் வங்காளப் பிரிவினையை ரத்து செய்துவிட்டார் என்று முன்பே கூறப்பட்டுள்ளது அல்லவா? இந்திய சாம்ராஜ்யத்துக்குக் கல்கத்தாவை யன்றி **டில்லி**மாநகரம் தலைநகராக்கப்பட்டது. நாட்டில் கல்வியைப் பெருக்க 50 லக்ஷம் ரூபாய் ஒதுக்கி வைக்கப்பட்டது. ஹார்டிஞ்ச் பரிபாலனத்தில் ஆரம்பக் கல்விக்கான பள்ளிக்கூடங்கள் இருமடங்காயின. அல்லாமலும், வைஸிராயின் நிர்வாக சபையில் கல்வி சம்பந்தமான யாவற்றையும் கவனிப்பதற்காக ஒரு தனி மெம்பர் நியமிக்கப்பட்டார். இந்தியாவில் **பாட்னு, காசி, மைசூர், டாக்கா** முதலிய இடங்களில் பல்கலைக் கழகங்கள் உண்டாயின. **ரங்கூனி**லும் ஒரு சர்வ கலாசாலை ஏற்பட்டது.

ஹார்டிஞ்ச் பிரபு

நெடுநாட்களாக வயிற்றுப் பிழைப்பை நாடி இந்தியக் கூலிகள் வெளி நாடுகளுக்குச் சென்று வேலை செய்து வந்தனர். இவர்கள் சென்றிருந்த நாடுகளில் கடுமையான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருந்தனர். லார்ட் ஹார்டிஞ்ச் கூலியாட்கள் அனுப்பும் முறையைத் தொலைத்தார். அவர் இந்தியரிடம் அன்பு கொண்டு அவர்களைப் பரிவுடன் நடத்தினர். அதனுல் குடிகளும் அவரிடம் அன்பு பாராட்டினர். அவர் பரிபாலனத்தில் கி. பி. 1914-ல் **ஐரோப்பிய மகா**

யுத்தம் தொடங்கவும், அதில் இங்கிலாந்தும் ஜெர்மனியும் ஒன்றையொன்று எதிர்த்துப் போர் செய்தன.

ஐரோப்பிய மகா யுத்தத்தின் காரணங்கள்

கி. பி. 1871-ல் ஜெர்மானியர் பிரெஞ்சுக்காரருடன் சண்டையிட்டு அவர்களிடமிருந்து **அல்ஸெஸ், லொரெய்ன்** என்ற நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டார்கள். இவற்றைத் திரும்பப் பெறவேண்டுமெனப் பிரெஞ்சுக்காரர் விரும்பினர். ஜெர்மானியர் குடியேறுவதற்குத் தக்க நாடுகளைப் பெறக் கருதி மற்றைய ஐரோப்பிய நாடுகள் சிலவற்ருேடு சண்டை செய்யத் தீர்மானித்தனர். அப்போது ஜெர்மானியருக்கும் ருஷியருக்கும் பகை இருந்தது. ருஷியர் ஸ்லாவ் ஜாதியினர். அவர்கள் இனத்தார் பால்கன் நாடுகளில் குடியிருந்தனர். ஜெர்மனி பால்கன் விவகாரங்களில் தலையிட்டுக்கொண்டபோது ருஷியருக்கு ஏற்கெனவே ஜெர்மானியர் மீதிருந்த பகை அதிகமாயிற்று. ஜெர்மானியர் ருஷியருடைய பகைவர்களான துருக்கியரோடு நட்புப் பாராட்டியதையும் ருஷியர் வெறுத்தனர். இவ்வாருன சமயத்தில் ஆஸ்டிரியாவுக்கும் ஸெர்பியாவுக்கும் பகை உண்டாயிற்று. அப்பொழுது ருஷியர் ஸெர்பியர் கக்ஷியிலும், ஜெர்மானியர் ஆஸ்டிரியர் பக்கலிலும் சேர்ந்துகொண்டனர். இப்படி ஐரோப்பிய ஜாதியினரில் பலர் ஒருவர்மீதொருவர் பகை பாராட்டிப் போர் செய்வதற்குத் தக்க தருணம் வாய்ப்பதை எதிர்ப்பார்த்திருந்தனர்.

1914-ம் வருஷம் ஆஸ்டிரியா நாட்டு இளவரசன் ஸெர்பியன் ஒருவனுல் ஸராஜிவோவில் கொலையுண்டான். ஸெர்பியாவின் மீது பகை கொண்டிருந்த ஆஸ்

டிரியா இதைக் காரணமாகக் கொண்டு அந்நாட்டின் மீது சண்டை செய்யத் தொடங்கியது. ஜெர்மானியர் ஆஸ்டிரியா பக்கலிலும், ருஷியரும், பிரெஞ்சுக்காரரும் ஸெர்பியா கக்ஷியிலும் சேர்ந்து கொண்டனர்.

ஆங்கிலேயர் போரில் இறங்குதல்

பிரான்ஸை எதிர்ப்பதற்காக ஜெர்மானியர் தங்கள் படைகளை பெல்ஜியம் நாட்டின் வழியாக விடுத்தனர். **பெல்ஜியம்** எந்தக் கக்ஷியிலும் சேராத நாடு. எவரேனும் அதற்குத் தீங்கிழைத்தால் ஆங்கிலேயர் பெல்ஜியருக்கு உதவி புரிவதாக வாக்களித்திருந்தனர். இப்போது ஜெர்மானியர் அநீதியாக பெல்ஜியம் நாட்டில் நுழைந்து சென்றதனால், ஆங்கிலேயர் ஜெர்மானியருக்கு விரோதமாய் பெல்ஜியத்துக்கு உதவ வேண்டியவராயினர். சின்னாட்கள் கழித்துத் துருக்கி ஜெர்மானியரோடு சேர்ந்துகொண்டது. இங்ஙனம் பல நாட்டினர் கலந்து சண்டையிட்ட இந்தப் பெரிய யுத்தம் நான்கு வருஷங்களுக்கும் அதிகமாக நடைபெற்றது. இந்த யுத்தத்தில் உலகில் அதுவரையில் கண்டிராத புதிய புதிய கொடிய முறைகள் கையாளப்பட்டு ஜனங்கள் லக்ஷக்கணக்கில் மாண்டனர். இந்த யுத்தத்தில் நீர்மூழ்கிகள், குரூயிஸர்கள், நாசகாரிகள், முதலிய கப்பற்படைகளும் மிதக்கும் கண்ணிகள் (Floating mines), வெடிகுண்டுகள், விஷவாயு, யந்திர பீரங்கிகள், டாங்கிகள் போன்ற பல்வகையான நூதன சாதனங்களும், ஆயுதங்களும் உபயோகிக்கப்பட்டு ஏராளமான உயிர்ச் சேதத்தை யுண்டாக்கின.

இந்தப் பெரிய போரில் நமது இந்தியா ஆங்கிலேயருக்குப் பேருதவிகள் செய்ததைக் கண்டு அவர்கள் நன்றி பாராட்டினர். பிற நாட்டினர் வியப்புற்றனர். இந்தியப் பொது ஜனங்களும், அரசர்களும் பணமும் போர்ப் படைகளும், போராயுதங்களும் தந்து உதவினர். சில இந்திய சிற்றரசர்கள் நேரில் யுத்த முனைக்குச் சென்று உதவினர். தமது படைகளைத் தங்கள் செலவில் அனுப்பினர் சில மன்னர்கள். இந்திய சிப்பாய்கள் பிரான்ஸ், எகிப்து, ஆப்பிரிக்கா, மெஸொபொடாமியா முதலான நாடுகளுக்குச் சென்று யுத்தம் செய்து பெரும் புகழ் பெற்றனர். சிலர் **விக்டோரியா கிராஸ்** என்ற அரிய பட்டம் பெற்றனர்.

மகா யுத்தத்தில் இந்தியா ஆங்கிலேயருக்குச் செய்த உதவிகள்

சண்டை தொடங்கியபோது இந்திய படைகளில் **2,50,000** பிரிட்டிஷ் போர்வீரர்களும், இந்திய சிப்பாய்களும் இருந்தனர். பின்னர் அது கொஞ்சம், கொஞ்சமாகப் பெருகி வரலாயிற்று. யுத்தத்தை முதலில் தொடங்கியது நமது இந்தியப் போர்வீரர்களே. மெஸொபொடாமியாவில் சண்டை செய்த இந்திய வீரர்கள் **பாஸ்ரா**வையும் **குடேல் அமாரா**வையும் பிடித்துக்கொண்டு **பாக்தாதை** எதிர்த்துச் சென்று அதையும் கைப்பற்றிக் கொண்டனர். பாலஸ்தீனத்தில் இருந்த சைனியம் ஜெருஸலேமையும் **டாமாஸ்கஸை**யும் கைப்பற்றிக்கொண்டது. கிழக்கில் ஜெர்மானியர் தலை கிளம்ப முடியாதபடி செய்தது நம் இந்தியப் படையேயாம். ஆப்பிரிக்காவுக்கனுப்பப்பட்ட இந்தியப் படையும் வெற்றிகள் பல பெற்றுப்

புகழ் எய்தியது. இந்த மகா யுத்தத்தில் ஏராளமான இந்திய வீரர்கள் உயிரிழந்தனர். இந்தப் பெரிய யுத்தம் நடந்து வருகையில் உலகின் எல்லா நாட்டுக் குடிகளும் மிகுந்த துன்பத்தை யடைந்தனர். உணவுப் பொருள் கள் போதுமான அளவில் கிடைக்காமலும், அவற்றின் விலை அதிகமாகியும் போயின. வியாபாரமும் கைத் தொழில்களும் குறைவு பட்டன. இந்த யுத்தத்தில் சண்டையிற் சேராத பொதுஜனங்கள்கூட வெடி குண்டுகளால் கொலையுண்டனர்.

இந்த யுத்தத்தில் ஆங்கிலேயருடைய கப்பற் படைகள் யுத்தம் நடைபெற்ற இடங்களுக்கெல்லாம் போராயுதங்களையும் உணவுப் பொருள்களையும் கொண்டு சென்றன. வியாபாரக் கப்பல்களுக்குப் பகைவர் தீங்கிழைக்காதபடி அவற்றைக் காவல் செய் தன. நடுநிலை நாடுகளிலிருந்து பகைவர்களுக்கு எவ் வகையான உதவியும் கிட்டாதபடி தடுத்தன.

வார்ஸேல்ஸ் உடன்படிக்கை

1919-ம் வருஷம் யுத்தம் ஓய்ந்து **வார்ஸேல்ஸ்** என்ற இடத்தில் சமாதான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. வெற்றி பெற்ற ஐரோப்பிய நாட்டினர் ஜெர்மானிய ரைப் பெரிதும் தாழ்மைப்படுத்தியும், அவர்கள் ஏராளமான நஷ்டஈடு செய்யுமாறு விதித்தும் ஏற்பாடுகள் செய்தனர்.

பயிற்சிகள்

1. ஐரோப்பிய மகா யுத்தம் நடைபெறுவதற்கு முக்கிய காரணங்கள் யாவை?
2. சண்டை மூண்டது எப்போது? எவ்வாறு?

3. ஐரோப்பிய நாட்டினர் எந்தெந்த கக்ஷியில் சேர்ந்துகொண்டனர்? ஏன்?

4. இந்த யுத்தத்தில் ஆங்கிலேயரும் சேரக் காரணம் யாது?

5. இந்தியா இந்த யுத்தத்தின் பொருட்டுச் செய்த உதவிகள் யாவை?

6. இந்த யுத்தத்தில் அதிகமான உயிர்ச்சேதம் உண்டானது ஏன்?

22. மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்களும், பொறுப்பாட்சியின் தொடக்கமும்

இந்திய காரியதரிசி மாண்டேகு இந்தியா வருதல்

லார்ட் மின்டோவுக்குப் பிறகு இந்திய வைஸிராயானவர் **லார்ட் செம்ஸ்போர்டு** ஆவர். அவர் கி. பி. 1916 முதல் கி. பி. 1921 வரை இந்நாட்டுப் பரிபாலனத்தை நடத்தினர். அப்போது மாண்டேகு என்ற யூதர் இந்திய காரியதரிசியாக இருந்தார். மகாயுத்தம் நடைபெற்று வருகையில் கி. பி. 1917-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் இவர் பார்லிமெண்ட் சபையில் இந்தியருக்குப் பொறுப்பாட்சி தரப்படும் என அறிக்கையிட்டார். மாண்டேகு துரைத்தன இலாகாக்கள் அனைத்திலும் இந்தியரை அதிகமாக நியமிக்க வேண்டுமென விரும்பினர். ஸ்தல ஸ்தாபனங்களைப் பலப்படுத்தி அவைகள் ஸ்தல சுய ஆட்சியைச் செவ்வனே நிறைவேற்றுமாறு செய்யவேண்டுமெனக் கருதினர். அவர் அரசியலில் இந்தியருக்கு எவ்வளவு வரையில் அதிகமான பொறுப்பையும், சுதந்தரங்களை

யும் தரலாம் என்பதைத் தாமே நேரில் கண்டும் கேட்டும் அறியவேண்டுமென எண்ணினர். அதனால், அவர் இந்நாட்டிற்கு வந்து வைஸிராயோடு சுற்றுப் பிரயாணஞ் செய்து இந்தியப் பிரமுகர்களை நேரில் கண்டு கலந்து பேசி அவர்கள் யோக்கியதையையும், நோக்கத்தையும் தெரிந்துகொண்டார்.

மாண்டேகு பிரபு

செம்ஸ்போர்டு பிரபு

பின்னர் மாண்டேகுவும் லார்ட் செம்ஸ்போர்டும் ஆலோசனைகள் செய்து பார்லிமெண்டின் சம்மதத்தைப் பெற்று ஒரு சீர்திருத்தச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்தனர். அவ்விருவருடைய பெயர்களையும் ஒட்டி அதற்கு **மாண்டேகு-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்** என்ற பெயர் வந்தது. உச்சரிப்பின் சௌகரியத்திற்காக அதை **மாண்ட்போர்டு சீர்திருத்தங்கள்** என வழங்கி வரலாயினர். அதன் பயனாக இந்தியர்களுக்கு முன்னிலும் மேம்பட்ட பெரிய உத்தியோகங்களும், உரிமைகளும் கிடைத்தன.

மாண்டேகு செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள்

செம்ஸ்போர்டு பரிபாலனத்தில் நாட்டில் அமைதி மிகவும் குன்றிவரத் தலைப்பட்டதனால், குடிகளின் உரிமைகளைக் குறைப்பனவான 'ரௌலட் ஆக்ட்' முதலிய கடுமையான சட்டங்கள் பிறப்பிக்கப்பட்டன. அதனால் குடிகள் முன்னிலும் அதிகமாக வெகுண்டு சட்டத்தை மீறி நடக்கத் தலைப்பட்டனர். லார்ட் செம்ஸ்போர்டு **ஸாட்லர் கமிஷன்** என்ற விசாரணை சபை ஒன்றை நியமித்து கல்கத்தா பல்கலைக் கழகத்தைச் சீர்திருத்துவதற்கான ஆலோசனைகளைக் கூறும் படி ஏற்பாடு செய்தார்.

இங்கிலாந்தில் பார்லிமெண்டார் அரசியல்

ஆங்கிலேய சாம்ராஜ்யத்து அரசியலில் மன்னரே முதன்மையானவர். ஆயினும் அவர் குடிகள் வகுத்துள்ள சட்ட திட்டங்களை அனுசரித்தன்றித் தமதிஷ்டம்போல் யாதொன்றையும் செய்ய இயலாது. விவாகத்தில் கூட அவர் தமது முன்னோர்களின் பழக்க வழக்கங்களை மதித்தும், குடிகளின் நோக்கத்திற்கு இணங்கியும் நடக்கவேண்டும். அரச வமிசத்தைச் சேராத ஒரு சாதாரண மாதை மணக்க விரும்பியதை நாட்டுக் குடிகள் ஆமோதிக்காததனால் **எட்டாம் எட்வர்ட்** சிங்காதனத்தையே நீத்துவிட வேண்டியிருந்ததை நீங்கள் அறிந்திருக்கலாம். சட்ட திட்டங்களைச் செய்வதும் அவற்றை அமுலுக்குக் கொண்டு வருவதும் பார்லிமெண்டின் பொறுப்பாகும். ஆதலால் மன்னர்பிரான் பார்லிமெண்டின் ஆலோசனைப்படிதான் எதையும் செய்யவேண்டும். பார்லிமெண்டில் இரண்டு சபைகள் உள்ளன. ஒன்று பொதுஜனப் பிரதிநிதிகள் அடங்கிய **பொதுமக்கள் மன்றம்.** அதை ஆங்கிலத்

தில் **ஹவுஸ் அவ் காமன்ஸ்** (House of Commons) என்பர். மற்றொன்று மன்னர்பிரானால் நியமிக்கப்படும் பெரியோரும், மத குருக்களும், பிரபுக்களும் அடங்கிய **பிரபுக்கள் மன்றம்.** இதை ஆங்கிலத்தில் **ஹவுஸ் அவ் லார்ட்ஸ்** (House of Lords) என்பர். இவ்விரண்டு சபைகளும் சேர்ந்ததுதான் **பார்லிமெண்ட்** (Parliament) எனப்படுவது.

பார்லிமெண்ட் மெம்பர்கள் நாட்டின் பல்வேறு அரசியல் கக்ஷிகளிற் சேர்ந்திருப்பர். எந்தக் கக்ஷியினரின் தொகை அதிகமாகவுள்ளதோ அதனின்றும் அரசர் தமது பிரதம மந்திரி (Prime minister) யைத் தேர்ந்தெடுப்பார். இவர் தமது அபிப்பிராயத்திற்கிணங்கித் தம்முடன் ஒத்துழைக்கக் கூடியவர்களைச் சேர்த்துக்கொண்டு **காபினெட்** (Cabinet) என்ற மந்திரி சபையை அமைத்துக் கொள்ளுவார். அரசியலில் பார்லிமென்டுக்கு உத்தரவாதமாவது இக் காபினெட் சபையே. இச் சபையின் அங்கத்தினர்களான மந்திரிகள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு நிர்வாக இலாகாவை கவனித்துக் கொள்வார்கள்.

i. உள்நாட்டு அரசியல் (Home Government)

இந்தியாவைப்பற்றின விஷயங்களில் பார்லிமென்டுக்குப் பொறுப்பானவர் இந்திய காரியதரிசியே. அவரையே ஆங்கிலத்தில் **ஸெகிரிடரி அவ் ஸ்டேட் பார் இந்தியா** என்பர். அவருக்கு வருஷம் ஒன்றுக்கு 5,000 பவுன் சம்பளம். பிரிட்டிஷ் காபினெட் சபையில் அவரும் ஒரு அங்கத்தினர் ஆவார். அவருக்கு உதவியாக ஒரு சபை உண்டு. அதில் எட்டு முதல்

பன்னிரண்டு வரையிலான அங்கத்தினர்கள் இருப்பார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் வருஷம் ஒன்றுக்கு 1200 பவுன் சம்பளம். அவர்கள் ஐந்து வருஷ காலம் வேலை பார்க்கலாம். அச்சபையின் அங்கத்தினர் இந்திய விஷயங்களில் அனுபவமுள்ளவராக இருப்பார்கள். ஸெகிரிடரிக்கு உதவிசெய்ய இரண்டு **அண்டர்-ஸெகிரிடரிகள்** உண்டு. ஸெகிரிடரி தமது சபையின் அபிப்பிராயங்களைக் கலந்தும், கலக்காமலும், மீறி நடந்தும் அதிகாரம் செய்யலாம். இந்தியா கவர்ன்மென்டார் சில காரியங்களை ஸெகிரிடரியின் அனுமதியைப் பெற்றே தான் செய்யலாம். தாங்களே சுதாவில் செய்வனவற்றை அவர்கள் உடனே ஸெகிரிடரிக்கு அறிவிக்க வேண்டும். ஹோம் கவர்ன்மெண்டுக்கான செலவு இப்போது பிரிட்டிஷ் பொக்கிஷத்திலிருந்தே செய்யப்படுகிறது.

இவர்களையன்றி **ஹை கமிஷனர்** என்ற உத்தியோகஸ்தர் ஒருவர் வைஸிராயினால் நியமிக்கப்பட்டு இங்கிலாந்தில் வேலைபார்த்து வருகிறார். படிக்கக் கருதி மேனாடுகளுக்குச் சென்றுள்ள இந்திய மாணவர்களையும் இந்திய வியாபாரத்தையும் கவனிப்பது இவர் தொழில். இந்திய துரைத்தனத்தாருக்குத் தேவையான அயல் நாட்டுச் சாமான்களை வாங்கி யனுப்புவதும் இந்தியா கவர்ன்மென்டாருக்கு இங்கிலாந்தில் ஆகவேண்டிய அலுவல்களைச் செய்வதும் இவருடைய கடமைகளாம்.

ii. இந்தியா கவர்ன்மென்ட்

வைஸிராயைத் தலைமையாகக் கொண்ட அகில இந்திய துரைத்தனமே **இந்தியா கவர்ன்மென்ட்** எனப்படுவது. வைஸிராய் பிரிட்டிஷ் பிரபுக்களிலிருந்து அரசரால் தேர்ந்தெடுக்கப்படுவார். அவருக்கு உதவியாக ஒரு நிர்வாக சபையுண்டு. இதில் மூவர் இந்தியர்களாக இருப்பார்கள். தற்போது வைஸிராயின் நிர்வாக சபையில் இரு மடங்கான அங்கத்தினர் உள்ளார்கள். இவர்களுள் பெரும்பாலார் இந்தியர். நிர்வாக சபையின் மெம்பர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இலாகாவைக் கவனிப்பார்கள். அயல் நாடுகள், சுதேச ராஜ்யங்கள் ஆகிய இவற்றின் சம்பந்தமான விஷயங்களை வைஸிராயே கவனித்து வருகிறார். நிர்வாக சபையின் காரியாலயத்துக்கு **ஸெகிரிடேரியட்** (Secretariat) என்று பெயர். அதற்கு ஒரு பிரதம ஸெகிரிடரியும், பல இலாகா ஸெகிரிடரிகளும் இருப்பார்கள். இவர்களுக்குப் பல உதவி ஸெகிரிடரிகள் உண்டு. வைஸிராயும், நிர்வாக சபை அங்கத்தினர்களும் ஐந்து வருஷ காலம் வேலை பார்க்கலாம்.

வைஸிராயின் நிர்வாக சபை

அகில இந்தியா சம்பந்தமான சட்டங்களைச் செய்ய இப்போது இரண்டு சபைகள் உள்ளன. ஒன்று **லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளி** என்றும் மற்றொன்று **கௌன்ஸில் அவ் ஸ்டேட்** என்றும் பெயர்பெறும். அஸெம்ப்ளியில் சுமார் 150 மெம்பர்கள் இருப்பார்கள். இவர்களின் மொத்தத் தொகையில் ஏழில் ஐந்து பங்கு, பொதுஜனங்களின் பிரதிநிதிகளாகவும், மிகுதியில

மத்திய சட்டசபைகள்

மூன்றில் ஒரு பங்கு துரைத்தனத்து உத்தியோகஸ்தர் அல்லாதவர்களாகவும் இருப்பார்கள். அகில இந்தியா பிரதிநிதிகள் அடங்கிய லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளியை இங்கிலாந்தின் ஹவுஸ் அவ் காமன்ஸ் என்ற பொதுமக்கள் மன்றத்துக்கு ஒப்பிடலாம்.



டில்லி சட்ட சபை

அஸெம்ப்ளி மெம்பர்கள் தங்களுக்குள் ஒருவரைச் சபைத் தலைவராக தேர்ந்தெடுத்துக் கொள்வர். சட்டங்கள் செய்வதும், அரசியற் காரியங்களை விவாதிப்பதும், வரிகளை விதிப்பதும், உயர்த்துவதும், குறைப்பதும், தள்ளிவிடுவதும் இச்சபையின் தொழிலாம்.

கௌன்ஸில் அவ் ஸ்டேட் என்ற சபையில் 60 மெம்பர்கள் இருப்பார்கள். இவர்களுள் 18 பெயர்கள் மாகாணங்களிலிருந்து முஸ்லிம் அல்லாதாராலும்,

9 பெயர்கள் முஸ்லிம்களாலும், 3 பெயர்கள் ஐரோப்பிய வர்த்தகர்களாலும், **ஒருவர்** ஸீக்கியராலும் **ஒருவர்** மத்திய மாகாணங்களின் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு அமர்வார்கள். மற்றையோர் துரைத்தனத்தாரால் நியமிக்கப்படுவார்கள். இவர்களுள் துரைத்தன உத்தியோகஸ்தர்களும், உத்தியோகஸ்தர் அல்லாதவர்களும் இருப்பார்கள்.

அஸெம்ப்ளியில் நிறைவேறிய சட்டங்களை இச்சபை ஆமோதிக்கவோ அன்றித் தள்ளிவிடவோ கூடும். இச் சபையின் அத்யக்ஷகரை வைஸிராய் நியமிப்பார். இச்சபையை இங்கிலாந்தின் பிரபுக்கள் மன்றத்துக்கு ஒப்பிடலாம்.

அஸெம்ப்ளியின் ஆயுட் காலம் 3 வருஷங்களும் கௌன்ஸில் அவ் ஸ்டேட்டின் ஆயுள் காலம் 5 வருஷங்களும் ஆகும். ஆனல், இவற்றின் ஆயுளைப் பெருக்கவும் குறைக்கவும் வைஸிராய்க்கு உரிமை உண்டு. இவ்விரண்டு சபைகளின் அங்கீகாரத்தையும் பெற்ற சட்டத்தை வைஸிராய் நிராகரிக்கலாம். இவைகள் கூடாதென்ற வரியை விதிக்கும் அதிகாரமும் அவருக்கு உண்டு. அச்சபைகளைக் கூட்டவும் தள்ளி வைக்கவும் வைஸிராய்க்கு அதிகாரம் உண்டு.

இவ்விரண்டு சபைகளையன்றி இந்திய மன்னர்களின் சபையொன்று உள்ளது. அதைச் **சேம்பர் அவ் பிரின்சஸ்** (Chamber of Princes) என்பர். அதன் தலைவருக்குச் **சான்ஸெலர்** (Chancellor) என்று பெயர். அவர் அச் சபையின் மெம்பர்களிலிருந்தே தேர்ந்தெடுக்கப்படுவார்.

அகில இந்திய துரைத்தனத்தார் அயல் நாட்டு விஷயங்கள், நாணயம், தபால், தந்தி, ரயில்வே, சுரங்கம், பொது வரவு செலவு முதலியவற்றைக் கவனிப்பார்கள். இந்தியா கவர்ன்மென்டாருக்கு வருமான வரி, ரயில்வேக்களிலிருந்தும் தபால் தந்திகளிலிருந்தும் கிடைக்கும் வருமானம், உப்பு வரி, அபின் வரி, சுங்க வரி, சுதேச அரசர்கள் செலுத்தும் கப்பம் ஆகிய இவை வருவாய்களாம். செலவுக்குப் பணம் போதாதபோது புதிய வரிகள் போட்டு வசூலிக்கப் படும்.

இந்திய சர்க்காரின் வருமானம்

iii. மாகாண கவர்ன்மெண்ட்

இப்போதுள்ள இந்திய மாகாணங்கள் ஒவ்வொன்றும் ஒரு கவர்னரின் ஆட்சியிலுள்ளது. பெரிய மாகாணங்களின் கவர்னர் ஒவ்வொருவருக்கும் வருஷத்துக்கு 1,28,000 ரூபாய் சம்பளமும், சிறிய மாகாண கவர்னருக்கு வருஷத்துக்கு 66,000 ரூபாய் சம்பளமும் கொடுக்கப்படுகின்றன. பிரிட்டிஷ் பலுசிஸ்தானம், அஜ்மீர்-மேர்வாரா, டில்லி, குடகு, அந்தமான் தீவுகள் ஆகிய இவற்றைப் **பிரதான கமிஷனர்கள்** (Chief Commissioners) என்ற உத்தியோகஸ்தர்கள் பரிபாலிக்கின்றனர். இவர்களை வைஸிராயே நியமிப்பர்.

கவர்னர்கள்

மாண்ட்போர்டு சட்டத்தின்படி மாகாண பரிபாலனத்தில் கவர்னருக்கு உதவிசெய்ய இரண்டு முதல் நான்கு வரையிலான மெம்பர்களடங்கிய **நிர்வாகசபை** யொன்றும், சட்டசபை மெம்பர்களினின்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட **மூன்று**

இரட்டையாட்சி

மந்திரிகளும் உண்டு. நிர்வாக சபையினர் **ஒதுக்கப்பட்ட** விஷயங்களையும் (Reserved Subjects), மந்திரிகள் **மாற்றப்பட்டுள்ள** விஷயங்களையும் (Transferred Subjects) பரிபாலிப்பார்கள். வரிவசூல், சட்டம், பொக்கிஷம், போலீஸ், நியாயபரிபாலனம் முதலியவை **ஒதுக்கப்பட்ட விஷயங்களாம்.** கல்வி, வைத்தியம், சுகாதாரம், கூட்டுறவு, கைத்தொழில், ஸ்தல சுயஆட்சி முதலியவை **மாற்றப்பட்ட விஷயங்களாம்.** நிர்வாகசபை மெம்பருக்கு வருஷம் ஒன்றுக்கு 60,000 முதல் 64,000 ரூபாய் வரையிலான சம்பளம் கொடுக்கப்படும். இரு பிரிவுகள் கொண்ட இந்த அமைப்பை **இரட்டை ஆட்சி** (Diarchy) என்பர். இந்த ஏற்பாட்டில் ஒதுக்கப்பட்ட விஷய நிர்வாகத்துக்கு வேண்டிய பணம் ஒதுக்கிவைக்கப்பட்டு, மிகுந்திருந்ததே மாற்றப்பட்ட விஷயங்கள் சம்பந்தமான செலவுகளுக்குக் கொடுக்கப்படும். நம் நாட்டினர் இரட்டை ஆட்சியை வெறுத்ததற்கு இது ஒரு முக்கிய காரணம்.

மாகாண சட்டசபைகள்

மாகாண சட்டசபைகளில் 53 முதல் 140 வரையிலான அங்கத்தினர் இருந்தனர். இவர்களின் தொகை மாகாணத்தின் பரப்பையும் ஜனத்தொகையையும் பொறுத்ததாகும். மொத்த அங்கத்தினர்களில் எழுபது சதவீதம் பொதுஜனப் பிரதிநிதிகளாவர். சென்னை மாகாணச் சட்டசபைகளில் பொதுஜனப் பிரதிநிதிகள் 98 பெயர்களும், துரைத்தன நியமனம் பெற்றவர் 29 பெயர்களும் இருந்தனர். பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் முஸ்லிம் அல்லாதார் 65 பெயர்களும், முஸ்லிம்கள் 13 பெயர்களும், இந்திய

கிறிஸ்தவர்கள் 5 பெயர்களும், ஐரோப்பியர் ஒருவரும், ஆங்கிலோ - இந்தியர் ஒருவரும், நிலச்சுவான்தார்கள் 6 பெயர்களும், பல்கலைக்கழகப் பிரதிநிதி ஒருவரும், தொழிலாளர்கள் 5 பெயர்களும் இருந்தனர். நிர்வாக சபை அங்கத்தினர் அனைவரும் துரைத்தன நியமனம் பெற்றவருள் அடங்குவர்.

மாகாண சட்ட சபைகளின் உரிமைகள்

மாகாண சட்டசபைகளின் ஆயுள் காலம் **மூன்று** வருஷங்களே. ஆனால் அதன் ஆயுளைக் கவர்னர் பெருக்கவும், குறைக்கவும் கூடும். மாகாண சட்டசபையைக் கூட்டவும், தள்ளி வைக்கவும் கவர்னருக்கு அதிகாரம் உண்டு. மாகாண சபை மாகாண சம்பந்தமான சட்டங்களைச் செய்யவும் மாற்றப்பட்ட விஷயங்கள் சம்பந்தமான வரவு செலவுக் கணக்கை அங்கீகரிக்கவும் கூடும். சட்டசபை செய்யும் சட்டத்தைக் கவர்னர் ரத்துசெய்யலாம். சபையோர் அங்கீகரிக்க மறுத்த வரியைக் கவர்னர் விதிக்கலாம். மாகாண கவர்ன்மென்டுக்கு நிலவரி, முத்திரைக் கடுதாசிவரி, நீர்ப்பாசனவரி, சொத்துக்களை விற்பதும், வாங்குவதும், அடமானம் வைப்பதுமான தொழில்களின் மூலமாய்க் கிடைக்கும் வரிகள் ஆகியவை வருமானங்களாகும். மேலே விவரிக்கப்பட்டுள்ள அமைப்புகள் யாவும் 1935-ம் வருஷத்திய அரசியல் சட்டத்தினல் பெரிதும் மாறிவிட்டன.

பயிற்சிகள்

1. லார்ட் செம்ஸ்போர்டு பரிபாலனத்தில் அமைதி குன்றியிருந்தது ஏன்?

2. அடக்குமுறைச் சட்டங்கள் ஏன் பிறப்பிக்கப் பட்டன ? அவற்றின் விளைவு என்ன ?

3. மாண்டேகு எவ்வாருன குணமுடையவர் ? அவர் செய்ய விரும்பியது என்ன ?

4. மாண்ட்போர்டு சீர்திருத்தத்தையொட்டி இந்தியா கவர்ன்மென்ட் எவ்வாறு அமைந்தது ?

5. இரட்டையாட்சி என்பது என்ன ? அதை இந்தியர் வெறுத்தது ஏன் ?

6. கவர்னர்களுக்கும், வைஸிராய்க்கும் இருந்த முக்கியமான அதிகாரங்கள் யாவை ?

23. தேசீய இயக்கத்தின் வளர்ச்சி

பொதுமக்கள் கிளர்ச்சிசெய்யக் காரணங்கள்

மனிதர்களுக்குள்ள குணங்களில் சில இயற்கையாகவும், சில கல்வி கேள்வியும் அனுபவமும் பெருகி வருவதனுலும் உண்டாகின்றன. அந்நியர்கள் செய்வித்த கட்டுப்பாடுகளுக்கு அடங்காமல் சுயேச்சையாக நடக்க வேண்டுமென்ற விருப்பம் ஓர் இயற்கைக் குணமேயாம். சுயேச்சை விரும்பும் இக்குணம் செயற்கையினுல் பெருகத்தலைப்படுகிறது. நாட்டன்பும் ஓர் இயற்கைக் குணமேயாம். இது காலத்துக்கேற்றவாறு அடங்கியும், ஓங்கிவளர்ந்தும் காணப்படும். யாதானுமொன்று குடிகள் விரும்புவது போல் நடைபெருவிடின் அப்போது அதைத் தங்கள் இஷ்டத்துக்குப் பொருந்தியவாறு திருத்தியமைத்துக் கொள்வதற்கான கிளர்ச்சி உண்டாகிறது. அது சிறிது சிறிதாகப் பரவி ஒரு பெரும் இயக்கமாகிவிடுகிறது. மத விஷயமாகவும், செல்வாதார சம்பந்தமாகவும், உரிமைகளைப்

பெருக்கிக்கொள்ளக் கருதியும், சில கட்டுப்பாடுகளை நீக்கிச் சுயேச்சைப் பெறுவதற்காகவும், வாழ்க்கையின் சௌகரியத்தை நாடியும், முற்போக்கான யாதானு மொன்றை விரும்பும் குடிகள் கிளர்ச்சிசெய்து ஒரு பெரும் இயக்கத்தைத் தொடங்குகின்றனர்.

இங்கிலாந்தில் வரி செலுத்த மறுத்தும், மதத்தைச் சீர்திருத்த விரும்பியும், கைத்தொழிலாளர்களின் நிலைமையை உயர்த்தக் கருதியும், குடிகளின் உரிமைகளைப் பெருக்கிக்கொள்வதற்காகவும் இயக்கங்கள் உண்டாயின. அது போன்றே ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு காலத்தில் யாதானுமொரு காரணத்தை முன்னிட்டு இயக்கங்கள் தோன்றிப் பெருகிவந்துள்ளன. பல நாட்டுச் சரித்திரங்களையும் படிக்க இவற்றைப்பற்றின விவரங்கள் தெரியவரும்.

பண்டைக் காலத்து இந்தியாவில் கிளர்ச்சிகள் இல்லாத காரணங்கள்

நம் நாட்டில் பழைய இந்து அரசர்களது ஆட்சியிலும், முஸ்லிம்களது ஆட்சியிலும் நாட்டுக்குடிகள் அதிகமான கிளர்ச்சிகளின்றிச் சௌகரியமாகவே வாழ்ந்து வந்துள்ளனர். அதன் முக்கிய காரணம் அவர்கள் அதிகமான கட்டுப்பாடுகளுக்கு உட்படாமல் இருந்ததும், பொதுஜனப் பிரதிநிதிகளடங்கிய பல்வேறு அமைப்புக்களின் மூலமாக வாழ்க்கைக்கான சௌகரியங்களையும், நியாயமும் பெற்று அமைதியாக வாழக் கூடியவாறு இருந்ததுவுமேயாம். நம் நாட்டுக் குடிகளுள் பெரும்பாலார் கிராமவாசிகளே. கிராம உத்தியோகஸ்தர்களும், கிராமபரிபாலனச் சபைகளும் குடிகளுக்கு நியாயம் வழங்கியும், பொதுநன்மைக்கான

யாவற்றையும் செய்தும் வந்தவரையில் கிராமக்குடிகள் டில்லியில் தோன்றி மறைந்துவந்த அரச வமிசங்களைப் பற்றியாவது அரசர்களைக் குறித்தாவது கருதினர் அல்லர். பொதுஜனப் பிரதிநிதிகளைக்கொண்டு நடைபெற்ற அமைப்புக்கள் அவர்கள் வழக்குகளைத் தீர்த்தும், குறைகளைப் போக்கியும் வந்தவரையில் கிராமவாசிகள் வேறொன்றையும் பொருட்படுத்தவில்லை. அவர்கள் வாழ்க்கை சந்தோஷமாகவும், சுகமாகவும் இருந்தது. அல்லாமலும், அப்பழைய காலத்தில் அதிகமான போக்குவரவு சாதனங்களின்மையாலும் குடிகளின் தேவைகள் மிதமாக இருந்ததாலும் கிராமக் குடிகள் உலக விவகாரங்களைப்பற்றிய எதையும் அறியாமல் தங்கள் தங்கள் கிராமங்களில் வாழ்ந்திருந்தனர். அப்போது நாட்டில் நடந்த சண்டைகளிற் பல அவர்களைப் பாதிக்கவில்லை.

ஆங்கிலேயர் ஆட்சியில் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுதல்

ஆங்கிலேய வர்த்தகக் கம்பெனியார் ஆட்சிக்காலந் தொடங்கிப் பழைய ஸ்தல சுயஆட்சி அமைப்புக்கள் போய்விட்டதனால், குடிகள் துன்பமுற்றனர். அன்றியும், அவர்கள் காலத்தில் நடைபெற்ற சண்டைகளும் சச்சரவுகளும் அவர்களைப் பெரிதும் பாதிக்கத் தலைப்பட்டன. அல்லாமலும், அது முதலாகப் போக்கு வரவு சாதனங்கள் உண்டாகிப் பெருகி வந்ததனாலும் அவர்களுடைய தேவைகள் அதிகமாகிக் கொண்டுவரத் தலைப்பட்டதனாலும் கிராமக் குடிகளுக்கு அயல்நாடுகளுடன் உறவு ஏற்பட்டு அறிவும் அனுபவமும் பெருகின. இவை காரணமாகக் குடிகளுக்குள் தங்கள் நிலைமையில் அதிருப்தியும்,

துரைத்தனத்திடத்து வெறுப்பும் தோன்றின. நாட்டின் சட்ட திட்டங்களை வகுப்பதும், துரைத்தனத்தை நடத்துவதும், அதிகாரம் செலுத்துவதும் யாவும் ஆங்கிலேயர் வசமே இருந்தன. குடிகளுக்குச் சுதந்தரம் எதுவுமின்றி இருந்ததனால், அவர்கள் அடங்கி வாழ வேண்டியவராயினர்.

தற்கால இந்தியாவில் தேசீய இயக்கம் தோன்றிய காரணங்கள்

ஆங்கிலேய நேராட்சியில் நாட்டின் நிலைமை பெரிதும் மாறுபட்டு வரலாயிற்று. சண்டை சச்சரவுகள் போய் நாட்டில் அமைதி நிலவி வந்தது. எல்லைப் புறச் சண்டைகளினால் நாட்டுக் குடிகளின் வாழ்க்கை அதிகமாகப் பாதிக்கப் படவில்லை. போக்கு வரவுக்கான சாதனங்கள் பெருகி வந்ததனாலும் தங்களுக்கு வேண்டிய சில பொருள்களைப் பிற விடங்களினின்றும் பெற வேண்டியிருந்ததனாலும் குடிகளுக்கு வெளி நாடுகளோடு உறவு ஏற்பட்டு உலக விவகாரங்களில் ஊக்கங் கொண்டனர். அவர்கள் அறிவும் பெருகி வரத் தொடங்கியது.

லார்ட் ரிப்பன் ஸ்தல சுய ஆட்சிச் சட்டத்தைப் பிறப்பித்து, மடிந்து கிடந்த ஸ்தல ஸ்தாபனங்களை உயிர்ப்பித்தார் அல்லவா? ஸ்தல ஸ்தாபனங்களில் நுழைந்து பொதுத் தொண்டுகள் ஆற்றி அவற்றை நடத்தியதினின்றும் குடிகளுக்கு அரசியல் அனுபவமும் அதிகாரத்தில் ஆசையும் உண்டாகியது. இவை பெருகவும் அவர்களுக்குத் தங்கள் நிலைமையில் அதிருப்தியும், துரைத்தனத்தாரிடத்து வெறுப்பும் ஏற்பட்டன. சட்ட திட்டங்களைச் செய்வதிலும், துரைத்தனத்தை

நடத்துவதிலும் தங்களுக்கு அதிகாரம் வேண்டுமென விரும்பினர் குடிகள். ஆனால் துரைத்தன அதிகாரிகள் குடிகளின் உரிமைகளைப் பெருக்கி அவர்களுக்கு அதிக மான அதிகாரத்தைக் கொடுப்பதில் மனமில்லாதவர் களாகவே இருந்தனர். உரிமைகள் வேண்டுமென்ற ஜனங்கள் அவற்றைப் பெறக் கருதிக் கிளர்ச்சிகள் செய்தது இயக்கங்கள் பெருகி வருவதற்குக் காரண மாயிற்று. இந்தியக் குடிகளிடத்து அனுதாபங் கொண்டு அவர்களுக்கு அதிகமான உரிமைகளைத் தர வேண்டுமெனச் சில ஆங்கிலேய நண்பர்கள் வாதிக்கவும் தேசீய இயக்கங்கள் வன்மை யுற்றுப் பெருகிவரத் தலைப்பட்டன.

புதிய புதிய இயக்கங்கள் தோன்றி வளர்ந்த மைக்கு ஸ்தல சுய ஆட்சிச் சட்டத்தை யன்றி ஆங்கிலக் கல்வியும் ஒரு முக்கிய காரணம் ஆகும். பன்னாட்டுச் சரித்திரங்களையும் கற்றுணர்ந்த நாம் அயல் நாடுகளில் குடிகள் எவ்வாறு முன்னேற்றத்தை அடைந்துள்ளார் கள் என்பதை அறிகிறோம். அவர்களைப் போன்று நாமும் இருக்க வேண்டுமென விரும்புகிறோம். பிரெஞ் சுக்காரர் சரித்திரத்தைப் படிப்பதால் அவர்கள் எங்ங னம் **சமத்வம், சகோதரத்வம், சுதந்தரம்** எனக் கிளர்ச்சி செய்து அவற்றை நாடி உழைத்துப் பெற்றனர் என்பது தெரிகிறது. அல்லாமலும், நம்மவர்கள் பலர் அயல் நாடுகளுக்குச் சென்று அதிகமான அனுபவத் தையும் அறிவையும் பெற்றுத் திரும்பி வருவது நாம் அதிக உரிமைகளையும், ஆதிக்யத்தையும் விரும்பி நிற்பதற்குக் காரணமாகும். நம் நாட்டு இயக்கங்கள் பலவும் அரசியல் உரிமைகளைப் பெறும் நோக்கத்துடன்

தொடங்கியவைகளேயாம். அரசியலில் அதிகமான உரிமைகள் கிடைக்கப் பெற்ருல், குடிகள் தங்கள் செல்வாதாரங்களேயும், கைத்தொழில்களேயும், பெருக்கி உயிர் வாழ்வதற்கும் வறுமையைப் போக்கிக் கொள்வதற்கும் சாதனமான சௌகரியங்களேச் செய்து கொள்வதற்கும் அனுகூலம் உண்டாகுமல்லவா? எனவே, நம் நாட்டுத் தேசீய இயக்கம் அரசியலில் அதிகமான உரிமைகளேப் பெறும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

தேசீய காங்கிரஸின் ஸ்தாபனமும் வளர்ச்சியும்

லார்ட் ரிப்பன் கி. பி. 1884-ல் வேலேயை நீத்து இங்கிலாந்துக்குச் சென்ருர் அல்லவா? அவருக்குப் பின் கி. பி. 1885-ல் **லார்ட் டப்ரீன்** பரிபாலனத்தில் **இந்தியன் நாஷனல் காங்கிரஸ்** என்ற தேசீய மகா சபை நாட்டன்பும், உரிமைகளில் ஆசையும் தூண்டுவதற்காக தோன்றியது. அதை ஆரம்பம் செய்வதில் **ஏ. ஓ. ஹியூம்** என்ற ஆங்கிலேயப் பிரமுகரும் இன்னும் சிலரும் உதவி செய்தனர். அச் சபை உண்டானது முதல் அதன் ஆதரவில் தேசாபிமானிகள் வருஷந்தோறும் மஹாநாடு கூடிக் குடிகளின் குறைகளேயும் துரைத்தனத்தாருடைய செயல்களேயும் குறித்து விவாதித்து இரு திறத்தாருக்கும் அவரவர்கள் கடமைகளேயும் உரிமைகளேயும் எடுத்துக் கூறினர். இச் சபையின் அந்தஸ்தும் ஆதிக்யமும் பெருகிவரத் தலேப்பட்டபோது அரசியலாரும், பொது ஜனங்களும் இதனிடத்தில் மதிப்புக் கொண்டனர். அதனல் கி. பி. 1885-ல் 100 பெயர்களேக் கொண்டு தொடங்கிய இச் சபை 20 வருஷங்கள்

சென்று கி. பி. 1906-ல் கல்கத்தாவில் மஹா நாடு கூடியபோது அதற்கு 16,000 பெயர்களுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளும், பிறரும் வந்திருந்தனர். காங்கிரஸின் பெருமையும், அந்தஸ்தும் பெருகிக் கொண்டே வந்தன. ஆயினும் அதில் ஒரு பிளவு உண்டாயிற்று. பொது நன்மைக்கான தொண்டுகளைச் செய்யும் வகையில் வேற்றுமை உண்டாகிக் காங்கிரஸில் **மிதவாதி**களும், **அமிதவாதி**களும் தோன்றினர். இவர்கள் கொண்ட நோக்கம் ஒன்றுதான். இவர்கள் கையாளக் கருதிய முறைகள் தாம் வேறு. இவ்வாறு பொது ஜனங்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் உண்டாகி அவர்கள் கக்ஷிகளாகப் பிரிவது ஒரு சாதாரண சம்பவமே யாகும். அன்றியும், ஜனங்களுடைய ஒற்றுமையைப் போக்கி அவர்களுக்குள் வேற்றுமையை உண்டாக்கி எந்த வகைப் பொது நல இயக்கமும் நடைபெறாதபடி செய்துவருகின்ற மக்களும் இருப்பதனால் கக்ஷிகள் தோன்றி வேற்றுமைகள் பெருகுகின்றன.

இந்துக்கள் ஜனத்தொகையில் அதிகமாகவும், வேறு மதத்தினராய் இருப்பதனாலும் முஸ்லிம்கள் **முஸ்லிம் லீக்** என்ற ஒரு அமைப்பை உண்டாக்கிக் கொண்டு அதன் மூலமாக அரசாங்க உத்தியோகங்களிலும் மற்ற சட்ட சபைகளிலும் தாங்கள் விரும்பும் உரிமைகள் யாவை என்பதை வெளியிட்டு அவற்றைப் பெறுவதற்கான **முயற்சிகளைச்** செய்து வருகின்றனர்.

முஸ்லிம் லீக்

சென்னை மாகாணத்தில் பென்ட்லண்ட் பிரபு கவர்னராக இருந்தபோது **பெஸன்ட்** அம்மையார்

ஹோம்ரூல் இயக்கத்தைத் தொடங்கினர். அதை

பிற கட்சிகள் யெதிர்த்து ஒரு கக்ஷி தோன்றியது. அக் கக்ஷியினர் துரைத்தன உத்தியோகங்களைப் பெறுவதிலும் பொதுத் தேர்தல்களிலும் எல்லோரும் சமமாகக் கருதப்படாமல் ஜாதி வேற்றுமைகள் கொண்டாடப் படுகின்றன எனக் கருதி அவ்வேற்றுமைகளைப் போக்கி அனைவருக்கும் நியாயம் கிடைக்குமாறு தொண்டு செய்யும் நோக்கத்துடன் **ஜஸ்டிஸ்** கக்ஷியைத் தோற்றுவித்தனர். இவற்றைப் போன்று இன்னும் சில புதிய கக்ஷிகளும் தோன்றின. இவற்றின் நோக்கம் உரிமைகளைப் பெற்றுச் சுகமாகவும், சௌகரியமாகவும் வாழவேண்டு மென்பதே. இவை அவற்றைப் பெறக் கருதிக் கையாளும் முறைகளில் தான் வேறு படுகின்றன. சில கக்ஷிகள் தங்கள் சமூகத்திற் சேர்ந்தவர்களை முன்னேற்றுவிக்கவும் முயல்கின்றன. அதில் தவறொன்றுமில்லை. ஆனால் நாட்டுக் குடிகள் எல்லோரும் ஜாதி மத வேற்றுமைகளை முற்றும் மறந்து ஒரு மனப் பட்டு ஒரு கக்ஷியினராக உழைத்தால் நாடு நலம் பெறும், நாட்டுக் குடிகளும் முன்னேற்ற மடைவார்கள். ஜாதி மதவேற்றுமைகள் காரணமாக ஒற்றுமை குன்றி யிருப்பதனால் இந்தியர்கள் தாம் பெறவேண்டிய உரிமைகளைப் பெறாதிருக்கின்றனர்.

ஆங்கிலேய துரைத்தனத்தார் அவ்வப்பொழுது திருத்தங்களைச் செய்து குடிகளுக்குச் சில உரிமைகளைத் தந்துள்ளார்கள். இவை ஒவ்வொரு முறையும் குடிகளின் இயக்கத்தினால் ஏற்பட்டனவாகும். ஆனால் இவை குடிகள் விரும்பிய அளவில் கிடைக்கவில்லை.

துரைத்தனத்தார் தாராள மனமின்றிக் குடிகளுக்கு எப்போதும் மிகக் குறைவான உரிமைகளையே அளித்து வந்தனர். அரசியலில் முழு உரிமையும் கிட்ட வேண்டுமென்ற நோக்கம்தான் சட்ட மறுப்பு, ஒத்துழையாமை, சத்தியாக்கிரகம், அயல் நாட்டுச் சாமான் பஹிஷ்காரம் போன்ற இயக்கங்களுக்கெல்லாம் காரணமாம். நாட்டின் எல்லாக் கக்ஷியினரும் 1935-ம் வருஷத்திய அரசியற் சட்டத்தை வெறுத்துக் குறை கூறி வருகின்றனர்; சுய ஆட்சியை விரும்புகின்றனர். இக்கக்ஷிகள் ஒன்று சேர்ந்து ஒரு மனப்பட்டு ஒரே இயக்கமாக மாறி விடுமேயானால் இந்தியர் தம் உரிமைகளை எளிதில் பெறலாம். அப்பொழுது அவர்களைத் தடுக்க எவராலும் இயலாது. ஆகவே நன்மையையே நாடி உழைக்கும் இயக்கங்கள் பலவும் ஒன்று பட்டுத் தேசீய இயக்கம் ஒன்றுதல் வேண்டும்.

பயிற்சிகள்

1. மேனாட்டுக் கல்வியினாலும், அயல் நாட்டுப் பழக்கத்தினாலும் உண்டான விளைவு என்ன?

2. ஸ்தல ஸ்தாபனங்கள் தேசீய இயக்கத்தைப் பெருக்கியது எவ்வாறு?

3. நம் நாட்டு இயக்கம் எதை முதன்மையாகக் கொண்டு நடைபெறுகின்றது?

4. கக்ஷிகளிற் சிலவற்றைக் கூறுக. அவை தோன்றுவானேன்? அவை விரும்புவது என்ன?

5. தேசீய இயக்கங்கள் தாம் விரும்பும் பயனைப் பெறவேண்டுமானால் யாது செய்யவேண்டும்?

24. வட்டமேஜை மஹாநாடுகள்

மாண்ட்போர்டு சீர்திருத்தத்தினுல் இந்தியர்களுக்கு முன்னிலும் அதிகமான உரிமைகள் கிடைத்தன. ஆனுல் அவை குடிகள் வேண்டிய அளவு கொடுக்கப்படவில்லை. அதனுல், கிடைத்ததை ஏற்றுச் சிலர் பரிபாலனத்தை நடத்தினர்; மற்றையோர் அதை வெறுத்து ஒத்துழையாமையையும், சட்டமறுப்பையும் கைக்கொண்டனர். சட்டசபைகளேயும், நீதிமன்றங்களேயும், கல்லூரிகளேயும், பள்ளிக்கூடங்களேயுங்கூடக் குடிகள் பகிஷ்கரிக்க வேண்டுமென இவர்கள் உபதேசித்தனர். அயல்நாட்டுச் சரக்குகளே - அவற்றில் முக்கியமாக பிரிட்டிஷ் சரக்குகளே - ஜனங்கள் பஹிஷ்கரிக்க வேண்டுமென வாதாடினர். முன்பே தொடங்கப்பட்ட இவ்வியக்கம் வன்மையுற்றது. இவ்வாறெல்லாம் குடிகள் உண்டாக்கிய இடையூறுகளேத் துரைத்தனத்தார் பாராட்டாமலே, புதிய சட்டசபைகளுக்குப் பிரதிநிதிகளேத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் ஏற்பாடுகளேச் செய்துவந்தனர்.

சத்தியாக்கிரக இயக்கம்

மகாத்மா காந்தி

உண்மை, சாந்தம், தயை, சகிப்பு, சமத்வம், சகோதரத்வம் முதலிய நற்குணங்களும் ஒருங்கே அமையப்பெற்றுப் பன்னாட்டினராலும், பல ஜாதியினராலும், பல்வேறு மதத்தினராலும் வேற்றுமையின்றிப் போற்றப்படும் **மகாத்மா காந்தி** என்ற தேசாபிமானி சட்டமறுப்பை முன்னின்று நடத்தினார்; துரைத்தனத்தார் அவரைத் தண்டித்து ஆறு வருஷம் சிறைவாசத்துக் கனுப்பினர். ஆனால் அவர்கள் அவரை இரண்டு வருஷங்களானதும் விடுவித்தனர். அப்போது தேசிய சபையைச்சேர்ந்த சிலர் ஒத்துழையாமையை நீத்துப் பொதுஜனப் பிரதிநிதிகளாகத் தேர்தல் பெற்றுச் சட்டசபைகளுக்குச் சென்று யாவற்றையும் எதிர்த்துத் துரைத்தனம் செவ்வனே நடைபெறாதபடி செய்து வந்தனர்.

சுயராஜ்யக் கட்சி

1925-ம் வருஷம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியில் ஒரு பிரிவினரான சுயராஜ்யக் கட்சியார் ஏராளமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுச் சட்ட சபைகளில் மெம்பர்களானார்கள். வங்காளத்திலும், மத்திய மாகாணங்களிலும், சென்னையிலும் சுயராஜ்யக் கட்சியிற் சேர்ந்த பிரதிநிதிகள் மற்றைய கட்சியினரினும் அதிகமாக இருந்ததனால், அம்மாகாணங்களின் கவர்னர்கள் அவர்கள் மந்திரிகளாகித் துரைத்தனத்தை நடத்தவேண்டுமென விரும்பினர். அவர்கள் பரிபாலனத்தை நடத்த மறுத்து எதிர்ப்புக் கட்சியினராகி துரைத்தனத்தாருக்குத் தொல்லைகளைச் செய்தனர். ஆனால் அப்போது குடிகளுக்கும் ஒரு புதிய துன்பம்

டனர். கழகத்தினர் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாது தங்கள் விசாரணையை ஒருவாறு முடித்துக் கொண்டு தம் நாடு திரும்பிச் சென்றனர். அங்கே அவர்கள் தங்கள் சிபார்சுகளைக் கி. பி. 1930-ல் வெளியிட்டனர்.

வட்டமேஜை மஹாநாடுகள்

அதை ஆலோசித்துப் பார்லிமென்டுக்குச் சிபார்சுகள் செய்வதற்கு லண்டனில் மூன்று **வட்டமேஜை மஹாநாடுகள்** கூடின. அவற்றிற்கு பிரிட்டிஷ் அரசியல் கக்ஷிகளிலிருந்தும், இந்திய அரசர்களிலிருந்தும், பிரிட்டிஷ் இந்தியா குடிகளிலிருந்தும், பர்மாவிலிருந்தும் பிரதிநிதிகள் வரவழைக்கப்பட்டனர். ஆனால் காங்கிரஸ் கக்ஷியினர் அம் மஹாநாட்டையும் பஹிஷ்காரம் செய்தனர். அன்றியும் அவர்கள் காந்திப் பெரியாரின் தலைமையில் திரும்பவும் ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடங்கினர். குடிகள் வரி செலுத்த மறுத்தனர். சட்டத்தை மீறி உப்பு உற்பத்தி செய்தனர். பிரிட்டிஷ் சாமான்களைப் பஹிஷ்கரித்தனர். அப்போது காந்திஜி உள்பட 70,000 பேர்கள் சிறையிலடைக்கப்பட்டனர். காந்திஜியின் உபதேசத்திற் கிணங்கிச் சிலர் சத்தியாக்கிரக முறையையும், அஹிம்ஸையையும் கடைப்பிடித்து நடந்தபோதிலும், சிலர் நெறி தவறிக் கொடுமைகள் செய்ததனால் துரைத்தனத்தார் பல அடக்குமுறைச் சட்டங்களைப் பிறப்பித்து அமுலுக்குக் கொண்டுவந்தனர்.

அடக்கு முறைகளினால் அமைதி ஏற்படாததைக் கண்ட லார்ட் இர்வின் மகாத்மாவை விடுதலை செய்து தம்மிடம் வரவழைத்து அவரோடு சமாதானம் செய்து

ஏற்பட்டது. அதுவே இந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் உண்டான வேற்றுமையாம்.

கி. பி. 1926-ல் **லார்ட் இர்வின்** என்பவர் வைஸிராயாக நியமிக்கப்பட்டார். அவருக்கு இந்தியர்களிடம் அன்பும் அனுதாபமும் உண்டு.

ஸைமன் கமிஷன்

குடிகளின் கோபத்தைத் தணித்து நாட்டில் அமைதியை உண்டாக்குவதற்கு அவர்களுக்கு இன்னும் அதிகமான உரிமைகளைத் தருவதுதான் சிறந்த வழி என்பதையுணர்ந்த ஆங்கிலேய பார்லிமெண்ட் சபையோர் மாண்ட்போர்டு சட்டத்தையொட்டி அரசியல் நடைபெற்றுவரும் வகையை விசாரித்தும், இன்னும் அதிகமான உரிமைகளை எம்மட்டில் கொடுக்கலாம் என்பதைக் கண்டறிந்தும் தங்களுக்கு ஆலோசனைகள் கூறக் கருதிக் கி. பி. 1927-ல் ஓர் அரசர் ஆணைக் கழகத்தை (Royal Commission) நியமித்து இந்தியாவுக்கு அனுப்பினர். அதற்கு **ஸர் ஜான் ஸைமன்** என்ற சட்ட நிபுணர் தலைவராக நியமிக்கப்பட்டதனுல், அக்கழகம் **ஸைமன் கமிஷன்** என வழங்கப்பட்டது.

அக்கழகத்தில் இந்தியர்கள் நியமிக்கப்படாததினுல் நம்மவர்களிற் பெரும்பாலார் அதை வெறுத்துப் பஹிஷ்கரித்தனர். இந்தியரில்லாத அக்கழகம் இந்தியருடைய உரிமைகளை வரையறுத்துக் கூறத் தகுதியற்றதாகும் எனக் கூறினர் நம் நாட்டினரிற் பலர்.

ஸைமன் கமிஷன் சுற்றுப் பிரயாணஞ் செய்து பொதுஜன நோக்கத்தைக் கண்டறிய முயன்றது. ஆனுல், நம் நாட்டுப் பல பெரியார்கள் அதன் முன் சென்று தங்கள் அபிப்பிராயங்களைக் கூற மறுத்துவிட்

கொண்டார். காந்தியடிகள் ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தினர். வைஸிராய் அடக்குமுறைச் சட்டங்களை ரத்து செய்தார்.

காந்தி - இர்வின் ஒப்பந்தம்

இதற்குதான் **காந்தி - இர்வின்** ஒப்பந்தம் என்று பெயர். இந்தியர்களுக்குப் பெரு மகிழ்ச்சியை அளித்த இவ்வொப்பந்தம் நடந்த சிறிது காலத்திற்குள்ளேயே லார்ட் இர்வின் தமது வேலையை நீத்து இங்கிலாந்திற்குச் சென்றார். இவருக்குப் பிறகு பம்பாய், சென்னை மாகாணங்களில் கவர்னராக வேலை பார்த்திருந்த **வில்லிங்டன் பிரபு** வைஸிராயாக நியமிக்கப்பட்டார்.

காந்திஜி இரண்டாம் வட்டமேஜை மஹாநாட்டுக்குக் காங்கிரஸின் ஏகப்பிரதிநிதியாகச் சென்று இந்திய குடிகளின் நோக்கத்தைத் தெளிவாக எடுத்துரைத்தார். பின்னர் மூன்றாவது வட்டமேஜை மஹாநாடும் கூடிற்று. இம்மூன்று மஹாநாடுகளிலும் பிரதிநிதிகள் பன்முறை கூட்டங் கூடி விவாதித்தும், தெரிந்தவர்களை விசாரித்தும் ஒரு முடிவுக்கு வந்தனர்.

'வட்டமேஜை' என்ற பெயர்க் காரணம்

இப்பிரதிநிதிகளின் மஹாநாட்டை (கூட்டத்தை) வட்டமேஜை மஹாநாடு என்பானேன்? ஆங்கிலேய வழக்கப்படி சதுர்ப்புஜை அல்லது நீண்ட சதுர மேஜைக்குத் தலைப்புறம் கடைப்புறம் என்ற வேற்றுமைகள் உண்டு. அந்தஸ்தும் பெருமையும் உள்ள உயர்ந்தோர் அதன் தலைப்பிலும், தாழ்ந்தவர் அதன் கீழ்ப்புறத்திலும் உட்காருவார்கள். மேஜைக்கருகில் உட்காருகிறவர்களுக்குள் ஏற்றத் தாழ்வுகள் உண்டு. ஆனால் வட்டமேஜைக்கு இந்த வித்தியாசமில்லை.

அதைச் சுற்றி உட்காருகின்றவர்களுக்குள் உயர்வு தாழ்வு என்ற வேற்றுமைகள் இல்லை. அனைவரும் சமமான அந்தஸ்துடையவராவர். இம்மூன்று மஹாநாடுகளுக்கும் வரவழைக்கப்பட்ட பிரதிநிதிகள் சமமான அந்தஸ்துடையவர்கள், அவர்களுக்குள் யாதொரு வித்தியாசமும் இல்லை என்பதையுணர்த்த அவைகள் **வட்டமேஜை** மஹாநாடுகள் எனப்பட்டன.

வட்டமேஜை மஹாநாட்டின் முடிவுகளைக் கொண்ட **வெள்ளைக் காகிதம்** (White Paper) கி. பி. 1933-ல் பிறப்பிக்கப்பட்டது. அதில் புதிய பரிபாலனச் சட்டம் எவ்வாறு அமைய வேண்டுமென்பது விவரிக்கப் பட்டிருந்தது. அந்த வெள்ளைக் காகிதத்தைத் திரும்பவும் ஆலோசித்துப் பார்லிமெண்டுக்குச் சிபார்சுகள் செய்ய ஒரு **கூட்டுப் பார்லிமெண்ட் சபை** நியமிக்கப்பட்டது. அச்சபையார் வெள்ளைக் காகிதத்திலடங்கியிருந்த விஷயங்களைப் பரிசோதனை செய்து தங்களுடைய சிபார்சுகளைப் பார்லிமெண்டுக்கு அனுப்பினர். அதையொட்டிப் பார்லிமெண்ட் கி. பி. 1935-ல் ஒரு புதிய இந்திய அரசியல் சட்டத்தைப் பிறப்பித்தது. அது 1937-ம் வருஷம் ஏப்ரல் மாதம் மாகாணங்களில் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

கூட்டு பார்லிமெண்டு சபை

அச் சட்டத்திலடங்கிய மத்திய துரைத்தன ஏற்பாடுகள் இன்றும் செய்யப்படவில்லை. இந்தியர் சமஷ்டி அமைப்பை வெறுத்துக் குறை கூறுகின்றனர். இவ்வாறான நிலைமையில் இப்போது நடைபெறும் மகா யுத்தம் மூண்டு விட்டதனால் அரசியல் சம்

சமஷ்டி அரசியல் அமுலுக்கு வராத காரணம்

பந்தமான வேலைகள் தடைப்பட்டுப்போயின. மாகாண துரைத்தன ஏற்பாட்டிலும் கோளாறு உண்டாகிவிட்டது. மாகாண பரிபாலனத்தை நடத்திவந்த காங்கிரஸ் கக்ஷியினர் துரைத்தனத்தாரோடு மன வேறுபாட்டையடைந்து தங்கள் வேலைகளினின்றும் விலகிக் கொண்டு விட்டதனுல், அந்த மாகாணங்களின் கவர்னர்கள், "ஆலோசனையாளர்" களைத் துணைக்கொண்டு பரிபாலனத்தைச் செய்து வருகின்றனர். யுத்தம் முடிந்து அமைதி ஏற்படும் வரை அரசியல் விஷயங்களைத் துரைத்தனத்தார் கவனிக்க முடியாதல்லவா? இந்த அகோர யுத்தம் சீக்கிரம் முடிந்து அமைதி உண்டாகவேண்டுமெனக் கடவுளருளை நாடுவோமாக!

பயிற்சிகள்

1. சைமன் கமிஷன் என்பது என்ன? அதன் அமைப்பு எவ்வாருனது? அதை இந்தியர்கள் வெறுப்பானேன்?

2. வட்டமேஜை மஹாநாடுகள் கூட்டப்பட்ட காரணமென்ன? அவற்றின் அமைப்பு எவ்வாருனது? அம் மஹாநாடுகள் செய்தன யாவை?

3. வெள்ளைக் காகிதம் என்பது என்ன? அதை ஆலோசித்துப் பார்லிமென்டுக்குச் சிபார்சுகள் செய்ய என்ன ஏற்பாடு செய்யப்பட்டது?

25. 1935-ம் வருஷத்திய அரசியல் சட்டம்

முன் அத்தியாயத்தில் கூறப்பட்ட கி. பி. 1935-ம் வருஷத்திய இந்திய அரசியல் சட்டம் கி. பி. 1937-ல் அமுலுக்கு வந்தது. இச் சட்டத்தினுல் பழைய துரைத்தன அமைப்புக்கள் மிகுந்த மாறுபாட்டை அடைந்தன.

சமஷ்டி அரசியல் அமைப்புகள்

இது இந்தியா முழுவதற்கும் ஒரு சமஷ்டி துரைத்தன அமைப்பு ஏற்படுவதற்கான நிபந்தனையைக் கொண்டுள்ளது. ஆங்கிலேய அதிகாரத்திலடங்கிய பிரிட்டிஷ் இந்திய நாடுகளும் சமஷ்டியில் சேர உடன்படும் இந்திய அரசர்களது ராஜ்யமும் அச் சமஷ்டி துரைத்தனத்திலடங்கும். ஆனுல் சமஷ்டி துரைத்தன அமைப்பு உண்டாக்கப்படுவதற்குள் இப்போது நடைபெற்று வரும் உலக யுத்தம் தொடங்கிவிட்டது. அதனுலும், நம் நாட்டினர் அதைச் சிறிதும் விரும்பாததனுலும் சமஷ்டி துரைத்தன ஏற்பாடுகள் தடைப்பட்டுள்ளன. சமஷ்டி யமைப்பில் சேர்ந்துகொள்ளும் இந்திய மன்னர்கள் தாங்கள் இப்போது செலுத்திவரும் அதிகாரத்தின் ஒரு பகுதியை சமஷ்டிக்கு ஒப்படைக்கவேண்டும். அவற்றை சமஷ்டி துரைத்தனம் நடத்திப் பரிபாலனம் செய்யும். சமஷ்டி அரசியல் என்பது, வைஸிராயும், சமஷ்டி சபையும் (Federal Assembly), சமஷ்டி நியாயஸ்தலமும் கொண்டுள்ளது. ராஜப் பிரதிநிதியான வைஸிராய், கவர்னர் ஜெனரல் என்ற ஹோதாவில் சில பொறுப்புக்களையும், வைஸிராய் என்ற ஹோதாவில் சில பொறுப்புக்களையும் நிறைவேற்றுவார்.


ஆங்கிலேய ஆதரவுபெற்ற நாடுகள்
காஷ்மீரம்
ஸ்ரீ நகர்
பெஷாவர்
வ. மே. எ. மா.
பஞ்சாப்
லாகூர்
க்வெட்டா
பலுசிஸ்தானம்
பஹவல்பூர்
டில்லி
ராஜபுதனம்
அஜ்மீர்
ஆக்ரா
ஐக்கிய மாகாணங்கள்
நேபாளம்
காட்மாண்டு
லக்னௌ
அலஹாபாத்
சிக்கிம்
பூடான்
பிரமபுத்திரா நதி
அஸ்ஸாம்
ஸிந்து
கராச்சி
பாட்னா
பீஹார்
வங்காளம்
டாக்கா
கல்கத்தா
ஆமதாபாத்
இந்தோர்
ஜபல்பூர்
நடு மாகாணங்கள்
நாக்பூர்
பேரார்
நிஜாம் ராஜ்யம்
ஹைதராபாத்
பம்பாய்
கோல்ஹாபூர்
கோவா
மைசூர்
சென்னைப்பட்டினம்
கொச்சி
மதுரை
அரபிக் கடல்
வங்காளக் குடாக்கடல்
மைல்கள்
0 100 200 300 400 500

தற்கால இந்தியா

சமஷ்டி துரைத்தனத்தில் பிரிட்டிஷ் இந்தியாவில் அடங்கிய சென்னை, பம்பாய், மத்திய மாகாணங்கள், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், வங்காளம், பீஹார், ஐக்கிய மாகாணங்கள், பஞ்சாம், ஸிந்து நாடு, எல்லைப்புற மாகாணங்கள் ஆகிய பதினொரு மாகாணங்களும், அதில் சேர உடன்படும் இந்திய அரசர்களின் ராஜ்யங்களும் குடகு, டில்லி, அஜ்மீர்-மேர்வாரா, பிரிட்டிஷ் பலுசிஸ்தானம், அந்தமான் நிக்கோபர் தீவுகள் ஆகியவையும் அடங்கும். பிரிட்டிஷ் பலுசிஸ்தானத்தின் பரிபாலனத்தைக் கவர்னர் ஜெனரல் தாமே நேரில் செய்வார். சமஷ்டி சட்ட சபை நாட்டின் வரவு செலவைக் குறித்துச் சர்ச்சை செய்யலாம். ஆனால் **வோட்** செய்யக் கூடாது. மதசம்பந்தமான விஷயங்களையும் அயல் நாடுகளோடு நடைபெற வேண்டிய விவகாரங்களையும், தேசப் பாதுகாப்பையுங்கூடக் கவர்னர் ஜெனரல் தாமே நேரில் கவனிப்பார். இவற்றைப் பரிபாலிப்பதில் அவருக்கு ஆலோசனை உரைக்க மூன்று பெயர்களுக்கு மேற்படாத உத்தியோகஸ்தர்களை நியமித்துக் கொள்ளலாம். சமஷ்டியிலடங்கிய விஷயங்களை ஒரு மந்திரி சபை பரிபாலிக்கும். சமஷ்டி சபைகளுக்கு எந்தக் கக்ஷியினர் பெரும்பான்மையோராக தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளனரோ, அக் கக்ஷியினின்றும் கவர்னர் ஜெனரல் மந்திரிகளை நியமனஞ் செய்வர். சமஷ்டி துரைத்தனம் மந்திரி சபையின் ஆலோசனைகளைக் கொண்டே நடைபெறும். ஆயினும், அவர்கள் கூறும் ஆலோசனைகள் கவர்னர் ஜெனரலின் பொறுப்பிலடங்கிய விஷயத்தைப்பரிபாலிப்பதற்கு முரணாக இருக்குமானல், அவர் அவர்களைமீறி நடக்கலாம்.

மந்திரிகள்சபை கூடுவதைக் குறித்தும், அவர்கள் ஆலோசனைகள் செய்யவேண்டியதைக் குறித்தும், அவர்கள் தமக்கு அறிவிக்கவேண்டிய விஷயங்களைக் குறித்தும் கவர்னர் ஜெனரல் விதிகளை ஏற்படுத்துவார். வைஸிராய்க்கும், சமஷ்டி துரைத்தனத்துக்கும் ஆலோசனைகள் உரைக்க ஒரு பொருளாதார நிபுணரைக் கவர்னர் ஜெனரல் மந்திரிகளைக் கலந்து நியமிக்கலாம்.

சமஷ்டி சட்ட சபைகள்

சமஷ்டி விவகாரங்களைப் பரிபாலனம் செய்வதற்கு **ஹௌஸ் அவ் அஸெம்ப்ளி, கௌன்ஸில் அவ் ஸ்டேட்** என்ற இரண்டு சபைகள் அமைக்கப்படும். இச்சபைகளைக் கூட்டவும், கலைக்கவும், தள்ளிவைக்கவும் கவர்னர் ஜெனரல் அதிகாரம் பெற்றிருக்கிறார். கௌன்ஸில் அவ் ஸ்டேட் ஏழு வருடங்களும் அஸெம்ப்ளி ஐந்து வருடங்களும் வேலை பார்த்து வரலாம். அதன் பிறகு புதிய சபைகள் நியமிக்கப் படவேண்டும். அஸெம்ப்ளி சபையில் **375** பெயர்களுக்கு மேற்படாத அங்கத்தினர்கள் இருப்பர். அவர்களுள் **250** பெயர்கள் பிரிட்டிஷ் இந்தியாவிலடங்கிய பதினொரு மாகாணங்களின் குடிகளாலும், டில்லி, அஜ்மீர், குடகு, பிரிட்டிஷ்பலுசிஸ்தானம், ஆகிய நாடுகளின் பிரஜைகளிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்படுவர். **125** பெயர்களைச் சமஷ்டியில் சேர்ந்துள்ள சுதேச மன்னர்கள் நியமித்தனுப்புவார்கள். சுதேச மன்னர்கள் நியமித்தனுப்பும் அங்கத்தினரின் எண்ணிக்கை அவரவர்களுடைய பெருமையையும், ராஜ்யத்தின் விஸ்தீரணத்தையும், ஜனத்தொகையையும் பொறுத்திருக்

கும். பிரிட்டிஷ் இந்தியப் பிரதிநிதிகளின் தொகையும் மாகாணங்களின் ஜனத் தொகைக்குத் தக்கதா யிருக்கும்.

கௌன்ஸில் அவ் ஸ்டேட் சபையில் வைஸி ராயின் கௌன்சிலர்களையன்றி 260 பெயர்களுக்கு மேற்படாத அங்கத்தினர் இருப்பர். அவர்களுள் 150 பெயர்கள் பதினொரு பிரிட்டிஷ் மாகாணங்களின் பிரதிநிதிகளும், 100 பெயர்கள் இந்திய மன்னர்க ளனுப்பும் பிரதிநிதிகளும் ஆவர். 10 பெயர்களுக்கு மேற்படாத அங்கத்தினர்கள் கவர்னர் ஜெனரலினால் நியமிக்கப்படுவார்கள். கவர்னர் ஜெனரலின் அனும தியைப்பெற்று சட்டசபைகள் பிறப்பிக்கும் சட்டங் கள் அமுலுக்கு வரும். தமது தனிப் பொறுப்பி லடங்கிய விஷயங்களைப் பரிபாலிப்பதில் கவர்னர் ஜெனரல் அவசியமென எண்ணும் சட்டங்களை எவரை யும் கலவாமல் ஆறு மாதங்கள் வரை செல்லும்படி செய்துகொள்ளலாம்.

மாகாண துரைத்தனம்

மாகாண கவர்னர்கள் சொந்தப் பொறுப்பி லடங்கிய விஷயங்களை அவர்கள் தாங்களே கவனிப் பார்கள். மற்றைய விஷயங்களைப் பரி பாலிக்க மாகாணங்கள்தோறும் மந்திரி சபைகள் அமைக்கப்பெறும். எந்தக் கக்ஷியிலிருந்து அதிகமான அங்கத்தினர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டுப் பிரதிநிதிகளாக வந்துள்ளாரோ, அந்தக் கக்ஷியிலிருந்து மந்திரிகள் நியமிக்கப்படுவார் கள். மாகாணங்களின் பரப்புக்கும், ஜனத்தொகைக்கும், செல்வாதாரத்துக்கும் தக்கபடி சட்டசபைகள் சிலவற் றில் ஒன்றாகவும், சிலவற்றில் இரண்டாகவும் இருக்கும்.

சென்னை மாகாணத்தில் **லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளி, லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்** என்ற இரண்டு சட்டசபைகள் உண்டு. அஸெம்ப்ளியில் 215 அங்கத்தினர்கள் இருப்பர். அவர்களுள் 152 பெயர்கள் பொதுஜனங்களாலும், 63 பெயர்கள் ஜாதி, மதம் தொழில் வகுப்பினராலும் தேர்ந்தெடுக்கப் படுவர். முந்திய 152 பெயர்களுள் ஸ்திரீகள் 6 பெயர் களும், தாழ்ந்த வகுப்பினர் 30 பெயர்களும் சேருவர். பிந்திய 63 மெம்பர்களுள் ஐரோப்பியர், ஆங்கிலோ-இந்தியர், முகம்மதியர், கிறிஸ்தவர், நிலச்சுவான்தார் கள், வர்த்தகர்கள், தொழிலாளர் முதலியவர்களின் பிரதிநிதிகள் கீழே காட்டியுள்ள விவரப்படி அமர் வார்கள்.

சென்னை மாகாண சட்டசபைகள்

	வாக்காளர்கள்	பிரதிநிதிகள் தொகை
1.	முகம்மதியர்	29
2.	இந்திய கிறிஸ்தவர்	9
3.	நிலச்சுவான்தார்கள்	6
4.	வர்த்தகர்கள்	6
5.	தொழிலாளர்கள்	6
6.	ஐரோப்பியர்	3
7.	ஆங்கிலோ-இந்தியர்	2
8.	பிற்போக்கான நாட்டினர்	1
9.	பல்கலைக் கழகம்	1
		63

லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் 56 அங்கத்தினர்கள் உண்டு. அவர்களுள் சிலர் மாகாண கவர்னரால் நியமிக்கப்படுவார்கள்.

வாக்காளரின் யோக்கியதைகள் அமையவேண்டியவற்றைக் குறித்துத் திருத்தமான சட்டங்கள் உண்டாக்கப்பட்டுள்ளன. வாக்காளரின் தொகை முன்பு 50 லக்ஷம்; இப்போது $3\frac{1}{2}$ கோடி. இவர்களுள் 70 லக்ஷம் பெயர்கள் ஸ்திரீகள்.

மாகாண சுயஆட்சி

புதுச்சட்டத்தினுல் மாகாணங்களுக்குச் சுயஆட்சி கொடுக்கப்பட்டுள்ளது. மந்திரிகள் சட்ட சபைகளைக் கொண்டு நிறைவேற்றிக் கொள்ளக் கூடிய காரியங்கள் பலவுள்ளன. ஆனுல் கவர்னர் ஆமோதித்தாலன்றி எந்தச் சட்டமும் அமுலுக்கு வரமுடியாது. சுயஆட்சிக்கு இது பெரிய இடையூருகும். ஆதலினுலேதான் இதை வெறுக்கின்றனர் நமது குடிகள்.

சென்னை மாகாணத்திலும், இன்னும் சிலவற்றிலுங் கூடக் காங்கிரஸ் கக்ஷியினர் மந்திரிகளாகி மாகாண பரிபாலனத்தை நடத்தினுர்கள். இவர்கள் புதிய வரிகளை விதித்தனர்; பழைய வரிகளைக் குறைத்தும், தள்ளியும் உதவினர்; மத சம்பந்தமான சட்டங்களைச் செய்தனர். இவற்றைச் செய்ததினின்றும் அவர்களுக்கு உண்டான அதிக உரிமை வெளியாகின்றது. காங்கிரஸ் மந்திரிகளுக்கும் ஆங்கிலேய அதிகாரிகளுக்கும் தகராறு ஏற்பட்டதால், மாகாண பரிபாலனத்திலிருந்து இவர்கள் விலகிவிட்டார்கள். தற்போது

இவர்கள் பரிபாலித்து வந்த மாகாணங்களின் கவர்னர்கள் "ஆலோசனையாளர்"களைக்கொண்டு துரைத்தனத்தைச் செய்கின்றனர்.

சமஷ்டி சம்பந்தமான அமைப்புக்களில் உயர் நீதி மன்றம் மட்டில் ஏற்பட்டுவிட்டது. அதற்கு மூன்று நீதிபதிகள் நியமிக்கப்பட்டுள்ளார்கள். இம்மன்றம் சட்டத்தில் உண்டாகும் சந்தேகங்களை விளக்கும். இதற்கு ஹைகோர்ட்டுகளிலிருந்தும் அப்பீல்கள் செய்து கொள்ளலாம். இப்பொழுது நடைபெறும் யுத்தத்தினால் அரசியல் சம்பந்தமான மாறுதல்கள் யாவும் செய்யப்படவில்லை. கடவுளருளால் யுத்தம் விரைவிலும், வெற்றிகரமாகவும் முடிந்ததும், நாட்டின் முன்னேற்றத்திற்கான திருத்தங்கள் பலவும் செய்யப்படுமென்பதிற் சிறிதும் ஐயமில்லை. நாம் துரைத்தனத்தாரோடு ஒத்துழைத்து வெற்றிபெற்று நமது உரிமைகளைப் பெறவேண்டும்.

சமஷ்டி நீதி மன்றம்

நம் நாட்டின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்காக **ரிசர்வ் பாங்க்** ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு கரன்ஸி நோட்டுகள் அச்சடிக்கும் உரிமை உண்டு. நம் நாட்டின் தொழில் அபிவிருத்தியையும், வரவு செலவுகளையும் கவனிப்பது இதன் முக்கிய கடமையாகும். இதன் கிளைகள் நம் நாட்டில் சில இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

ரிசர்வ் பாங்க்



லார்ட் லின்லித்கோ

லார்ட் வேவல்

லின்லித்கோ - வேவல்

லார்ட் வெல்லிங்டனுக்குப் பிறகு **லார்ட் லின் லித்கோ** என்பவர் வைஸிராய் ஆனார். லின்லித்கோ தம் பரிபாலனத்தில் விவசாயத்துக்குச் சிறந்த ஆதாரமான கால்நடைகளைப் பெருக்கவும், அவைகளைச் செவ்வனே விருத்தி செய்யவும் கருதி, அவ்விஷயத்தில் ஈடுபட்டிருந்தார். இவருக்குப் பின்னர் **லார்ட் வேவல்** என்பவர் 1943-ம் வருஷம் வைஸிராயாக வந்திருக்கிறார்.

ஆறும் ஜார்ஜ் மன்னர்

1935-ல் வெள்ளி விழா (Silver Jubilee) நடத்திய ஐந்தாம் ஜார்ஜ் மன்னர் 1936-ம் வருஷம் இறந்து போகவே அவருடைய மூத்த மைந்தரான **எட்டாம் எட்வர்டு** பட்டத்திற்கு வந்தார். இவர் சிறிது காலத்திற்குள்ளேயே பதவியை ராஜீனமாச் செய்துவிட்டார். ஆகை

யினால் இவருடைய இளைய சகோதரரான ஆரும் ஜார்ஜ் பட்டத்துக்கு வந்து நம்மை ஆண்டு வருகிறார்.

ஆரும் ஜார்ஜ் சக்கரவர்த்தியார்

இவர் தமது குடிமக்களின்மீது பேரன்பு கொண்டு நன்மைகள் செய்யவேண்டுமென்ற ஆசை கொண்டுள்ளார். இவர் தீர்க்காயுளுடன் நம்மை ஆட்சி புரிந்து நமக்கு நன்மை புரியுமாறு, எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

பயிற்சிகள்

1. சமஷ்டி துரைத்தனத்தின் அமைப்பை விவரித்துக் கூறுக.

2. பதினொரு பிரிட்டிஷ் மாகாணங்கள் எவை? இவை சமஷ்டி சட்டசபைகளுக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பக்கூடிய பிரதிநிதிகளின் தொகை யாது?

3. சென்னை மாகாணத்து அஸெம்ப்ளியில் எத்தனை அங்கத்தினர்கள் உண்டு? அவர்களைத் தேர்ந்தெடுக்கும் வாக்காளர்கள் யாவர்? ஜாதி, மத, தொழில் வேற்றுமைப்படி தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் தொகை என்ன?

4. மாகாண பரிபாலனத்தில் அதிகமான உரிமைகள் கிடைத்துள்ளன என்பதை எடுத்துக் காட்டுக. அவ்வாறிருந்தும் குடிகள் மாகாண துரைத்தன அமைப்பைக்கூட வெறுப்பது ஏன்?

5. கவர்னர்களும், கவர்னர் ஜெனரலும் தங்கள் தனிப்பொறுப்பில் அடங்கிய விஷயங்களை எவ்வாறு பரிபாலிக்கலாம்? இவர்களுக்குள்ள அதிகாரங்கள் யாவை?

அனுபந்தம்

i. இந்திய கவர்னர் ஜெனரல்கள் அதிகாரத்தை ஏற்ற வருஷம்

		கி. பி.
1.	வாரன் ஹேஸ்டிங்ஸ்	1774
2.	ஸர் ஜான் மெக்பர்ஸன்	1785
3.	லார்ட் காரன்வாலிஸ்	1786
4.	ஸர் ஜான் ஷோர்	1793
5.	லார்ட் வெல்லெஸ்லி	1798
6.	லார்ட் காரன்வாலிஸ்	1805
7.	ஸர் ஜார்ஜ் பார்லோ	1805
8.	லார்ட் மின்டோ I	1807
9.	லார்ட் ஹேஸ்டிங்ஸ்	1813
10.	லார்ட் அம்ஹெர்ஸ்ட்	1823
11.	லார்ட் வில்லியம் பென்டிங்க்	1828
12.	ஸர் சார்ல்ஸ் மெட்கால்ப்	1835
13.	லார்ட் ஆக்லண்ட்	1836
14.	லார்ட் எல்லென்பரோ	1842
15.	லார்ட் ஹார்டிஞ்ச் I	1844
16.	லார்ட் டல்ஹௌஸி	1848
17.	லார்ட் கானிங்க்	1856

ii. இந்திய வைஸிராய்கள்

		கி. பி.
1.	லார்ட் கானிங்க்	1858
2.	லார்ட் எல்ஜின் I	1862
3.	லார்ட் ஜான் லாரென்ஸ்	1864

		கி.பி.
4.	லார்ட் மேயோ	1869
5.	லார்ட் நார்த்ப்ரூக்	1872
6.	லார்ட் லிட்டன்	1876
7.	லார்ட் ரிப்பன்	1880
8.	லார்ட் டப்ரின்	1884
9.	லார்ட் லான்ஸ்டௌன்	1888
10.	லார்ட் எல்ஜின் II	1894
11.	லார்ட் கர்ஸன்	1899
12.	லார்ட் மின்டோ II	1905
13.	லார்ட் ஹார்டிஞ்ச் II	1910
14.	லார்ட் செம்ஸ்போர்டு	1916
15.	லார்ட் ரெடிங்	1921
16.	லார்ட் இர்வின்	1926
17.	லார்ட் வில்லிங்டன்	1931
18.	லார்ட் லின்லித்கோ	1936
19.	லார்ட் வேவல்	1943

2720